
# மோகனப் புன்னகை





## நூறு குறள்களும் நூறு கதைகளும்

05.01.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும்
இல: 45,வில்சன்வீதி திருவையாற்றை வாழ்விடமாகவும் கொண்ட
கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்தி உரிமையாளர்
கோவிந்தன் அவர்களின் மகன்

அமரர்

# கோவிந்தன் மோகனதாஸ்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த
31ஆம் நாள்
நினைவு மலர்
05.01.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகும் கண்ணீரால் உங்கள் பாதங்களுக்கு
பாசங்கள் உதிரும் காணிக்கை வேதங்கள்

கண்ணிலே நாம்
கண்ட தெய்வம்
மண்ணில் நாம் வாழ உயிர் தந்த
தகப்பன் சாமி
பிறர் வாழ ஈகையை உவந்தளித்த உத்தமன்
சுயநலமின்றி வாழ்ந்த தத்துவன்
ஆசைகளற்று வாழ்வியலில்
நிறைவு கண்ட பெரு மகன்
இறைவனடி சேர்ந்தார்
உங்கள் நாமமும் எந்நாளும் உங்கள் ஞாபகமும்
கண்களிலே நாம் சுமக்கும் காவியம்
விழிகள் தோறும் நீங்கள்தானே நாம் தேடும் ஓவியம்
நெஞ்சத்தொட்டிலில் ஆராட்டுகிறோம்
ஆத்மாவின் அமைதியுடன் தூங்குங்கள்

ஓம் சாந்தி ஓம் சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
25
12
1949

விண்ணில்
06
12
2020

அமரர்

# கோவிந்தன் மோகனதாஸ்

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த
## திதி நிர்ணய வெண்பா

விகாரி வருடம் கார்த்திகைத் திங்கள்
பூரண வாழ்வு கொண்ட நல் மகனார் மோகனதாஸ்
சீரென கனகாம்பிகைம்பிகைத்தாயின் பாதம் சேர்ந்த
ஆரென அபர பட்ச சஸ்டி திதி நாளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே

## திருவாசகம்

நானேயோ தவம்செய்தேன்சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பேல்

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகனங்கி
யிரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

நீரிழிவு குட்ட மீளை வாதமொடு பித்த மூல
நீள்குளிர் வெதுப்பு வேறு ...... முளநோய்கள்
நேருறு புழுக்கள் கூடு நான்முக னெடுத்த வீடு
நீடிய விரத்த மூளை ...... தசைதோல்சீ
பாரிய நவத்து வார நாறுமு மலத்தி லாறு
பாய்பிணி யியற்று பாவை ...... நரிநாய்பேய்
பாறோடு கழுக்கள் கூகை தாமிவை புசிப்ப தான
பாழுட லெடுத்து வீணி ...... லுழல்வேனோ
நாரணி யறத்தி னாரி ஆறுச மயத்தி பூத
நாயக ரிடத்து காமி ...... மகமாயி
நாடக நடத்தி கோல நீலவ ருணத்தி வேத
நாயகி யுமைச்சி நீலி ...... திரிசூலி
வாரணி முலைச்சி ஞான பூரணி கலைச்சி நாக
வாணுத லளித்த வீர ...... மயிலோனே
மாடம தில்முத்து மேடை கோபுர மணத்த சோலை
வாகுள குறட்டி மேவு ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுத் தடத்தில்

ஈழமணித் திருநாட்டின் கிளிநொச்சியில்
பசுமை நல்லாயிருக்கும்.
வயல் எல்லாம் நெல்லாயிருக்கும்.
பசி போகும் எல்லாருக்கும்.
மேகம் சொரிய நிறையும் இரணைமடு வாவி.
சோகம் தீர்க்க அருள் புரிவாள் கனகாம்பிகைத் தேவி.
தாகம் தீர்த்து தனம்தரும் விவசாய பூமி.
திருவையாறு எங்களுக்கு வாழ்வு தந்த சாமி.
தாயக வரைபடத்தில் தனியிடம்
கோவிந்தன் கடைச் சந்தி
**விலாசத்தில் வாழ்வது வழமை.**
**விலாசமாய் வாழ்வது வரலாறு.**
முதலாவதாய் அங்கு ஒரேஒரு தேநீர்க் கடை இருந்தது முந்தி – அதன்
உரிமையாளர் கோவிந்தன் தேனம்மாவை மணந்தார்.
குலம் விளங்க உடன்பிறப்புக்களுடன் மோகனதாஸ் பிறந்தார்.
மூத்தவராய் அமரர் அரிதாஸ் அக்காக்கள்.
சரோஜினி,பரமேஸ்வரி,தங்கைகளாக இலட்சுமி,ருக்மணி,தம்பிகள்
சந்திரதாஸ்,சிவதாஸ் இளைய தங்கை தாமரைச்செல்வியுமாய்
தழைத்தோங்கிய குடும்பம் பால்க்கார ஆச்சி வீடு.
பட்டியில் நிற்கும் பசுக்கள் நிறைக்கும் பாற்கிண்ணம்
கட்டி அடுக்கிய நெல்லரிசியில் பொங்கும் அன்னம்.
பகற் பொழுதில் பாலர்கள் வகுப்பாக மாறும் வீடும்
பாசப்பறவைகள் மகிழ்ந்து குலாவியே கூடும்
மேவிய தலையும் ஓவியப் பார்வையும்
சிவந்த மேனியில் கறுத்தத் தாடி
மிகுந்த மனதாளனாய் மகிழ்ந்து பாடி
தகுந்த நேரத்தில் உறவுகள் தாங்கிய
மோகனப் புன்னகை....
ஒருபோதும் விரும்பார் மண்,பொருள், பொன்னகை..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடை வள்ளலில் கர்ணன்....
மடைதிறந்த வெள்ளமாய்
தடையில்லா தானம் செய்யும் மோகன வர்ணன்....
புடை சூழ நண்பர்கள் தினம்...
விடை பெற விரும்பாமல்
இவர் பேச்சில் அவர்கள் மனம்....
ஊரில் மோகனால் முழுப்பேரும் சாரதி
உழவியந்திர மதிநுட்பத்தில் புதுமையான பாரதி
உதவிகளில் நீயே உத்தமன்
ஊராருடன் நேசத்தில் வித்தகன்
காலம் எவ்வளவு அழகானதும் அவசரமானதும்
கோலம் போட இவர் வாழ்வில்
சாலமும் சிறந்த உழைப்பாளர்
கணபதிப்பிள்ளை கரம்பிடித்து
சீதேவி பெற்றெடுத்த தனவதியாள்
மோகன தேசத்துக்கு வந்தார் செல்வராணியாய்...
மணம் முடித்து இவரை உயர்வில் ஏற்றிய ஏணியாய்...
காணி நிலம் வாங்கி
கஸ்டமெல்லம் நீங்கி
கண்ணழகு கொஞ்சும்
மகன்களில் கிருசிகன்(பதுமன்)
அன்பிலும் பண்பிலும் பொறுப்பிலும் புதுமகன்
கீர்த்திகன் (கீர்த்தி) துறுதுறுப்பின் பொறித்...தீ...
அன்பெல்லாம் அள்ளிக் கொட்டி
அவதரித்தாள் கீர்த்திகா இனிதானாள்...
அப்பாவின் பண்பும் சேர்ந்து பிறந்ததால்
ஒருநாளும் குறைவில்லை வீட்டில் கஜானா...
திருநாளும் நிறைந்த கூட்டில் இறை வாழ விரும்பும்..
இவர் மென்மை இயல்பில் சுவை கூடும் கரும்பும்...
வந்துதித்து வாழ்வியலின் வழி நடந்து
சொந்தமது சுமந்து செந்தணலில் சிவன் பூசும் நீறாகி
பந்தங்கள் பதற பார்விட்டுப் பரமனவன் பாதமடைந்த
மோகனிவர் மோட்சமடையப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தெய்வம்

அப்பா...!
எமைவிட்டுப் போனார் நேற்று.
சுவாசம் மறுத்து
திரும்புகிறது காற்று.

கரம் பிடித்து மணந்தோம்.
விரும்பியபடி மகிழ்ந்தோம்.
அரும்பிய பருவத்தில்
தந்தை நிழலில்லாத் தாவரமாய்
வாடுகிறது வாழ்க்கை.

ஆற்றுப்படுத்தவும், அன்பணைத்து
தோளைத்தொடவும் முடியாத்
தொலைவில் நீங்கள்
மாற்று வழி தெரியாப் பயணங்களுடன் நாம்.

மோகனப் புன்னகையில்
இருந்த எங்கள் நிமிடங்கள்
சோதனையானதேனோ?

வழமையாய் புலரும் காலையும்
விடியாத பொழுதாய்
முடியாத இழப்பாய் நீளும் சோகம்.
நீங்களிருந்தபோது கண்ணீரும் இனித்ததே!
இப்போது தேநீரும் கசக்குதே.....!!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர்க்கும்போதே வேரறுந்த வேதனை ஏன்....????
விழிக்கும் போதெல்லாம் உங்கள் விம்பம்.
பனிக்கும் கண்களில்
பார்வைத்தூரமெங்கும் பாசமுகம்.

தேடுகிறோம் தேசமெங்கும்
தெய்வங்கள் கூட இருக்கவில்லை
அப்பாவைப் போல......

**அன்பு மனைவி செல்வராணி,**
**அன்பு மகன்கள் கிருசிகன் (பதுமன்),கீர்த்திகன்(கீர்த்தி),**
**அன்பு மகள் கீர்த்திகா (கஜானா).**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாச உறவுகள்....

கடன் கொடுத்துவிட்டோம்
உடன் பிறப்பை.
விண்ணேறி விடைபெற்றது
பாசப் பறவை....

கண்ணேறிய நீரில்
கசிந்துருகும் உள்ளங்கள்.
பண்ணேறிய இசையில்
குரலடைத்த குயில்களின் ராகம்.

எங்கள் வீட்டின்
இளவரசனாய் கவலைகளற்ற
இளங்கன்றாய் துள்ளிய வாலிபன்
அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மோகனனாய்.

அன்பை வெளிக்காட்டாமல்
இறுக்கமாய் இருந்துவிட்டு.
வீட்டுக்கு வெளியே
நகைச்சுவையும் நளினமும்
காட்டும் மைத்துனனாய்
வலம் வந்த வல்லமையே..!

பகைகளே இல்லாத பண்பியல்பும்
வகை வகையான வடிவங்களுடன் தம்பியுமானாய்.
சின்னண்ணாவாய் சிரிக்காத நீ
சித்திரங்கள் பேசியது எப்படி...???

பத்திரமாய் உன் நினைவுகளைப் பாதுகாப்போம்.
அமைதியாக உறங்குங்கள்.

| சகோதரர்கள் | மைத்துனர்கள். |
|---|---|
| அமரர் அரிதாஸ் | நவமணி |
| சரோஜினி | மாதவன் (அமரர்) |
| பரமேஸ்வரி | சிவானந்தம் (அமரர்) |
| இலட்சுமி | முத்துலிங்கம் |
| ருக்மணி | சந்திரசேகரம் (அண்ணா) |
| சந்திரதாஸ் | சகுந்தலாதேவி |
| சிவதாஸ் | கோமதி |
| தாமரைச்செல்வி | குகதாஸ் |
| இராமதாஸ் | இரத்தினம் |
| புனிதவதி | செல்வராசா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளாடாத தவம்.....

பாச முகமொன்றை,
நேசமாய் நெஞ்சில்
தொடர்ந்த நிழலை
படமாய் மாற்றிவிட்டது காலம்.

சித்தப்பாவாய் சிரித்த முகம்...
தாடி மாமாவாய் மலர்ந்த இதம்...
தாத்தாவாய் தள்ளாடாத தவம்...
பூட்டனாய் புன்னகை மாறாத விதம்...

காட்டமான உருவம் மாறி
பாட்டம் பாட்டமாய்
அன்பு மழை பொழிந்த மோகன மேகம்......
எம் வளர்ச்சிக்காய் ஏங்கிய தாகம்.....

உங்கள் பிள்ளைகளைப்போலவே
எங்களையும் சுற்றியது அணைப்பு....
அந்தப் பெருமையே
உங்களின் நினைப்பு....

பாலருந்தியதை விட - உங்கள்
பாசமருந்தியதே அதிகம்.
பயப்படுவதும், பகிடி விடுவதும்
வயப்படுவதும் உங்கள் அருகில்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்பட்டு அடம்பிடித்தால்
விரும்பியதை வாங்கிக் கொண்டு
அழுகை நிறுத்தும் குழந்தை.
தொழுகையிலும் கூட ஆசை துறந்த ஆத்மகன்.

நேர்மையின் உருவத்தை
உம்மில் கண்டோம்.
கூர்மையாய் நோக்கவும்
சீர்மையாய் வாழவும்
கற்றுத்தந்த கடவுளுக்கு
கண்ணீரின் அபிசேகங்கள்.

## பெறாமக்கள்,மருமக்கள்,பேரர்கள்,பூட்டர்கள்.

- சசிகலா–சாம்பசிவம் : சர்மிளன்,யதுமிளா,டினுசன்.
- பிரபாகரன்–சைலஜா : பிரசிகா,பிருந்திகா,சபிசாந்,அட்சயா.
- பிரசாந்தி–சிவகுமார் : சிவாஸ்கா,சுவாதித்,பிரஜித்.
- சந்திரமோகன் (பிரியன்) – ஜெனி : அன்பினியன்.
- சுகிதரன்–சந்திரவதனி : அனோஜ்,அபிநயா,அகல்விழி,அகலிசை.
- பிறேமிளாசாந்தி–தயாளன் : றோமிசா.
- பிரியதர்சினி–துஷ்யந்தன் : அபிரா,அதிரன்.
- மேகலதா –சுரேஸ்குமார் : கோபிதா,கௌசிக்.
- கோபிதாஸ் –பிறேமினி : சானுஜா,சஸ்மிகா.

  - சஞ்சிகா,சஞ்சயன்,சாரங்கன்.
  - சர்மிளா, துசாந்தன் டஸ்மிதா,வைசாளி.
  - ஊர்மிளா – யாதவபாலன்.
  - பாலமுரளி – சுகிதரணி.
  - விமலதாஸ் – டிலோஜி
  - சாருணி,சர்வன்,ஜதுகிரி,காயா,
  - சர்மியா,யாதவன்,துவாரகன்,தட்சாயினி,பிரதீப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்சுமக்கும் வேர்கள்**
**இரணைமடு,திருவையாறு.**

இலங்கையின் வடபகுதியில் பெரிய நீர்த்தேக்கமாக விளங்கும் இரணைமடு குளத்தை தன்னகத்தே கொண்டுள்ள கிளிநொச்சியின் கோவிந்தன் கடைச்சந்தி பிரபலமான முகவரியிடம்.அக்காலத்தின் மூத்த குடியிருப்பாளராக அங்கு கடை வைத்திருந்த கோவிந்தன் அவர்களின் மகன் மோகனதாஸ் அவர்களின் நினைவு நாளில் மண்சுமக்கும் வேர்களின் பதிவாக இதனை சமர்ப்பிக்கிறோம்.

திருவையாறு வில்சன் வீதி பால்க்கார ஆச்சிவீடு என்று அடைமொழியோடு அழைக்கும் வீட்டின் இளைஞன் இவர். ஊராரின் அன்பை தன்னோடு கூடவைத்திருக்கும் குதூகலமான மனிதர்.பிறரின் துன்பம் கண்டு தன்னை முழுதாய் அர்ப்பணித்து உதவுவதில் உயர்ந்த உள்ளம்கொண்டவர். இயல்பாகவும் பண்பியல்போடும் பழகும் பாங்கு இவருக்கான தனிச்சிறப்பு. திருவையாற்றில் பெரும்பாலானவர்கள் இவரைக் குருவாக்கி உழவியந்திர சாரதியாய் உருவானவர்களே அதிகம். குடும்பத்தின் பொறுப்பாளனாக, நல்ல கமக்காரனாகத் திகழ்ந்து பெற்ற பிள்ளைகளின் தோழனாக வாழ்ந்து இவ்வையத்தை நீங்கி இறைவனடி சேர்ந்தார்.

நற்பண்பாளர்கள் நம் மத்தியில் வாழ்ந்து வழிகாட்டுவதால் புனிதமாகிறது பூமி.

*“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்”*

**மண்சுமக்கும் வேர்கள்**

**இரணைமடு,திருவையாறு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனின் பதிவு...

படலை எப்போதும் திறந்தே இருக்கும். எங்கள் பாசத்துக்குரிய மோகனின் வருகைக்காய். உலர்ந்த பொழுதுகளை மலர்ந்த சிரிப்பால் மாற்றும் மகிழ்வாளன். வானில் அரும்பிய சூரியனைவிட நாம் விரும்பிய நேசத்துக்குரிய நெஞ்சனின் நெருக்கம் எமது குடும்பத்துக்கு பெரும் நிழல். சுழலும் உலகில் சுயநலத்தோடு ஓடும் மானிடரில் இவர் மாற்றமானவர். மோகன் நட்புள்ளங்களை இதயபூர்வமாய் நெருங்கும் நேர்மையாளர். கமத்தொழிலைப் பிரதானமாகச் செய்யும் இவர் பிறருக்கு ஊதியமின்றி உதவிசெய்துவிட்டு இறுதியாக தான் விதைப்பதுதான் வழமை. உழவியந்திரத்தின் நுட்பங்களில் நல்ல தேர்ச்சியாளர். அத்துடன் அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து அறிந்திருந்த அறிஞன். நல்ல ரசிகன். பாடலில் மெய்மறந்து இசையில் மிதக்கும் இவர் ரசனை.

நகைச்சுவை உணர்வைத் தன்னகத்தே கொண்டு புன்சிரிப்போடு பொழுதெல்லாம் சிரிக்கச் சிரிக்கப் பேசும் வாசகன். ஒருவரின் பேச்சு நடையை தன்னகத்தே வடிவமைத்து அதை அப்படியே ஒப்புவிக்கும் அற்புதக் கலைஞன். எங்கள் பிள்ளைகள் "குண்டுமாமா" என அழைக்கும் பாசமான அன்பாளன். இனவாதத்தின் ஆக்கிரமிப்பால் தமிழினம் வாடியபோது கிளிநொச்சியிலிருந்து கலைக்கப்பட்டு வன்னிவிளாங் குளம் பகுதியில் கொட்டிலில் எமது தஞ்சம். அப்போது வீட்டிலும் பஞ்சம் அந்த வேளை அரிசி மூடையும் தட்டுப்பாடான அங்கரும் பிள்ளைகளுக்காக மோகனின் மிதிவண்டியுடன் எம் கொட்டில் நோக்கி வரும் நட்பின் இலக்கணம். எங்களோடு குந்தியிருந்து குதூகலிக்கும். அந்தப் பொற்காலப் பொழுதுகள் எம் வாழ்வியலில் நந்தவன நாட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நீட்சி கனடாவுக்கும், கனகாம்பிகை அம்மன் இரணைமடுவுக்குமான இடைவெளியைக் கூட்டிவிட்டது. குளிருக்குப் பயந்து கம்பளி ஆடைக்குள் அடங்கிப்போகிறது இன்றைய எம் வாழ்வு. இது விதியின் வீணை வாசிப்பில் விளங்கமுடியாத புது ராகம். உங்களை வந்து பார்த்து சிரித்து கூடித்திரிந்து குதூகலிக்க எண்ணியிருந்தோம். அன்னிய தேசத்தில் ஆளுக்கொரு தொலைவும் நாளுக்கொரு நகர்வுமாய் இருக்கும். இயந்திர வாழ்வை இயல்புக்கு கொண்டுவர உங்களிடமும் வர தீர்மானித்திருந்த பொழுதில் திடீரென வந்த செய்தி இடியென இறங்கியது இதயத்தில். நம்பவும் முடியாமல் வெம்பியழுது உங்கள் உடல்மீது ஒரு சொட்டு கண்ணீர் சிந்தவுமியலாமல்.....

புலம்பிப்போனோம். உங்கள் துணையையும் பிள்ளைகளையும் ஆற்றுப்படுத்த முடியாத் தூரத்தில் நாம். காலம் தன் கடமைகளை அவசரமாக முடித்து விடுகிறது. அப்பழுக்கில்லா அன்பரொருவரை நாம் இழந்து விட்டோம். அவரின் நினைவுகள் என்றும் எம்மோடு வாழும். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கும், உறவுகளுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த ஆறுதல்களும் அவரின் ஆன்மா அமைதியடைய கனகாம்பிகை அம்மனிடம் பிரார்த்தனைகளும்.

**அருணாசலம் கதிர்காமநாதன் (பப்பா) குடும்பம் (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறையும் குளிரில் கரையும் கண்ணீர்...







அமரர்

## கோவிந்தன் மோகனதாஸ்

மண்ணில்
25
12
1949



விண்ணில்
06
12
2020

குளிரில் உறைந்து போன நேரத்தில்
காதில் அறைந்தது ஒரு செய்தி........
தாடிச்சித்தப்பா தவறிவிட்டார்......!!!!
ஓடி வர முடியாத
தொலைவாகிப்போனேன் உங்களிலிருந்து.....

நாடி நரம்பெல்லாம் அறும் துயர்
அப்பா இறந்தபோது கூட அழாத பாவி நான்
இப்போ கதறலை கட்டுப்படுத்த முடியவில்லை...
என் அனுமதியின்றி அலறியபடி மனம்
திருவையாறில் அலைகிறது....

கோவிந்தன் கடைச்சந்தியின் விலாசம்
பால்கார ஆச்சி வீட்டின் விசாலம்

மோகன் சித்தப்பா .....!
சிவந்த மேனி கறுத்த தாடி
குண்டு மாமா என கூப்பிடும் ஊர்
வண்டுக் கண்களோடு
சொண்டுக்குள் சிரிப்பும்
கண்ணாடி பார்த்து தலைவாரி
தாடி நீவி
வல்லமையாய் வலம் வந்த
மோகனப் புன்னகையிலிருந்து
விடைபெற்றுக்கொண்டதே ஆவி

கட்டும் சாறத்தில் மிடுக்கு
பின்னால் கட்டிய கையுடன்
கம்பீரம் அடியெடுக்கும் நடை
ஆங்கிலமும் தமிழும் எழுதும்போது
பேனாக்களே இரசிக்கும்
எழுத்துக்களின் அழகு
உங்கள் வாழ்வு எதற்குமே ஆசைப்படாத
சுயநலமற்ற தனி உலகு

மோகனென்றால் பொதுச் சொத்து
குழந்தை மனசு
இரக்கம் இவரிடம் வந்து கேட்கும் ஏதாவது
தனக்கில்லாமல் செய்யும் தனவான்
கணக்கில்லாமல் செலவு செய்யும் கருணைவான்

அன்றி ஒருமுறை
அரிசி வாங்க கொடுத்த காசை
ஆரொருவன் பிள்ளை பசிக்க
அங்கர் வாங்கிக் கொடுத்துவிட்டு
வெறுங்கையுடன் வீடு வந்தீரே!

புழுங்கல் கூட இல்லாத வீட்டில்
உங்கள் செயலால்
அழவும் முடியாமல்
ஆனந்தமும் இல்லாமல்
பசியாற்றிய உங்கள் பாதியாக
மௌனங்களோடு மகிழ்ந்து
குடும்பத்தைக் காத்த
எங்கள் சித்திக்கு
ஆறுதல் யார் இனி.....????

நல்ல சாரதி
ஊரிலுள்ள உழவியந்திர சாரதிகளுக்கு
நீங்கள் தானே பிதாமகன்
இயல்பை முழுமையாக
உங்களின் உணர்ந்தேன்
ரசனை பற்றி படித்துள்ளேன்
அதை உங்களில் பலதடவை
பார்த்து ரசித்தேன்

ஒன்றில் ஆச்சரியப்பட்டு
தலை திருப்பும் அழகு
எந்தக் கலைஞனிடமும் கண்டதில்லை
உங்களுக்குப் பிடித்த பெயரை
பதுமன் என்று வைத்தீர்கள் தம்பிக்கு
கீத்தியும், சுஜானாவும்
அப்பாவை மட்டுமல்ல
அவர்களின் நல்ல நண்பனையும்
இழந்து தவிக்கிறார்கள்.

ஆற்றுப்படுத்த முடியாமல்
தோற்றுப்போனோம் அப்பா நாம்
நாற்றுக்கு கூட வேலியுண்டு
மனித உயிரை பலிவாக்கி விட்டது மருத்துவம்

இறைவனும் எமக்கு விரோதமே....
வைத்தியங்கள் செய்தது பெரும் துரோகமே.....
உங்களின் சிதையில் அக்கிரமங்கள் அழியும்...
மின்னல் கிழித்து மேகங்கள் பொழியும்....

அரிதாஸ் நவமணி (இலங்கை)
சுகிர்தரன் வதனி (இலங்கை)
பிரியன் ஜெனி அவ்பினியன் (சுவிஸ்)
பிரியா துஸ்யந்தன் அபிரா, அதிரன் (பிரான்ஸ்)

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஆறாத்துயரில் கண்ணீர்த் துளிகள்....”



மண்ணில்

25

12

1949

விண்ணில்

06

12

2020

அமரர்

## கோவிந்தன் மோகனதாஸ்

எம் தாயோடு நடை பயின்று
தாலாட்டி எமை வளர்த்த
தாய்மாமன்
மூச்சடங்கிப் போனதேனோ !!!
கணீரப்பான காந்தக்குரல்
மௌனித்து மரணித்ததேனோ!!!
எட்டாத் தொலைவில் நின்று
ஏங்கித் தவிக்கின்றோம்.
முகம் பாராமல்
விழிகள் பெருக உருகி நிற்கின்றோம்.

உமை இனி எப்போது காண்போம் ?
எமையெல்லாம் ஆறாத் துயரில்
ஆழ்த்திவிட்டு எங்கே சென்றுவிட்டீர்!!
தாரான மனம் கொண்ட
எங்கள் தாய் மாமாவே
சின்னக்கா பெற்றெடுத்த
பிள்ளைகள் கேட்கின்றோம்.
ஒரு முறை கண் திறந்து பாரீரோ!!!
உங்கள் ஆத்மா சாந்தியுற
பிரார்த்திக்கும்.

---

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

சின்னக்கா– பரமேஸ்வரி
மருமக்கள் – பிரபாகரன் ( பிரான்ஸ் )
பிரசாந்தி (இத்தாலி )
பிறேமிளாசாந்தி (பிரான்ஸ்)

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...!

*மண்ணில்*
*25 - 12 - 1955*



*விண்ணில்*
*06 - 12 - 2020*

அமரர்

## கோவிந்தன் மோகனதாஸ்

(3ஆம் கட்டை, வில்சன் வீதி, திருவையாறு, கிளிநொச்சி.)



மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய அவரது குடும்பத்தாருடன் இணைந்து நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

புவேந்திரன் கலாநிதி குடும்பம்

வேலன் பதிப்பகம், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்த் துளிகள்...!

*மலர்வு*
25 - 12 - 1949



*உதிர்வு*
06 - 12 - 2020

அமரர்

## கோவிந்தன் மோகனதாஸ்

(திருவையாறு, கிளிநொச்சி.)

மறையாது என்றும் மாமா உங்கள் நினைவு
தோழில் தூக்கி எங்கள்
துயரம் கலைத்த மாமா
வானில் மழையாய் எங்கள்
வாழ்வில் நிறைந்த மாமா
காணுவேன் ஓர் நாள்
எனும் கனவு கலைந்ததேனோ?
சிறைக் கூண்டின் பறவையாய்
சிக்கித் தவிக்கும் நான்
நிறைவான உங்கள் அன்பால்
சித்தம் திடம் கொண்டிருந்தேன்.
மறையாத சோகம் எமைக்
கொன்று தொலைகிறதே!
மறையாது என்றும்
மாமா உங்கள் நினைவு...

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

முருகையா வேந்தன் (குட்டி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுணர்வுடன்....

எமது பாசத்தின் உறைவிடமாக வாழ்ந்து,
அமரத்துவம் அடைந்த **எங்கள் குடும்பத் தெய்வம்**
இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு நேரில் வந்து
கலந்து கொண்டும், தொலைத்தொடர்புகள் மூலமும்,
கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள் (பெனர்)
மூலமும் தங்கள் துயரங்களைப் பகிர்ந்த
அனைத்து அன்புள்ளங்களுக்கும், உணவளித்தும்
மற்றும் உதவிகள் புரிந்தும், நினைவு மலர்
அச்சிட்டுத் தந்த வேழன் பதிப்பகத்தாருக்கும்,
எங்கள் சோகம் தாங்கிய நேசத்திற்கும்
பாசத்திற்குரிய அனைவரையும்
நன்றியுணர்வுடன் பற்றுகிறோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி**

***இங்ஙனம்***
***குடும்பத்தினர்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவள்ளுவர்

# நூறு குறளும் நூறு கதையும்

ஆசிரியர். திரு. ஆ. வடிவேலு
(ஓய்வு நிலை அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் தலைப்பு | :- நூறு குறளும் நூறு கதையும் |
| பதிப்புரிமை | :- ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | :- 2019 புரட்டாதி |
| ஆசிரியர் | :- திரு. ஆ. வடிவேலு<br>"வடிவகம்"<br>தும்பளை, பருத்தித்துறை<br>+ 94 76 720 8497 |
| பக்கங்கள் | :- XIV + 126 |
| தாளின் தன்மை | :- 60g |
| நூலின் அளவு | :- A5 |
| அச்சு எழுத்து | :- 12 |
| பிரதிகள் | :- 500 |
| அச்சிட்டோர் | :- கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்<br>DR. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்<br>021 224 2475 |
| விலை | :- 250/- |
| ISBN | :- 978 - 955 - 44548 - 2 - 8 |

இந்நூல் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டம் 2019ன் கீழ் வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குள் ஒதுக்கப்பட்ட எழுத்தாளர் ஊக்குவிப்பு நிதிப்பங்களிப்புடன் வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

சின்ன வயதுதொட்டு சீர்மியமாய்க் கல்விதனைச்
சொன்ன படிதொடர வைத்தவென் - அன்னை தந்தை
பொன்னடிக்கீழ் இந்நூலைப் போற்றியே காணிக்கை
நன்னயமாய் வைத்தேன் நயந்து.

- மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## சிவஸ்ரீ. தியாக. சோமஸ்கந்தராஜாக் குருக்கள்

BA,Dip.in.Ed,M.A

**சைவசித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகரசீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவாகம வித்தியாபூஷணம்**

பிரதமகுரு, இந்துமதகுரு, ஆதீனஹர்த்தா,தலைவர்,
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்.
இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன்,
வடபத்திரகாளி தேவஸ்தானம்,
அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம்,
தும்பளை, பருத்தித்துறை.

சுப மங்களம் நிறைதரு விகாரி வருடம் மங்களம் நிறை ஆவணி மாதம் மூல நட்சத்திரம் சுப மங்களமான சிவம் குதிரைகள் மேய்க்கும் சாரதியாக (பாகன்) வந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு திருவருள் நல்கினார். திருக்குறள் நூலைத் தந்த திருவள்ளுவர் தெய்வப்புலவர் என்று புகழ் பெற்றவர். திருக்குறளுக்கு அன்று தொடக்கம் இன்றுவரை உரை ஆசிரியர்களும் உரை நூல்களும் வந்தவண்ணம் உள்ளன. திருக்குறள் மனித வாழ்க்கையில் சீர்மியங்களைத் தெளிவாகக் கூறுகின்றது. திருக்குறள் நூறும் நூறு கதைகளும் சேர்ந்து நூறுகுறளும் நூறு கதைகளும் என்ற நூலைத் தொகுத்துத் தந்த அன்பர் மதிப்பார்ந்த குரு, திருவருள் ஜோதி ஆறுமுகம் வடிவேலு ஓய்வு பெற்ற அதிபர் அவர்களை மனமார வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

நூறு குறள்களும் நூறுகதையும் வாசித்தேன். அறிவின் பொக்கிஷம் அரும்பெரும் பெட்டகமான செறி நிறை சங்கப்பாடல் கதைகளும், வரலாற்று மன்னர் கதைகளும்,மற்றும் புராண இதிகாசங்களும், இதர கதைகளும் மிக அருமையாக குறள்களுக்கேற்றவாறு அமைந்திருப்பது போற்றுதற்குகந்தது. அறிவுடமை தொடக்கம் (அதிகாரம் 43) தெரிந்து வினையாடல் (அதிகாரம் 52) வரையுள்ள நூறு குறள்களும் நூறு கதைகள் ஊடாக மிகவும் நுட்பத்துடன் வினைத்திறன்மிக்க வகையில் அமைந்திருப்பது பாராட்டுடன் போற்றத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மட்டுமன்றி அனைவரும் குறிப்பாக ஒவ்வொரு ஆசிரியர்களும் அறிந்து தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருப்பது பயன்மிக்கதாகும். வாசிப்புத்திறன் குன்றி வரும் இக் காலத்தில் இது மிக அவசியமானதே, ஆ. வடிவேலு அவர்களுடைய இம் முயற்சி மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தரும். இனிய செயல் இதற்கு அவரின் குல தெய்வமாகிய அருள் மிகு நாவலடி சக்தி அம்மனும் அருள் மிகு நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன், இலட்சுமணன் தோட்டம், வீரபத்திரகாளி அம்மன், வடபத்திரகாளி அம்மன் திருவருள் நல்க வேண்டும் என்று ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உற்ற நோய் நீக்கி உறாசுமை முற்காக்கும்
பெற்றியார் பேணிக் கொளல் ( 442 )

வாழ்க தமிழ் வளர்க! நும்பணி!!
சுபமஸ்து.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ மகாகனபதி சிவானந்தராஜா குருக்கள்
அகில இலங்கை சமாதான நீதவான்,
பிரதமகுரு
வியாபாரிமூலை இன்பர் சிட்டி
ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம்,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.



Sivasri.MAhakanapathy Sivanantharajah Kurukkal
Justice of the (Whole Island)
Chief Priest
Viyaparimoolai Inparsiddy
Sri Siththivinayagar Temple,
Viyaparimoolai, Point Pedro.

## ஆசியுரை

சைவமும் தமிழும் ஒருங்கே தழைத்தோங்கும் யாழ்ப்பாணம் வடமராட்சி தும்பளைப் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு ஆறுமுகம் வடிவேலு (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் தன் உள்ள அவாகாரணமாக வெளியீடு செய்யும் "நூறு குறலும் நூறு கதையும்" என்ற அருந்தமிழ் பொக்கிஷத்தினை வெளியீடு செய்கின்ற இந்த நிகழ்வில் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு ஆசியுரை வழங்க முனைகின்றோம். பெரியார் ஆறுமுகம் வடிவேலு அவர்கள் அடுத்துவரும் தமிழ்ச் சந்ததியினர் சைவ ஆசார ஒழுக்க நெறிமுறைகளையும், தமிழ் கலாசார பண்புகளையும், பேணிநடக்க ஏதுவாக இந்த குறள் அமுதம் பயன்படும் என்ற முழுநம்பிக்கையில், இன்றைய இளைய மழலைகள் மனதில் இமைப்பொழுதில் பதிவிக்க எண்ணியே, இவ்வாறு தமிழ்த் தொண்டினை ஆற்றுகின்றார் என எண்ணி ஆசி வழங்குவதில் பெருமை கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ. ம. சிவானந்தராஜாக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

க.பொ.த (உ.த) 2019 இற்குரிய புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப திரு ஆ.வடிவேலு அவர்கள் நூறு குறளும் நூறு கதையும் என்ற இந்நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

வள்ளுவப் பெருந்தகை யாத்த திருக்குறளில் 43ம் அதிகாரத்திலிருந்து 51 ஆவது அதிகாரம் வரையிலான குறள்கள் க.பொ.த (உ.த) தமிழ்ப் பாட கலைத்திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. க.பொ.த (உ.த) இல் தமிழ்கற்கும் மாணவர்கள் இக்குறள்களைக் கற்பது இன்றியமையாததாகும்.

திருக்குறளினை மாணவர்கள் மனனம் செய்வது என்பது இலகுவான காரியம் அல்ல. அத்துடன் மாணவர்கள் மனதில் இக்குறள்கள் ஆழமாகப் பதிய வேண்டும். குறள்களையும், அவற்றிற்கான உரைகளையும் மாணவர்கள் நன்கு கற்றால் தான் அவர்களால் வெற்றிகரமாகப் பரீட்சையை எதிர்கொள்ள முடியும்.

திரு. ஆ. வடிவேலு அவர்கள் இக்குறள்களைக் கதைகள் மூலம் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தும் முயற்சியாக இந்நூலை ஆக்கியுள்ளார். கதைகள் மாணவர்களுக்கு மிகவும் விருப்பமானவை. கதைகள் மூலம் மாணவர்களுக்கு கற்பிப்பது இலகுவாக அமைவதோடு கற்ற விடயங்களும் மாணவர்கள் மத்தியில் பசுமரத்தாணி போலப் பதியும். எனவே இந்நூல் க.பொ.த(உ/த) கற்கும் மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என நம்புகிறேன். இந்நூலை ஆக்கி வெளியிட்ட திரு.ஆ. வடிவேலு அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இந்நூலின் மூலம் மாணவர்கள் பயனடையவும் வேண்டுகின்றேன்.

**திரு. செ. உதயகுமார்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

திருவாளர் ஆறுமுகம் வடிவேலு (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களால் எழுதப்பட்டுள்ள "நூறு குறளும் நூறு கதையும்" என்ற நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அகில இலங்கை காந்தி சேவா சங்க முன்னைநாள் தலைவரும், அகில இலங்கை திருவள்ளுவர் கோட்ட அமைப்பாளரும் செயலாளருமான திருவாளர் ஆறுமுகம் வடிவேலு அவர்கள் தனது 79வது வயதில் திருக்குறள் மீது கொண்ட பக்தியால், சில குறள்களை ஆய்வு செய்து அவற்றை தொகுத்து திருக்குறள் ஆய்வுரை பகுதி I, பகுதி II என்ற ஆய்வு நூலை 2013ம் ஆண்டு வெளியீடு செய்து அனைவராலும் மதிக்கப்படுகின்ற நூலாளராக அடையாளப்படுத் தப்பட்டுள்ளார். இந்நூலில் 42 குறள்களை ஆய்வு செய்து மனித வாழ்வியலுடன் இக்குறள்களின் செய்தியை வெளிக்கொணர்ந்த பெருமைபெற்றிருந்தார்.

தனது ஆய்வியலின் தொடர்ச்சியாக க.பொ.த.(உ/த) வகுப்பு மாணவர்களின் புதிய கலைத்திட்டத்தில் தமிழ் மொழிபாடத்துடன் இணைந்ததான நூறு குறள்களும் நூறு கதைகளும் என்ற நூலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நலன்கருதி தேடல் ஊக்கியாக இன்று கல்விப் புலத்திற்கு வழங்கியுள்ளமை ஆசிரியரின் தமிழ்மொழிப்பற்றை எடுத்துக்காட்டுகின்றது.

பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவரின் 133 அதிகாரங்களின் அமைச்சியலிலிருந்து தெரிந்து வினையாடல் வரையான பத்து அதிகாரங்களில் உள்ள நூறு குறள்களை ஆய்வு செய்து உயர்தர வகுப்பின் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் புராண, இதிகாச, சங்க இலக்கியங்களில் உள்ள கதைகளைத் தழுவி நூறு கதைகளைப் பொருத்தி அவற்றை நூலுருவாக்கி தனது படைப்பாற்றல் திறனை இன்று வெளிக்காட்டியிருப்பது நூலாசிரியரின் ஆய்வுத் திறனையும், மொழிப்பற்றையும் இன்று சமூகத்திற்கு அடையாளப்படுத்தி இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நூலாசிரியரின் நூலுருவாக்கம் தொடர வேண்டுமென வாழ்த்துவதுடன் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சமூகத்திற்கும் திருக்குறளினூடான நல்லொழுக்கப் பண்பையும் அறம் சார்ந்த கருத்துக்களையும் முனைப்புடன் தொடர்ந்து வெளியிட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. சி. நந்தகுமார்**
(ஓய்வு நிலை, வலயக் கல்விப் பணிப்பாளர்)
வடமராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"நூறு குறளும் நூறு கதையும்" என்ற மிகக் கனதியான காத்திரமான நூலைத் தந்துள்ளார் பண்டிதர்.ஆ. வடிவேலு அவர்கள்

படித்தவர்கள் மட்டும் படித்து உணரும் பொய்யாமொழியைப் பாமரும் படித்து இன்புற பாரிய முயற்சியில் பண்டிதர் ஈடுபட்டுள்ளமையைப் பாராட்டத்தான் வேண்டும்.

திருக்குறளுக்கு பலர் உரையெழுதிய போதும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்து என்பது கற்றறிந்தோரின் கருத்து. இருப்பினும் இந்த உரையையும் படித்துச் சுவைக்க, பயனறிய முடியாதவர்களாகப் பலர் இருப்தையும் நாம் மறுக்க முடியாது.

இந்நிலையை கருத்தில் கொண்ட பண்டதர். ஆ. வடிவேலு அவர்கள் ஒரு பாரிய பயனுள்ள முயற்சியில் இறங்கியிருப்பது "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருமனத்துடனே என்பதை இந்நூலைப் படித்தவர்கள் உணர்ந்து கொள்வது உறுதி.

ஒரு பருமட்டான தெரிவாக 43ஆவது அதிகாரம் அறிவுடமையில் தொடங்கி குற்றங்கடிதல், பெரியாரைத் துணைத்தேடல், சிற்றினம் சேராமை, தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலமறிதல், இடமறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் ஆகிய பத்து அதிகாரங்களிலுமுள்ள நூறு குறள்களையும் கதைகளோடு இணைத்து படிப்போரை மகிழ்ச்சிக்
குள்ளாக்கியிருக்கிறார்.

தெய்வநூல் என்றும் உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்றும் புகழப்படும் திருக்குறள் வெறுமனே மனனம் செய்து ஒப்பிக்கப்படாமல் வாழ்க்கையோடு இணைந் திருக்கின்றது என்பதை கதைகள் மூலம் காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக

**"அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்"**

**(**428) இது அறிவுடமையில் வரும் 8ஆவது குறள் இதற்குப் பரிமேலழகர் கொடுத்த உரை அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதமையாம். அவ் அஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம் என்றமைகின்றது. ஒரு வகையில் உரைக்கு உரை எழுதும் நிலை இன்று அதிகம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பண்டிதர் எமக்குத் தெரிந்த கதையினுடாக இதனை விளக்குவதும் பார்க்கலாம். கதை பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுனி, கர்ணன், துரியோதனன் முதலியோர் வஞ்சகமாகச் சூழ்ந்து பொன்மயமான அழகிய மாளிகை ஒன்றை அமைத்து அதன் புதுமை காணுமாறு தருமர் முதலிய ஐவரையும் பொருந்த அழைத்தார். வஞ்சகம் இல்லாத ஐவரும் அவரோடு நெஞ்சங் கலந்து முதியோரை எல்லாம் தொழுது அங்கு தங்கி மறுநாள் புதிய மண்டபத்திற்கு புகுந்தார். அதன் அரிய நலன்களைக் கண்டார். பெருமகிழ்வு கொண்டார்.

இந்த மண்ட பஞ்சமைத்த இனிமை தன்னை என்சொல்வேன்
முந்தைமண்ட பங்களுக்கும் முதன்மையான தேவரூர்
அந்தமண்ட பத்துமில்லை அதனையன்றி மண்ணின்மேல்
எந்தமண்ட பத்துமில்லை இதனினுள்ள எழிலரோ

என்று வியந்து புகழ்ந்து அங்கு அமைந்திருந்த ஆசனத்தின் மீது தம்பிமார் புடைசூழத் தருமர் அமர்ந்திருந்தார். "அமுதம் போன்ற உணவை நாம் போய் அருந்தும் அளவும் பொழுது போக்காக வஞ்சகமில்லாத நமது மாமனும் நீங்களும் கொஞ்சம் சூது ஆடுங்கள் பார்ப்போம்." என்று தருமரிடம் துரியோதனன் கூறினான். அதனைக் கேட்டவுடன் அவர் வாட்டமுற்றார். சகுனி நெருங்கினான். "நீதி நூல்கள் பலவும் ஓதி அறியினும் சூதாடல் தெரியாமை தீதாகும் வேந்தருக்கும் வீணருக்கும் அது வேலைதானே. இம்முறையில் நாம் மூவரும் அதனை ஆடுவதற்கு உரியவரே; அதனால் அஞ்ச வேண்டாம்; நெஞ்சம் தேறுங்கள்; கொஞ்சம் ஆடுங்கள்; வாருங்கள்" என்று அஞ்சாது கூறினான். தருமர் அஞ்சி வருந்தினார். அஞ்சப்படுவதாக பழிச்செயலுக்குப் பேதையர் அஞ்சார் அறிவுடையார் அஞ்சுவர் என்பதை உலகம் அவ்விருவர்பாலும் உணர்ந்து தெரிந்தது.

நூலாசிரியருடைய நுண்மாண் நுழைபுலம் புலப்படுவதை வாசகர்கள் உணரலாம். தெரியாத திருக்குறளுக்கு நன்கு தெரிந்த மகாபாரதக் கதையை இணைத்துக்காட்டி விளங்குவது தனிச்சிறப்பு.

வாசகர்கள் மகாபாரதக் கதையை படிப்பதனுடாக, பயன் தரும் திருக்குறளையும் அறிந்து கொள்வார்கள். மிக எளிமையாகவும் சிறந்த மொழி வளத்துடனும் ஆசிரியர் எடுத்துக் காட்டுவது கதையையும் குறளையும் அறிவதோடு நல்ல மொழிப் புலமையையும் பெற ஏதுவாகின்றது. ஒரு கல்லில் மூன்று மாங்காய் அடிப்பதை கச்சிதமாக செய்துள்ளார் ஆசிரியர்.

"நூறு குறளும் நூறு கதையும்" என்ற இந்நூல் இலக்கிய நாட்டமுடையவர்க்கு பெரும் வரப்பிரதாசமாகும். எத்தனை கதைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை காலங்கள், எத்தனை பெயர்கள்....... நினைத்துப் பார்க்க முடியாத நூல்களில் முன்பு படித்து அறிந்து கொள்ளாத, கேட்டுத் தெரிந்து கொள்ளாத பல்வேறு விடயங்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்திருக்கின்றது.

அறிவுடைநம்பி என்பவன் இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையிலிருந்து அரசு புரிந்த ஒரு மராட்டிய மன்னன், காந்தன் என்பவன் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காவிரிப்பட்டினத்திலிருந்து அரசுபுரிந்த ஒரு சோழமன்னன் என்றும் துருவன், உத்தமன், திரிபுரர்என்பவர் தாரகாத்தன், கமலாத்தன், வித்தியுன்மாலி, விடப்பத்மன்.......என பலருடைய பெயர்களும் அவர்களுடைய சம்பவங்களும் என எங்கெங்கோ எவ்விடம் தேடி குறளுக்கேற்ற சம்பவங்களை இணைத்து வாசகர்களை மலைக்க வைக்கிறார்.

"யாரோ செய்த தவத்தால்
நூல்கள் பெற்ற வரம்
புத்தகம் பெற்ற வரம்" என்றொரு புதுக்கவிஞன் எழுதியது போல் பண்டிதர். ஆ. வடிவேலு செய்த தவம் எங்கள் கைகளில் குறள்களும் கதைகளும் வரமாக வந்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும். தமிழ்மொழியில் உலகிற்கு இவ்வாறான புதிய வகை நூல்கள் வெளிவரவேண்டும். பரந்த பார்வையும் விரிந்த அறிவும் தெளிந்த விளக்கமும் கொண்ட நூல்கள் வெளிவந்து தமிழ் வாசகர்களை பயன் பெறச் செய்ய வேண்டும். ஆசிரியருடைய அறிவும், ஆற்றலும், ஆளுமையும் வெளிப்படும் இன்னும் பல நூல்களை வாசகர் எதிர்பார்ப்பதோடு ஏனைய குறள்களுக்கும் பொருத்தமான கதைகளை ஆசிரியர் உருவாக்கித் தரவேண்டும் என்பது எனது பேரவா. ஆசிரியருடைய மொழிச் செழுமையும் புலமையும் இன்றுள்ள மாணவர்களை மட்டுமன்றி ஆசிரியர்களையும் குறிப்பாகத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களையும் சென்றடைய வேண்டும்.

நலன் விரும்பிகள், தமிழ்ப்பற்றாளர்கள் இவ்வாறான நூல்கள் வெளிவர ஆவன செய்ய வேண்டும். தமிழுக்காக உயிர் கொடுப்பதை விட தமிழுக்கு உயிர்கொடுத்த இந்நூல் என்றும் நிலைக்கும் என்பது உறுதி.

**திரு. ந. பார்த்திபன்**
சிரேஸ்ட (தமிழ்) விரிவுரையாளர்
தேசிய கல்வியியற்கல்லூரி வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

திருக்குறளில் நான் ஈடுபாடு கொள்வதற்கு அடிப்படைக் காரணங்கள் சில உண்டு. 1960ஆண்டு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி மாணவனாக இருந்த வேளை கலாசாலையின் ஏற்பாட்டில் இந்திய சுற்றுலா சென்றிருந்தோம். சென்னையில் ஒரு புதத்தகக்கடையில் கி.ஆ.பெ.விசுவநாதம் எழுதிய "திருக்குறள் புதைபொருள்" என்ற சிறுநூலை நாலணாக் கொடுத்து நான் மட்டும் வாங்கினேன். அதில் பன்னிரண்டு (12) குறள்களுக்கு மட்டும் பரிமேலழகரின் உரைக்கு மாறுபாடான உரை காணப்பட்டது. இது என் உள்ளத்தை மிகவும் கவர்ந்து காணப்பட்டதால் நானும் புதிய உரை காணவேண்டும் என்னும் விருப்பத்தால் பலபேர் எழுதிய உரை நூல்களை வாங்கிக் கொண்டேன். ஆய்வுரை, சிறப்புரை, பொழிப்புரை, பதவுரை, கருத்துரை, தெளிவுரை, பொருளுரை, விளக்கவுரை, மக்களுரை, புதிய உரை எனப்பல பெயர்களில் வெளிவந்திருப்பினும் அவை எல்லாம் பரிமேலழகர் உரையைத் தழுவியே அமைந்திருந்தது.

சேவையில் இருந்த காலத்தில் எழுத்துத் துறையில் ஈடுபடும் எண்ணமோ நேர அவகாசமோ இருக்கவில்லை. 2000ம் ஆண்டில் ஓய்வு பெற்ற பின்பும் பல்வேறு வகையான பொதுப்பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். 2012ஆம் ஆண்டு இதய வருத்தத்தால் பாதிக்கப்பட்டேன். யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் ஆறுநாள் இருந்தேன். வைத்தியகலாநிதி ம.குருபரன் ஐயா அவர்களின் கண்காணிப்பில் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தேன். அதே ஆண்டு வைகாசி மாத வலம்புரியில் நல்லைக் கந்தன் மலருக்கு ஆக்கம் வேண்டிய செய்தியைப் பார்த்தேன். அதனால்

**"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்"** (குறள் - 969)

என்ற குறளை ஆய்வு செய்து அனுப்பினேன். அது மலரில் இடம் பெற்றது. அம்மலர் வெளியீட்டில் மலரை ஆய்வு செய்த யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன் ஐயா மலர் ஆய்வினைச் செய்த போது எனது குறள் ஆய்வினை பெரிதும் பாராட்டிப் பேசினார் அந்தப் பாராட்டு மேலும் பல குறள்களை ஆய்வு செய்யத் தூண்டியது.

இதன் காரணமாக "திருக்குறள் ஆய்வுரை" என்னும் தலைப்பில் பகுதி - Iல் பன்னிரண்டு குறளும், பகுதி IIல் இருபத்தேழு குறள்களும் ஆய்வு செய்து 2013ம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியீடு செய்தேன். அதனைத் தொடர்ந்து கொழும்பு தமிழ்ச் சங்கம் "திருக்குறளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியநோக்கு" என்னும் தலைப்பில் பேசும்படி எனக்கு அழைப்பு விடுத்தார்கள். அதனை ஏற்றுக் கொண்டு அங்கு சென்று பேசினேன். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் அதிகமானோர் எனது ஆய்வுப்பணி தொடர வேண்டும் எனக் கோட்டுக் கொண்டனர். ஆயினும் எனது பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை.

**"வாயார வாழ்த்தி வணங்குவோம் வள்ளுவரை**
**ஓயாது ஓதிக் குறள்"**

என்னும் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் பாடலை நினைக்கும் போது திருக்குறளை மறந்து வாழமுடியாது. அதனால் குறள்பற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வம் என்னைத் தூண்டியது.

நீண்டகால ஆசிரிய அதிபர் பணிபுரிந்த காரணத்தால் ஓர் உண்மையை உணர்ந்திருந்தேன். எந்தப்பாடத்திலும் எந்த விடயத்தையும் கதைகளின் ஊடாக விளக்கும் போது மாணவர்களும் அக்கறையுடன் அவதானிப்பதை அறிந்து கொண்டேன். அதனால் க.பொ.த (உ/த) மாணவர்களின் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் உள்ள அறிவுடமை தொடக்கம் தெரிந்து வினையாடல் வரை உள்ள பத்து அதிகாரங்களில் உள்ள ஒவ்வொரு குறளுக்கும் பொருத்தமான ஒவ்வொரு கதையை இணைத்துக் கொள்வது நல்லதெனப்பட்டமையால் "நூறு குறளும் நூறு கதையும்" என்ற தலைப்பில் இந்நூலைத் தொகுத்தேன்.

நூலை வெளியீடு செய்யும் நோக்கில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தரிடம் எழுத்தாளர்களுக்கு வழங்கும் ஊக்குவிப்பு நிதிக்கான கோரிக்கைக் கடிதம் கொடுத்திருந்தேன். எதிர்பாராத விதமாகப் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் எனக்கு அழைப்பு எடுத்து உடனடியாகச் சந்திக்கும் படி அறிவித்தார். அவரைச் சந்தித்த போது உதவுதொகை வழங்க இருப்பதாகவும் அச்சிடும் பணியைத் தொடங்குமாறும் கூறினார். நானும் இடையறாது முயற்சி செய்து நூலுக்குத் தேவையான எல்லாத் தரவுகளையும் பெற்றுக் கொண்டேன்.

இந்நூலுக்குச் சிறந்த ஓர் ஆசியுரையை வழங்கி உதவிய சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜா குருக்கள் ஐயா அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வாழ்த்துரை வழங்கிய உயர்திரு. செ. உதயகுமார் (மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடக்கு மாகாணம்) அவர்களுக்கும், உயர்திரு. சி. நந்தகுமார் (ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளர் வடமாராட்சி) அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியறிதலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது நீண்டகால அன்பரும் களஞ்சியப் பொறுப்பாளருமான கரவெட்டி சின்னத்தம்பி நடராசா அவர்களின் அருந்தவப் புதல்வன் திரு.ந.பார்த்தீபன் (சிரேஸ்ட தமிழ் விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லாரி, வவுனியா) அவர்கள் தந்துதவிய அணிந்துரையானது இந்நூலையும் என்னையும் மலை உச்சியில் உயர்த்தி வைத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அத்தகைய பெருமைக்குரிய பார்த்தீபன் அவர்களுக்கு எனது சிரம்தாழ்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2015ஆம் ஆண்டிலிருந்து என்னுடன் நெருக்கமாகப் பழகிக் கொண்டவரும், யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு.ந.சிவகரன் அவர்கள் புத்தகத்தின் பின்புற அட்டையில் என்னைப் பற்றிய பன்முகப் பார்வையை வெளிப்படுத்தி உள்ளார். இது நூலுக்கு ஒரு கனதியையும் காத்திரத்தையும் வழங்கியுள்ளது என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி" போல் அனைவருக்கும் நன்கு புலனாகும். இத்தகைய உயர்வான செய்தியின் மூலம் என்னை மதிப்புறச் செய்த திரு.ந.சிவகரன் அவர்களுக்கு காலம் முழுக்க நான் கடப்பாடு உடையவனாக இருப்பதோடு உள்ளம் உவந்து பாராட்டுக்ளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லாவற்றிலும் மேலாக இந்நூலினை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் நிதப்பங்களிப்புடன் வெளியீடு செய்வதற்கு அனுமதி வழங்கிய பிரதேச செயலாளர் உயர் திரு ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ ஐயா அவர்களுக்கு எனது தலைசாய்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்நூல் வெளியீட்டிற்காக எனக்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஆக்க பூர்வமான பல்வேறு உதவிகளையும் அவ்வப் போது வழங்கிய கலாசார உத்தியோகத்தர் திரு.அ.சிவஞானசீலன் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலினை அழகுற அமைத்து உரிய காலத்தில் சிறந்த ஒரு புத்தகமாகப் பதித்து உருவாக்கித்தந்த சுன்னாகம் கிருஷ்ணா பதிப்பக உரிமையாளருக்கும் ஊழியர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள் - 110)

நன்றி

"வடிவகம்"
தும்பளை, பருத்தித்துறை.

**ஆசிரியர் ஆ. வடிவேலு**
(ஓய்வு நிலை அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43ம் அதிகாரம் அறிவுடைமை

அ∴தாவது அறிவுடையாரது தன்மை. அறிவானது நல்லது இது, தீயது இது, என்பவற்றின் இயல்புகளையும் உள்ளவாறு உணர்தல். கல்வி கேள்விகளின் பயனாக இது கனிந்து தோன்றும். அதனால் கல்வி கேள்வியின் பின் இது வைக்கப்பட்டது.

## 1. அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
## உள்ளழிக்க லாகா அரண் (421)

பரிமேலழகர் உரை: அறிவு அற்றங் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவு என்பது இறுதி வராமல் காக்கும் கருவியாம்; செறுவார்க்கு அழிக்கலாகா உள் அரணும் - அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள் அரணுமாம் என்றவாறு.

## கதை

அறிவுடை நம்பி என்பவன் இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையிலிருந்து அரசு புரிந்த ஒரு மறாட்டிய மன்னன். முறைதிறம்பாமல் இருநிலம் புரந்தவன். செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான் மங்கையர்கள் தன்மனத்தை வாங்கும் தடந்தோளான் என்றபடி அழகு ஆண்மை முதலிய உயர் நலங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவன். கலைகள் பலவும் கசடறக் கற்றவன். உலகியலறிவில் உயரிய நிலையினன். மன்பதை இன்புற அன்புடன் ஆண்டவன். தன்னை நம்பியவரைத் தாய்போல் பேணும் தன்மையுடையவன். இவனது அறிவினையும் அடுத்தாரைக் காக்கும் ஆற்றலையும் வியந்து "பாண்டியன் அறிவுடை நம்பி" என்று உலகம் இவனை வேண்டிப் புகழ்ந்தது. இவன் பிசிராந்தையார், பொத்தியார் முதலிய புலவர்களைத் தன்னுடன் பொருந்த வைத்துக் கொண்டு கல்வியின்பத்தைத் திருந்தத் துய்த்தான். மக்களால் எய்தும் இன்பமே இவ்வுலகில் மிக்கது என்று இவன் மனங் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினும்
இடைப்படக் குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கல்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே

என்று தான் கருதியிருந்ததை ஒரு கவியில் அமைத்துப் புவியில் நிறுத்தினான். எண்ணியதை எண்ணியாங் கெய்தி இசை திசை பரப்பி இவன் இனிது வீற்றிருக்குங்கால் பொறாமை கொண்ட அரசர் சிலர் இவனைப் பொருது வெல்லக் கருதி வந்தார். தனது மதி நலத்தால் அனைவரையும் இவன் மடக்கி வென்றான். அவரும் இவனது ஆண்மையையும் அறிவையும் அஞ்சி வியந்து அழிக்கலாற்றாது அடங்கிச் சென்றார். இவன் அச்சம் யாதும் இன்றி வெற்றி முற்றும் உடையனாகித் தன் அறிவால் விளங்கியிருந்தான். அறிவு அற்றங் காக்கும் கருவி, செறுவார்க்கும் உள்ளழிக்கலாகா அரண் என்பதை இவ் அறிவுடை நம்பிபால் உலகம் அறிந்து கொண்டது.

## 2. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
## நன்றின்பால் உய்ப்ப தறிவு (422)

பரிமேலழகர் உரை :- சென்ற இடத்தால் செலவிடா - மனத்தை அது சென்ற புலத்தின் கண் செல்லவிடாது; தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதெனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு என்றவாறு.

### கதை

பதஞ்சலி என்பவர் ஆதிசேடன் அமிசமாக இவ்வுலகில் அவதரித்தவர். இவர் சிறுபாம்புருவாகி அத்திரி முனிவருடைய பத்தினியாகிய அநுசூசையின் கையில் விழுந்தார். காலை வேளையில் சூரியனை நோக்கி கைகுவித்து நின்ற அவ் அம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்விதிர்த்த போது அவர் காலில் விழுந்து ஓர் அழகிய குழந்தை ஆயினார். பரத்தில் சலித்து விழுந்தமையால் இவர் பதஞ்சலி எனப்பட்டார். இவர் சிவபெருமானது திருநடனம் காணப் பெருங்காதல் கொண்டு அருந்தவம் புரிந்தார். அதன் பின் வியாக்கிரபாதர் என்னும் முனிவரோடு தில்லையை அடைந்து அங்கு எம்பெருமானது திருநடனங் கண்டு பெருமகிழ்வெய்தி எல்லாக் கலைகளையும் வழுவறத் தெளிந்தார். பாணினி முனிவர் அருளியுள்ள வியாகரணம் என்னும் அரிய வடமொழி இலக்கணத்திற்கு இவர் ஒரு பெரிய விரிவுரையை இயற்றினார். ஒருவரும் அறியாத தனியிடத்தமர்ந்து உணர்வொளி விளங்க அவ்வுரையினை இவர் அழகுற அருளினார்.

மனம் ஒருத்தன் வசப்படு மேலவன்
பினை வருத்தும் பிறப்பை அடைந்திடான்
மனம் ஒருத்தன் வசப்படா தோடுமேல்
நனி பிறப்பிடை நாளும் சூழலுமே

நல்லசெய்து நரரை உயர்த்தவும்
அல்ல செய்தங் கழற்றிடை யாழ்ப்பவும்
வல்லதிந்த மனமல தையனே
இல்லையென்ன இயம்பும் மறையெலாம்

என்றபடி மனத்தின் இயல்பை மதித்துணர்ந்து அதனை நடத்தும் முறைகளை உலகம் உணருமாறு சில நூல்களை இயற்றினார். அறிவைத் தலைவனாகவும், மனதைக் குதிரையாகவும், பிராண வாயுவைக் கலினமாகவும், பொறிகளை நெறிகளாகவும் உருவகம் செய்து இவர் அருளியுள்ளதை அருகமைய அமரரும் வியந்தார். இவரது மதிநலம் இவர் இயற்றிய யோக சூத்திரங்களில் இனிது புலனாம். மனத்தைச் சென்ற இடங்களில் எல்லாம் செலுத்தாமல் புலன்களின் திறமறிந்து செலுத்துவதே அறிவுடைமைக்குப் பயன் என்பதை உலகம் அறிய இவர் உணர்த்தி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)

பரிமேலழகர் உரை:- எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் - யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும்; அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு என்றவாறு.

### கதை

உருத்திரசன்மர் என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் மதுரையிலிருந்த உப்பூரி குடிகிழார் என்னும் தன வணிகருக்குப் புதல்வராய்த் தோன்றினார். - தாய் பெயர் சாலினி, இவர் ஆறுமுகக் கடவுளின் அவதாரம் ஆவார். உருத்திர மூர்த்தியின் சாபத்தால் சனித்தவர் ஆதலால் இவர் உருத்திர சன்மர் எனப்பட்டார். ஓதாது உணர்ந்த உண்மையுணர்வுடன் ஊமைப்பிள்ளையாய் இவர் அங்கு உறைந்திருந்தார். அக்காலத்தில் சங்கத்தில் இருந்த நக்கீரர் முதலிய நல்லிசைப் புலவர் பலரும் தத்தமக்குத் தோன்றியவாறே நூல் உரைகளைச் செய்து தத்தமதே சிறந்தது என்று தனித்தனியே தருக்கித்துத் தருக்கம் புரிந்தார்கள். இறைவன் அருளால் இவரது மேன்மையை அறிந்து அவரனைவரும் இவர்பால் வந்து வந்து தம்பொருள்களுள் மெய்ப்பொருளைத் தோற்றுமாறு போற்றினார். அப்பொருளை அவரவர் சொல்லக் கேட்டார். சொல்வாரது பெருமை சிறுமைகளை நோக்காமல் அப்பொருளின் பயனையும் நயனையுமே நன்கு நோக்கினார். அவற்றுள் கபிலர், பரணர், நக்கீரர் என்னும் மூவருடைய பொருளே மெய்ப்பொருள் என்று கண்டு அனைவரும் ஒப்புமாறு உறுப்பின் குறிப்பானும், முகமலர்ச்சியானும் உணரக்காட்டினார். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் காண்பதே அறிவு என்பதை உலகம் இவர்பால் கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 எண்பொருள வாச் செலச்சொல்லித் தான் பிறர்வாய் நுண்பொருள் காண்ப தறிவு (424)

பரிமேலழகர் உரை :- தான் எண்பொருளவாகச் செலச்சொல்லி - தான்சொல்லும் சொற்களை அரிய பொருளவாயினும் கேட்பார்க்கு எளிய பொருளாமாறு மனம் கொளச்சொல்லி; பிறர் வாய் நுண் பொருள் காண்பது அறிவு - பிறர்வாய் கேட்கும் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு என்றவாறு.

## கதை

படிக்காசுப் புலவர் என்பவர் சற்று ஏறக்குறைய இற்றைக்கு இருநூற்றைம்பது வருடங்களிற்கு முன் தொண்டை நாட்டிலே தென்களந்தை என்னும் நகரிலே செங்குந்தர் மரபிலே சேனை முதலியார் என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றினார். தாய்பெயர் காசினி. இவர் பல கலைகளையும் விரும்பி கற்றுப் பெரும் புலவராய் விளங்கி இருந்தார். பொருட் செல்வத்தைப் பெற முயலாமல் புலமைச் செல்வத்தையே இவர் பொருந்தித் துய்த்தார். அதனால் கொடிய வறுமையும் இவரைக் கூடி இருந்தது. புரவலர் பலரிடமும் சென்று பரிசில் பெற்று வாழ்ந்தார். இனிய ஓசைகளை உடைய சந்தக் கவிகள் பாடுவதில் இவர் சாலச்சிறந்தவர். "பண்பாகப் பகர் சந்தம் படிக்காசு அலா தொருவர் பகரொணாதே" என்று புலவர்களால் பாராட்ட பெற்றவர். ஒருநாள் இவர் சிதம்பரத்திற்குச் சென்று தில்லை பரமன் திருமுன்நின்று

வேல் கொடுத்தாய் திருச்செந்தூருக்கு அம்மியின் மீது வைக்க கால் கொடுத்தாய் நின்மணவாளனிற்கு கவுனியர்க்குப் பால்கொடுத்தாய் மத வேருக்கு மூவர் பயப்பட செங்கோல் கொடுத்தாய் அன்னையே எனக்கேதும் கொடுத்திலையே

என்று சிவகாமி அம்மை மீது நவமாக ஒரு கவியை நயந்து பாடினார். அம்மை இரங்கி இவர் முன்னிருந்த வாசற்படியில் ஐந்து பொற்காசுகளை வைத்தார். கண்டார் புலவர் கொண்ட உவகைக்கு அளவே இல்லை. தெய்வத்தாயின் திருவருளை வியந்து அதனை எடுத்துச் சென்றார். அன்று முதல் இவரை படிக்காசுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் என்று அனைவரும் அழைத்தார்கள். இவரது இயற்பெயர் மறைந்தது. அரிய பொருள்களையும் எவற்கும் எளிதில் விளங்குமாறு தெளிவாக சொல்லுவார்.

பொல்லாத மூர்கருக்கெத்தனை தான் புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண்டான குணம் வருமோ குளிர் நள்ளிரவில்
சல்லாப் புடவை குளிர் தாங்குமோ நடுச்சந்தை தனில்
செல்லாப் பணஞ் செல்லு மோ தில்லை வாழும் சிதம்பரனே

இது, அறிஞர்கள் கூறுகின்ற அறிவுரைகளைக் கேளாமல் செருக்குற்றிருந்த சில செல்வரை குறித்து ஓரமயம் இவர் சொல்லியது. உள்ளீடு இல்லாத அற்பர்கள் ஆடம்பரமாக வெளித்தோற்றத்தில் காணப்படினும் அடக்கமுடைய நல்லார் போல் உலகிற்கு அவர்கள் பயன்படார் என்பதையும், ஆன்றோர் உளத்தில் ஒரு பொருளாக அவர்கள் மதிக்கப்படார் என்பதையும் சல்லாப் புடவை செல்லாப்பணம் என எளிய உவமையால் விளங்கித் தெளியச் சொல்லிய இவரது அறிவுடமையை அனைவரும் வியந்தனர். அப்பயனின் செல்வரும் இவர் சொல்லின் குறிப்பை அறிந்து நயன் உடையவர் ஆயினர் பேச்சுவழக்கிலேயும் நுண்பொருளையும் இவர் எண்பொருளாகவே பேசுவர். தாம் கருதியதைப் பிறர் மனங்கொள்ளும்படி சொல்லுவதில் மிகவும் வல்லவர் என்று இவர் மேன்மை பெற்றிருந்தார். அறிவுடையார் எண்பொருளளவாகச் செலச் சொல்லிப் பிறர்வாய் நுண்பொருள் காண்பர் என்பதை இவர் எங்கும் காட்டி நின்றார். தொண்டை மண்டல சதகம், தண்டலையார் சதகம், புள்வேளூர் கலம்பகம் முதலிய சில நூல்களை இவர் ஆக்கியுள்ளார்.

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன் உரைத்தமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்யசேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது
நளினந் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும் கூம்பலும் இல்ல தறிவு (425)

பரிமேலழகர் உரை :- உலகம் தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந் நட்பின் கண்முன் மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒரு நிலையனவாதல் அறிவாம் என்றவாறு.

### கதை

சீனக்கர் என்பவர் சோழ நாட்டிலே அரசை என்னும் நகரிலே வாழ்ந்து வந்தார். இவரது காலம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகும். இவர் சோழ மன்னனுக்கு அமைச்சராய் இருந்தார். அறிவும் திருவும் அமையப் பெற்றவர் .இல்லையென்னாமல் எதையும் கொடுக்கும் வள்ளற்குணமுள்ளவர். யாரிடமும் இனிய பண்பினர், எவரையும் நட்பாக்கும் தகைமையுடையவர். பொய்யாமொழிப் புலவரோடு இவர் பெருநட்புக் கொண்டிருந்தார். ஒருநாளிரவு இவ்விருவரும் ஒருமஞ்சத்தில் அமர்ந்து இனிய மொழிகள் பல இயம்பியிருக்குங்கால் முதலியார் வேலையின் நிமித்தம் வெளியே சென்றார். புலவர் அதில் அயர்ந்து உறங்கினார். சிறிது பொழுதுகழிந்த பின் முதலியார் மனைவியார் அங்கு வந்தார். தனது நாயகன் என்றே கருதி அம்மஞ்சத்தில் சார்ந்து தானும் துஞ்சினார். பழிசிறிதும் இல்லாத அப்படுக்கையைச் சீனக்கர் வந்து பார்த்தார். ஒருவரும் அறியாமல் அவ் இருவருக்கும் இடையே புகுந்து ஐயமும் கவலையும் அணுவும் இன்றி அருந்துயில் கொண்டார். விடியுமுன் ஒருவர் பின் ஒருவர் எழுந்தார். மனைவியாரும் புலவரும் மனம் பதைத்து நொந்தார். முதலியார் அவரைத் தேற்றிப் பழமை போலவே புலவரோடு பொருந்தியிருந்தார். நிலைமை மாறாது அவரது நட்புரிமையைப் புலவர் நினைந்து நெஞ்சம் உருகினார். இது நாடெங்கும் பரவ அரசன் அறிந்து புலவரை அழைத்து நிகழ்ந்தது யாது என நேரே வினவினான்.

தேரையார் செவ்விளநீர் உண்ணாப் பழி சுமப்பர்
நாரியார் தாம் அறிவார் நாம் அவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியும் கொல்லிமலை நன்னாட
ஊரைவாய் மூட உலைமூடி தானிலையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று புலவர் தமது பழுதற்ற இயல்பை உலகறிய உரைத்தார். அரசனும் பிறரும் ஐயமறத் தெளிந்தார். அன்பு செய்திருந்த முதலியாரது அறிவின் பெருமையை அனைவரும் புகழ்ந்து அவர்பால் அன்பு கொண்டிருந்தார். மலர்தலும் கூம்பலும் இன்றி ஒரு நிலையாகவே அறிவுடையார் நட்புற்றிருப்பர் என்பதை உலகம் அவர்பால் உணர்ந்தது.

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல் (நாலடியார்)

## 6. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ டவ்வ துறைவ தறிவு (426)

பரிமேலழகர் உரை :- உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று; உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ்வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றான் ஒழுகுவது அரசனுக்கு அறிவு என்றவாறு.

உலகத்தை எல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லையெனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும் பழியுமாகலான் அவ்வாறு ஒழுகுதல் அறிவு அன்று.

### கதை

இராமமூர்த்தி இலங்கை புகுந்து இராவணனை வென்று சீதையைச் சிறைமீட்டுக் கொண்டு திருவயோத்தியை அடைந்து மணிமுடி புனைந்து அணி நிலம் புரந்து வருங்கால் தமது அரசியலைக் குறித்து உலகில் என்ன வதந்தி உலாவுகிறது என்று ஒரு ஒற்றரை உசாவினார். அவர்

வந்தெறி கடலை மலைகளால் அடைத்து மதிளிலங்காபுரி
யழித்து
வெந்திறலரக்கர் குலத்தை வேரறுத்து விண்ணவர் கோன்தலை
யெடுப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திதிர சித்தைக் கொன்றிராவணனை யீரைந்து தலையறுத்
துருட்டும்
சுந்தர வில்லிக் கெதிரிலை யென்று சொல்லுவார் தொல்லுல
குள்ளோர்

என்று சொல்லித் தொழுது துவண்டுமுன் நின்றார். இரகுவீரன் அப்புகழ் மொழிகளைக் கேட்டு அவ்வளவில் மகிழ்ந்து விடாமல் உலகோர் சொல்லுவதெல்லாம் ஒழியாது. உரைமின் என்று உணர உரைத்தார். மன்னன் கட்டளையை மறுத்தற்கஞ்சி மனந் துணிந்து "இராவணன் கொண்டு போய்ப் பன்னிரண்டு திங்கள் தன்னகரில் வைத்திருந்த சீதையை மறுபடியும் துணைவியராய்க் கொண்டு மானபங்கத்தை மதியாமல் இராமன் வாழுகின்றானே எனவும் உலகில் வதந்தி நிகழுகின்றது என்று அவர் கலங்கி மொழிந்தார். இராமபிரான் கேட்டு மனங்கவன்று பரதன் முதலிய தம்பியர் மூவரையும் தனியே அழைத்து உற்றதை உரைத்துச் சீதையைக் கொண்டுபோய் வனத்தில் விடும்படி செப்பினார். தேவி கற்பினுக்கு அணியாயிருந்தும் தாம் ஒப்பரும் நிலைமையைப் பெற்றிருந்தும் உலகத்தோடு மேவி ஒழுகலே ஒழுங்காம் என்றும் துணிந்து ஒழுகியிருந்தார். உலகம் எவ்வது உறைவது அவ் உலகத்தோடு அவ்வது உறைவதே அரசர்க்கு அறமாம் என்பதை அன்று அவர் ஒழுகி உணர்த்தினார்.

## 7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார் அஃதறி கல்லாதவர் (427)

பரிமேலழகர் உரை :- அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையாராவார் வரக்கடவதனை முன்னறிய வல்லார்; அறிவிலார் அஃது அறிகலாதவர் - அறிவிலராவார் அதனை முன்னறிய மாட்டாதார் என்றவாறு

### கதை

இலங்கையர் வேந்தனாகிய இராவணன் வெள்ளியங்கிரியை அடைந்து அதன் தள்ளரும் பெருமையை உணர்ந்து அரிய வீணையை விரைவிலேந்திப் பரமனை நோக்கிச் சாமகானஞ் செய்தான். வீணையின் இசையுடன் கலந்து மெய்யன்போடு பாடின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது வேதகீதத்தை வியந்து இறைவன் இரங்கி மூன்றரைக் கோடி ஆயுளும் மூவுலக உரிமையும் பிறவும் அருளி அவனைப் பேணி விடுத்தார். அவன் பெற்று வருங்கால் திருமால் உணர்ந்தார். அந்நெடிய வாழ்நாளுடன் அவனை விட்டுவிடின் பின் நிகழவிருக்கும் தமது இராமாவதாரத்தில் அவனை வெல்வது கடினம் என்று முன்னரே மேவி அறிந்தார். அதனைக் கெடுக்க விரும்பி ஒரு முனிவர் வடிவங் கொண்டு அவன் முன்னே தோன்றி இன்னுரையாடினார். அவன் பெற்றதும் உற்றதும் முற்ற உரைத்தான். "அந்தோ அரக்கர் குலதிலகமே, முழுமுதற் பரமனை அணுகி அரைவரிசையாகவா ஆயுளைப் பெறுவது இன்னும் அரை ஏறினால் நான்கு கோடி தேறுமே ஆதலால் முன்னம் தந்த மூன்றரைக் கோடியும் ஒழிய அரைக்கோடி மாத்திரம் இன்னம் ஈந்தருள்க என்று அம்முன்னவன் பால் போய் இன்னும் மொழிக என்று மாயவன் மூட்டி விடுத்தான். ஆவதை அறியாமல் இராவணன் ஓடினான். முன்னம் அருளின மூன்றரைக் கோடியும் ஒழிய இன்னம் அரைக்கோடி ஆயுளே இனித் தந்தருள் என்றான். மாயவன் செய்த மாயமிது என்று அத்தூயவன் நகைத்து அவ்வாறே ஆகுக என்றான். அவ் அரக்கர் தலைவன் அரையோடு மீண்டான். அம்முடிவை முடிவில் அறிந்தான். முன் அறியாது போனமைக்காக நெடிது வருந்தினான். முன் எண்ணியறிந்த மாயன் அதன் பயனைப் பின் நண்ணி மகிழ்ந்தான். அறிவுடையார் ஆவதனை முன்னரே எண்ணி அறிவார்; அறிவிலார் அதனை அறியார் என்பதனை இவ் இருவரும் அன்று உணர்த்தி நின்றனர்.

## 8. அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் (428)

பரிமேலழகர் உரை :- அஞ்சுவது அஞ்சாமை பேதமை - அச்சப்படுவதனை அஞ்சாமை பேதமையாம்; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அவ் அஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

சகுனி, கர்ணன், துரியோதனன் முதலியோர் வஞ்சமாகச் சூழ்ந்து பொன்மயமான அழகிய மாளிகை ஒன்றை அமைத்து அதன் புதுமை காணுமாறு தருமர் முதலிய ஐவரையும் பொருந்த அழைத்தார். அவர்களும் திருந்திய விருந்தினராய் அங்கு சேர்ந்து வந்தார்கள். கருதியதை எய்தலாம் என்று அவரனைவரும் பெரிதும் மகிழ்ந்து எதிர் உபசாரம் புரிந்து இசைந்து சூழ்ந்தார். வஞ்சமில்லாத ஐவரும் அவரோடு நெஞ்சங் கலந்து சென்று முதியோரை எல்லாம் தொழுது மூதையோடு தங்கி மறுநாள் புதிய மண்டபத்துட் புகுந்தார்கள். அதன் அரிய நலங்களைக் கண்டார்கள். பெருமகிழ்வு கொண்டார்கள்.

இந்தமண்ட பஞ்சமைத்த இனிமைதன்னை என்சொல்வேன்
முந்தைமண்ட பங்களுக்கும் முதன்மையான தேவரூர்
அந்தமண்ட பத்துமில்லை அதனையன்றி மண்ணின்மேல்
எந்தமண்ட பத்துமில்லை இதனினுள்ள எழிலரோ

என்று வியந்து புகழ்ந்து அங்கு அமைந்திருந்த ஆசனத்தின் மீது தம்பிமார் புடைசூழத் தருமர் அமர்ந்திருந்தார். "அமுதம் போன்ற உணவை நாம் போய் அருந்தும் அளவும் பொழுது போக்காக வஞ்சகமில்லாத நமது மாமனும் நீங்களும் கொஞ்சம் சூது ஆடுங்கள் பார்ப்போம்" என்று தருமரிடம் துரியோதனன் கூறினான். அதனைக் கேட்டவுடன் அவர் வாட்டமுற்றார். சகுனி நெருங்கினான். "நீதிநூல்கள் பலவும் ஓதி அறியினும் சூதாடல் தெரியாமை தீதேயாகும்." வேந்தருக்கும் வீணருக்கும் அது வேலைதானே. அம்முறையில் நாமிருவரும் அதனை ஆடுதற்கு உரியவரே அதனால் அஞ்சவேண்டாம் நெஞ்சம் தேறுங்கள், கொஞ்சம் ஆடுங்கள், வாருங்கள் என்று அஞ்சாது கூறினான். தருமர் அஞ்சி வருந்தினார். அஞ்சப்படுவதாய பழிச்செயலுக்குப் பேதையர் அஞ்சார். அறிவுடையார் அஞ்சுவர் என்பதை உலகம் அவ்விருவர் பாலும் உணர்ந்து தெளிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. எதிரதாக் காக்கும் அறிவினர்க் கில்லை
## அதிர வருவதோர் நோய் (429)

பரிமேலழகர் உரை : எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு - வரக்கடவதாகிய அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினை உடையார்க்கு; அதிரவருவது ஓர் நோய் இல்லை - அவர் நடுங்க வருவதொரு துன்பமும் இல்லை என்றவாறு.

### கதை

காந்தன் என்பவன் இற்றைக்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னர் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து அரசுபுரிந்த ஒரு சோழமன்னன். கல்வி கேள்விகளில் வல்லுநன். உலகியலறிவோடு உயர்குணமுடையவன். அகத்திய முனிவர் பால் பேரன்பு கொண்டவன். அவரருளிய காவிரி நதியைத் தன்நிலம் முழுவதும் பரப்பி வளமுறச் செய்தவன். இவன் அரசு புரிந்து வருங்கால அரசகுலத்தை வேரறுத்து வந்த பரசுராமன் இவனையும் அழிக்க வந்தான். அவன் வரவை முன்னதாகவே இவன் உய்த்தறிந்தான். அவனோடு எதிர் நின்று சமர்செய்ய எவருக்கும் இயலாது என்பதையும், அரசமரபினரையன்றிப் பிறர் ஒருவரையும் அவன் வென்றிலான் என்பதையும் இனிது தெளிந்தான். தன் காமக்கிழத்தியின் புதல்வனாகிய ககந்தன் என்பவனை அழைத்து அரசனாக்கி வைத்து உற்றதை உரைத்து வேறிடத்தில் ஒதுங்கியிருந்தான். மழுவாள்வீரர் மறுநாள் வந்தார். ககந்தன் அரசுக்குரிய குலமகன் அல்லன் என்பதை அறிந்தார். யாதுஞ் செய்யாது அகன்று சென்றார். நாள் பல கழிந்த பின் காந்தன் தனது நகரை அடைந்தான். தான் முன்னறிந்து காத்ததனால் தன்னரசு இன்னலின்றி இருப்பதை எண்ணி இவன் இன்புற்றான்.

**"எதிரதாக் காக்கும் அறிவினர்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்"**

யாதும் இல்லை என்பதை நன்றாய் அறிந்து அகமகிழ்ந்து இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர் (430)

பரிமேலழகர் உரை :- அறிவுடையார் எல்லாம் உடையார்- அறிவுடையார் பிறிதொன்றும் இலராயினும் எல்லாம் உடையராவர்; அறிவிலார் என்னுடையரேனும் இலர் - அறிவில்லாதார் எல்லாம் உடையராயினும் ஒன்றும் இலராவர் என்றவாறு.

## கதை

துருவன், உத்தமன் என்போர் உத்தானபாதன் என்னும் மன்னனுடைய புதல்வர்கள். அவ் அரசனுக்கு மனைவியராயிருந்த சுநீதி சுருதி என்னும் இருவரிடமும் இவ்விருவரும் முறையே பிறந்தார். அரசன் இளந்தேவிபால் முதிர்ந்த காதலையுடையவனாய் இருந்தான். அதனால் அவள் மூத்த மனைவியையும் புதல்வனையும் முனிந்து நீக்கினாள். அரசனும் இசைந்து யாதும் பேசாது அமைந்திருந்தான். மகனுடைய எளிய நிலைமையை நினைந்து சுநீதி துயர்மிகுந்து நொந்தாள். துருவன் இயல்பாகவே நிறையும் ஆண்மையும் அறிவும் உடையவன். தாயின் உளம் தெளியுமாறு இதம்பல மொழிந்தான். தனியேயிருந்தான். அறிவே துணையாக அருந்தவம் புரிந்தான். அதில் நேர்ந்த அல்லல்கள் எல்லாவற்றையும் கடந்து தவத்தின் எல்லையைக் கண்டான். இறைவன் அருளைக் கொண்டான். அதனால் சிறந்த திருவையும் என்றும் அழியாத உயர்ந்த பதவியையும் இவன் எய்தி மகிழ்ந்தான். இவன் இங்ஙனம் இருக்குங்கால் தந்தை இறந்தான். தம்பியான உத்தமனே அரசுரிமையைப் பெற்றான். இவன் திண்ணிய நெஞ்சினன் ஆயினும் நூலறிவும் கேள்வியும் சாலப் பெறாதவன். அரச முறைமையை மறந்தான். மது முதலிய இழிந்தவற்றைப் பருகி எவரையும் மதியாமல் இருந்தான். இவன் மனைவி பெயர் பதுமினி. அவள் அழகும் குணமும் அமையப் பெற்றவள். அவளோடு பொருந்தியிருந்து இவன் அரும்போகம் துய்த்து வருங்கால் ஒருநாள் அவளையும் கள் அருந்துக என்றான். அது கொடிதினுங் கொடிது என்று கடிந்து மொழிந்தாள். அதனால் அவளை இவன் வெறுத்து விலக்கினான். அவள் விலகியிருக்குங்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலபோதகன் என்னும் அரசனொருவன் அவளைக் கவர்ந்து சென்று தன் கடிநகர் புகுந்தான். தனியே வைத்தான். அவனது தீய எண்ணத்திற்குச் சிறிதும் இடங்கொடாமல் அத்தூயவள் இருந்தாள். அவனால் கவரப்பட்டிருந்தும் மதிநலத்தால் தன்கற்பைக் காத்துப் பதுமினி காலங்கருதியிருந்தாள். அவ் உத்தமி அங்ஙனம் இருப்ப உத்தமன் என்னும் உணர்விலி வேட்டையின் பொருட்டு ஒருநாள் காட்டுக்குச் சென்று அங்கு வந்திருந்த இயக்கனொருவனால் கொல்லப்பட்டான். அரசழிந்தது என்று உலகில் அவலம் மிகுந்தது. தன் அறிவுடைமையால் உயர்பதம் எய்தியிருக்கும் துருவன் தன் குலம் அழிந்ததென்று வருந்தி விரைந்து வந்தான். பதுமினி இருக்கும் இடத்தை அடைந்து சாலபோதகனை வென்று அவளைச் சிறைமீட்டுக் கொண்டு தன் நகர் புகுந்து பிரமி என்னும் ஒரு கன்னியை மணந்து தம்பியின் மனைவியைத் தனிவைத்துப் பேணி மணிமுடி புனைந்து அரசை அணிபெற நடத்தி கலுபன் வற்கன் என்னும் இருபுதல்வரைப் பெற்று இசை திசை பரப்பி இருபதாயிரம் ஆண்டுகள் இவ்வுலகத்தை இன்புற ஆண்டு மீண்டும் தன்பதம் மேவியிருந்தான். இவனது பதத்துக்குத் துருவமண்டலம் என்று பெயர். இது சப்தரிஷி மண்டலத்திற்கு மேல் பதின்மூன்றிலக்கம் யோசனை தூரத்தில் இருக்கின்றது என்பர். ஒன்றும் இல்லாதவனாய் இருந்தும் தன் அறிவுடைமையால் அரச திருவையும் அழியாத அரிய பதவியையும் துருவன் அடைந்தான். எல்லா நலங்களும் உடையவனாய் இருந்தும் உத்தமன் அரசும் இழந்து தானும் இழிந்து அழிந்தான். அறிவுடையார் எல்லாம் உடையர். அறிவிலார் என்னுடையரேலும் இலர் என்ற உண்மையை உலகம் இவர்கள் பால் உணர்ந்து கொண்டது.

## 44ம் அதிகாரம். குற்றங்கடிதல்

அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்கள் ஆறனையும் அரசன் தன்கண் நிகழாமல் கடிதல் என்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் பெருமித நீர்த்து. (431)

பரிமேலழகர் உரை :- செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும்; வெகுளியும் காமமுமாகிய குற்றங்களில்லாத அரசனது செல்வம்; பெருமித நீர்த்து - மேம்பாட்டு நீர்மையினை உடைத்து என்றவாறு.

**கதை**

நம்பி நெடுஞ்செழியன் என்பவன் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் மதுரையிலிருந்து அரசுபுரிந்த ஒருமதிகுல மன்னன். அரசர்க்கு வேண்டிய அறிவு ஊக்கம் முதலிய உயர் குணங்கள் எல்லாம் ஒருங்கேயுடையவன். சிறந்த போர் வீரன். நிறையும் பொறையும் முறையும் உள்ளவன். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்ந்தவன். குற்றங் களைதலே உணர்வின் பயன் என்பதை முற்றும் உணர்ந்தவன். மிகை செய்யும் பகைவர் மாட்டன்றிப் பிறரெவர்மாட்டும் நோவன செய்யான்.

ஆருயிர்க்கெல்லாம் ஆவன செய்தே அன்புடன் ஆண்டான். தன்னை ஒருபோதும் வியவான் நன்மை பயவான வினையைக் கனவிலும் நயவான். பெருந்திருவும் அருந்திறலும் பொருந்தியிருந்தும் செருக்கு முதலிய இழிகுணங்கள் சிறிதும் அறியான். இவனது செல்வம் நதி போல் பெருகி எல்லா உயிரும் இன்புற நின்றது. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லாரது பெருக்கம் பெருமிதம் அடையும் என்பதை உலகம் இவன்பால் கண்டது.

## 2. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா உவகையும் ஏதம் இறைக்கு (432)

பரிமேலழகர் உரை : இவறலும் - வேண்டும்வழிப் பொருள் கொடாமையும், மாண்பு இறந்த மானமும் - நன்மையின் நீங்கிய மானமும்; மாணா உவகையும் - அளவிறந்த உவகையும்; இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

இளவெளிமான் என்பவன் பலநூற்றாண்டுகட்கு முன்னர் சோழநாட்டிலேயிருந்த சிற்றரசனாகிய வெளிமான் என்பவனுடைய தம்பி மன்னனான வெளிமான் மிக்க தண்ணளியுள்ளவன். கல்வியருமை அறிந்தவன். புலவர்கள் பால் பேரன்புடையவனாய் பெரும்பொருள் தந்து அரும்புகழ் கொண்டான். அவன் இடையே கடிதின்மாண்டான். அதனால் பின்னவனாகிய இளவெளிமான் மன்னவனானான். இவன் பேராசையுள்ளவன். பணிவு இல்லாதவன். அரசர்க்குரிய துணிவும் இல்லாதவன் ஆயினும் தன்னையே வியந்து தருக்கி இருந்தான். தனக்குக் கிடைத்த பதவியை எண்ணிப் பெருங்களிப்புற்றுப் பொருந்திய போகங்களிலே பதுங்கித் துய்த்தான். இவன் இங்ஙனம் இருந்துவருங்கால் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பெருமான் அங்கு வந்தார். வெளிமான் இறந்தமைக்கு மிகவும் இரங்கினார். அவன் இறக்கு முன்னரே ஒரு பெருந் தொகைப் பொருளை இவருக்குக் கொடுக்கும்படி தம்பியிடம் கூறியிருந்தான். அப்படியிருந்தும் புலவரைக் கண்டு இவன் போற்றவில்லை. உள்ளிருந்தபடியே ஒருவனிடம் சிறிது கொடுத்துப் புலவருக்கு அனுப்பினான். தனது அருமையை அறியாத இவனது சிறுமையைப் புலவர் அறிந்து சினந்து ஒன்றுங் கொள்ளாது உடனே மீண்டார். குமணனைப் போய்க் கண்டார். அப்புண்ணிய வேந்தன் புலவரைப் போற்றி மகிழ்ந்து பெரும்பொருளோடு யானையும் பிறவும் அன்புடன் கொடுத்தான். புலவர் அவனைப் புகழ்ந்து மகிழ்ந்து யானைமேலேறி ஆரவாரத்துடன் இளவெளியான் ஊரையணுகி அவனது காவல் மரத்தில் யானையைக் கட்டி விட்டுக் அவன்பால் வந்தார். காவல் மரம் என்பது அரசர் தமது ஆட்சியின் மாட்சிக்கு அறிகுறியாக தம் நகர்புறத்தில் பொழில் அமைத்து அதன் நடுவே வைத்துப் போற்றப்படுவது. அஃது இது பொழுதுள்ள கொடி போல்வதாம். பகைவர் வந்து அதனை தீண்டினும் அதனையுடைய அரசர்க்கு தோல்வியும் அழிவும் வந்ததாகக் கருதப்படும். அத்தகைய கடிமரத்தில் தனது யானையைக் கட்டிவிட்டுக் கடிதின் வந்து அவனை வெளியே வரும்படி அழைத்தார். அவனும் வந்தான். "இளவெளிமானே" என்று சிறப்புளகரத்தோடு அவனையிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளித்தார். "அறிவுடையாரை மதித்தலே அரசர்க்கு அழகாம்; இல்லை என்பதை விட இவ்வுலகிலே மிக இழிந்தது இல்லவே இல்லை. அவ் இழிவை நீ எண்ணலை; எம்போல்வாரை மதித்துப் போற்றுவார் இவ்வுலகில் பலர் உளர் என்பதற்கு உன் காவல் மரத்தில் உள்ள கரியே கரியாம்; அதனை நீ இப்பொழுதே போய்க் காண். உன்குற்றம் நீங்குமாறே இங்கு யான் வந்து உற்றதை உணர்த்தினேன்; உணர்விருந்தால் உணர்" என்று நம்புலவர் பெருமான் உரைத்துவிட்டு உவந்து சென்றார். அதுமுதல் அவன் அனைவராலும் இழிக்கப்பட்டான்.

**"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு"**

என்பதனை இளவெளிமான் எண்ணியெண்ணி உள்ளம் நொந்தான்.

### 3. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாகக் கொள்வர் பழிநாணு வார் (433)

பரிமேலழகர் உரை :- பழி நாணுவார் - பழியை அஞ்சுவார்; தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத் துணையாக் கொள்வர் - தங்கண் தினையளவாம் குற்றம் வருவதாயினும் அதனை அவ்வளவாகவன்றிப் பனையளவாகக் கொள்வர் என்றவாறு.

#### கதை

மருதி என்பவள் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த தருமசீலன் என்னும் ஒரு வேதியன் மனைவி. இவளது காலம் அரச மரபினரை வேரறுத்து வந்த பரசுராமன் காலமாம். இவள் பேரழகுடையவள். திருந்திய பண்பும் சீலமும் வாய்ந்தவள். ஒரு நாள் காவிரி நதியில் நீராடிவிட்டுத் தன் இல்லம் நோக்கி இவள் வந்தாள். வருங்கால் அந்நகரை அது பொழுது ஆண்டு வந்த சுகந்தன் என்னும் காவலன் மகன் இவளைக் கண்டான். அவன் பெயர் காமந்தன் என்பர். அவன் இவளது உருவிலும் அழகிலும் ஈடுபட்டுத் தன் உள்ளம் உருகினான். விரைந்து சென்று இங்கே வா! என்று இவளை எதிருற அழைத்தான். அதனைக் கேட்டவுடனே அகம் கலங்கி இவள் அங்கம் பதைத்தாள். புகன்றதை நினைந்து பொங்கி அழுதாள். என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனையன்றிப் பிறர் எவரையும் நான் கனவிலும் கருதிலேன். இத்தீயவன் இன்று என்னைத் தீங்கிற்கு அழைத்தான். இக்குற்றம் என்பால் வர நான் என்ன குற்றம் செய்தேன். அந்தோ! இனி இவ்வுடலோடு இருத்தல் ஒல்லேன் என்று பூதசதுக்கம் புகுந்து தன் ஆவியைப் போக்க வேண்டினாள். பூதசதுக்கம் என்பது அந்நகரில் நடுவீதியில் உள்ள ஒரு பலிபீடம். தீமை செய்தவர் தாமேயிழுக்கப்பட்டு அங்கு வந்து அடிபடுவார். அத்தகைய தரும பூதம் ஒன்று சோழரது வரபலத்தால் அங்கு நிலைபெற்றிருந்தது. அந்தப் பூதம் மருதியை நோக்கி "பாவையீர்! நீர் நெறி திறம்பாத நீர்மையினள் ஆயினும் கணிகையர் ஆடல்களையும், யாழின் பாடல்களையும், வினோதக் கூத்துக்களையும் விழைந்திருந்தாய். அப்பிழைகள் நின்பால் இல்லையேல் நின்னை விழைந்தவன் உடனே உன் கற்புத்தீயால் இறந்திருப்பான். இதுவேயன்றி யான் சொல்லும்படியான குற்றம் ஒன்றும் நின்பால் இல்லை. ஆதலால் யான் சொல்வேன் போ" எனப் பூதம் இவளைப் புறத்தே போக்கியது. இவள் மீண்டாள். அதுமுதல் அக்குற்றங்களை நீக்கித் தன்னை முற்றும் காத்தாள். தன்மேல் வந்த சிறு குற்றத்தையும் பெரிதாகக் கொண்டு உயிர்விடத் துணிந்த இவளது குணநலங்களையும் உணர்வையும் அனைவரும் வியந்தார்.

"**தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாகக்**
**கொள்வர் பழிநாணு வார்**"

என்பதை உலகம் இவள் பால் கண்டு தெளிந்தது.

## 4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே அற்றம் தரூஉம் பகை (434)

பரிமேலழகர் உரை :- அற்றம் தரூஉம் பகை குற்றமே - தனக்கு இறுதி பயக்கும் பகை குற்றமே; குற்றமே பொருளாகக் காக்க - ஆகலான், அக்குற்றம் தன்கண் வராமையே பயனாகக் கொண்டு காக்க வேண்டும் என்றவாறு.

**கதை**

வருணன் என்பவன் திக்கு பாலகரில் ஒருவன். இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இவ் எண்மரும் கிழக்கு முதலிய திக்குகளில் நிரலே நின்று முறையே காப்பர். அதனால் அவரை அட்டதிக்குப் பாலகர் என்பர். அவருள் இவன் மேற்குத் திசைக்குத் தலைவன். சிவந்த திருமேனியும் பாசம் ஏந்திய கையும் உடையனாய் மகராசனத்தில் வீற்றிருந்து தனது திசைக்காவலை இசையுறச் செய்வான். நன்னீர தர இவ்வுலகில் குளங்களையும் கூவல்களையும் தோண்டினவரும், தண்ணீர்ப்பந்தல் வைத்து உண்ணீர் உதவினவரும் மறுமையில் இவன் பதமாகிய வருணபதத்தையடைந்து மகிழ்வுற்றிருப்பர். இவனது நகரத்திற்குச் சித்திராவதி என்று பெயர். மனைவி பெயர் சேட்டை. தருமன் என ஒரு புதல்வனும் சுநந்தை, வாருணி என இரு புதல்விகளும் இவனுக்கு உண்டு. இவன் ஒரு நாள் பிரமாவைக் காணச் சென்றிருந்தான். அங்கு நிகழ்ந்த வேள்வியின் பொருட்டு தேவரும் தேவ கன்னிகைகளும் திரண்டு வந்தார்கள். முறையே சென்று பிரமாவை வணங்கி அவர் முன்கூடியிருந்தார்கள். வருணன் முதலிய அமரரனைவரும் அமர்ந்திருக்கும் போது வாயு குறும்பு செய்தான். உத்தரீயம் ஒதுங்கவே முத்தாரந் தவழ்கின்ற அவள் மோக உறுப்பு முழுதும் வெளியே தோன்றியது. அமரர் அனைவரும் நாணிக்கவிழ்ந்தார். வருணன் மாத்திரம் நாணாது நோக்கி நகை.. கூர்ந்தான். மோக வெள்ளத்தில் மூழ்கித் தியங்கும் இவனது குறிப்பை அயன்குறித்து நோக்கினான். புனிதமான பெரிய எண்ணங்களையே எண்ணுதற்குரிய இப் பேரவையில் சிறிய எண்ணத்தை எண்ணினானே என்று அயன் கறுத்து வெறுத்தான். புல்லிய மக்கள் செயலை இன்று புல்லினாய் ஆகையால் உன்பதம் இழந்து நீ மண்பதம் இழிக என்று சபித்தான். தன் குற்றத்தை நினைந்து வருணன் குலைந்தான். அதனால் வந்த அற்றத்தை அடைந்தான். அஞ்சி நடுங்கினான். தன் குற்றமே தனக்குக் கேடு தந்தது என்று அதனைக் குறித்து நொந்து அயன் குறித்தபடியே வருணன் மண்ணுலகை அடைந்தான். அச்சாபமே வருணனே பின் சந்தனுவாயினான். பகைவர் இல்லாதிருந்தும் தன் காமச் சிறுமையால் வருணன் பூமியில் பிறந்தான் என்று அவன் உறவினர் பொருமிச் சென்றார்.

**"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**
**அற்றம் தரூஉம் பகை"**

என்பதை அமரர் அனைவரும் இவன்பால் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் (435)

பரிமேலழகர் உரை :- வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை; எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் - அது வந்தால் எரிமுகத்து நின்ற வைக்குவை போல அழிந்து விடும் என்றவாறு.

**கதை**

திரிபுரர் என்பவர் தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் மூவர். இவர் தாருகாசுரனுடைய புதல்வர், தாம் புரிந்த அருந்தவத்தின் பயனாக இம்மூவரும் பல உயர் நலங்களை அடைந்து பொன் வெள்ளி இரும்பு என்னும் மூவகை உலோகங்களாற் செய்யப்பட்ட மூன்று நகரங்களையும் பெற்றார். அவை எண்ணிய இடங்கட்கெல்லாம் ஏகி மீளும் இயல்பினையுடையன. கனகபுரி, இரசிதபுரி, அயபுரி என அவை முறையே கூறப்படும். தாரகாக்கன் முதலிய மூவரும் அவற்றுள் முறையேயிருந்து அரசு செலுத்தினார். விரைந்து சுழன்று திரிந்து வருகின்ற இம்முப்புரங்களிலுமிருந்து முறை புரிந்தமையால் இவர் திரிபுரர் எனப்பட்டனர். இவர் முதலில் அறிவும் ஆற்றலுமுடையவராய் இறைவன்பால் மிகுந்த அன்புற்றிருந்தார். பின்பு செல்வக்களிப்பால் தம் உள்ளந் திரிந்து தேவர் எல்லார்க்கும் தீங்கினை இழைத்தார். திருமாலும் இவர்க்கு ஒரு குருவாகிச் சென்று இவருள்ளம் பெருமை கொள்ளும்படி போதித்துவைத்தார். அதனால் மேலும் மேலும் செருக்கும் சினமும் மிக்குச் சிறுமையிழைத்துச் சிவனையும் பழித்தார். இவர்பால் தீங்கு மிகுந்ததைத் தேவன் தெரிந்து சிவன்பால் வந்து திரிபுரர் வாழ்க்கையைத் தீர்க்க மொழிந்தார். அரிய அயன்முதலா அகிலமுந்துணைவர அவரும் எழுந்தார். பிரிந்தகன்றிருந்த அம்மூன்று புரங்களும் ஒருங்கேயமைந்து ஒன்றி நின்றன. கொடுமையின் மிகுதியால் தமது நிலைமையை அழிக்க முதல்வன் வந்துள்ளான் என்பதை அம்மூவரும் முன்னறிந்து காவாமல் பின்எதிர்த்து முனிந்தார். அப்பொழுது உடனின்றார்களுடைய தன்மையையும் உணர்ந்த மூவர்களுடைய புன்மையையும் முன்னவன் உன்னிச் சிறிது புன்னகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். அதனால் மூன்றும் எரிந்தழிந்தது. அம்மூவர் மாத்திரம் இறையருளால் ஓடி உய்ந்தார். குற்றம் தம்பால் வருமுன்னரே காவாமையால் தாம் பெற்றிருந்த வாழ்க்கையை அம்மூவரும் முற்றும் இழந்தார். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்வைத்தூறு போலக் கெடும் என்பதை உலகம் அவர்பால் உணர்ந்தது.

## 6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின் என்குற்றம் ஆகும் இறைக்கு (436)

பரிமேலழகர் உடை :- தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிப்பின் - முன்னர் தன்குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர் பிறர்குற்றம் காண வல்லவனாயின் இறைக்கு ஆகும் குற்றம் என்ன என்றவாறு.

**கதை**

குலசேகர பாண்டியன் என்பவன் மதுரையில் இருந்து அரசுபுரிந்த மன்னருள் ஒருவன். கொற்கையிலும் இவன் சிலகாலம் இருந்தனன் என்பர். இவனது காலம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னராம். இவன் தன் உயிர் போலவே மன்னுயிரனைத்தையும் எண்ணி ஒழுகிய புண்ணிய வேந்தன். வஞ்சனை தீவினை மறந்த நெஞ்சினன். மெய்யே புகழும் தூய நாவினன். ஒருநாளிரவு இவன் மாறுவேடம் பூண்டு நகரின் இயல்பை அறியுமாறு நாடிச்சென்றான். அங்கு காசி யாத்திரை போக விரும்பிய கீரஞ்சை என்னும் வேதியன் ஒருவன் தனிமையில் இருக்கப் போகும் தன்மனைவியை அழைத்து "உயிரை உடல் காப்பது போலவும், கண்ணை இமை காப்பது போலவும் இந்த நாடு முழுவதையும் இனிது காக்கும் நமது குலசேகர மன்னன் இருக்கும் போது நீ ஏன் கவல்கின்றாய்" என்று சொன்னான். அவ்வேதியன் சொன்னதை இவ்வேந்தன் கேட்டான். அன்றுமுதல் அவளைப் புதல்வியாகப் போற்றி வந்தான். அவளை மாத்திரம் தனியே பேணின் உலகம் மாறுபடக் கருதிடும் என்று கருதி அவ்வீதியில் உள்ள வேதியர்களுக்கெல்லாம் ஒருபடியாகப் படியளவு செய்தான். திங்கள் பன்னிரண்டு சேரக் கழிந்தன. சென்றிருந்தவன் திரும்ப வந்தான். மனைவி கண்டாள்; மகிழ்வு கொண்டாள். அன்றிரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியோடு தனியே இருந்து போனதும் வந்ததும் அவன் புகன்று கொண்டிருந்தான். பார்ப்பாள் வந்ததை அரசன் அறியாதவனாதலால் வழக்கம் போல் அன்றும் பார்க்க வந்தான். உள்ளரவங் கேட்டான். தன் உள்ளங் கொதித்தான். கள்வனே என்று கனன்று தன்கையால் அக்கதவைத் தட்டினான். வேதியன் வெருண்டு யாரென வினவினான். உள்ளிருப்பவன் உடையவன்தான் என்று அரசன் உணர்ந்தான். அவன் ஐயுறாதவாறு அவ்வரிசையில் இருந்த எல்லா இல்லங்கள் தோறும் அவ்வகையே செய்து சென்றான். மறுநாள் அந்தணர் எல்லாம் திரண்டு அரசன் முன்வந்து இரவு நிகழ்ந்ததை இயம்பி நின்றார். அரியணையில் அமர்ந்திருந்த அரசன் அங்கிருந்த அமைச்சரை நோக்கி இவ்வாறு செய்தவனை என்ன செய்யலாம் என்றான். கதவு தொட்ட கையை வெட்ட வேண்டும் என்று அனைவரும் ஒட்டி மொழிந்தார். உடனே அரசன் தன் உடைவாளை உருவித் தொட்டகை இது தான் என்று வெட்டி வீழ்த்தினான். நிகழ்ந்ததை அறிந்து அனைவரும் நெஞ்சம் உருகினர். இறைவன் அருளால் அவ் அரசனது முற்கை பொற்கையாகிப் பொருந்தி நின்றது. அன்று முதல் பொற்கைப்பாண்டியன் என்று இவன் போற்றப்பட்டான்.

குற்றம் யாதும் இன்றிக் கொற்றமுற்று நின்ற இவன் குணநலத்தை அமரரும் கொண்டாடி நின்றார். தன் குற்றத்தை முன்னம் நீக்கும் மன்னனுக்கு ஒரு குற்றமும் பின்னர் உண்டாகாது என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து கொண்டது.

கொற்கையான் மாறன் குலேச கரப்பெருமான் பொற்கையான் ஆனகதை போகாதோ - நற்கால மன்றிலே வாரி மணிவாசலை யடைத்த தென்றலே ஏன்வந்தாய் செப்பு.

## 7. செயற்பால செய்யா திவறியான் செல்வம் உயற்பால தன்றிக் கெடும் (437)

பரிமேலழகர் உரை :- செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளால் செய்யவேண்டுவன செய்து கொள்ளாது, அதன்கண் பற்றுள்ளம் செய்தானது செல்வம். உயற்பாலது அன்றிக் கெடும் - பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

மூவன் என்பவன் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் கொங்குநாட்டிலிருந்த ஒரு குறுநில மன்னன். நில வளமும் நீர்வளமும் இவன் நாட்டில் நிரம்பியிருந்தன. எல்லாச் செல்வங்களும் எய்தியிருந்தும் பொல்லாத ஆசையும் இவன் உள்ளத்தில் புகுந்திருந்தது. அதனால் பொருள் மேல் இவன் பெரும்பற்றுள்ளவனாயினான். ஆயினும் வெளித்தோற்றத்தில் எவரோடும் இவன் உவகையோடு பேசுவான். தன்பால் ஒன்று பெற விரும்புகின்றான் என்று ஒருவனை இவன் குறிப்பால் உணர்ந்து விட்டால் அதன் பின் இவனை அவன் காண்பதரிது. கோழை நெஞ்சினன். தான் கொண்டதை முதலை வாய்விடினும் தன்முதலை இவன் கைவிடான். இவனது இயல்பினை உணராமல் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பெருமான் இவன்பால் பரிசில் பெற வந்தார். அவரைக் கண்டு உரையாடுவதற்கும் அஞ்சி இவன் உள்ளே ஒதுங்கியிருந்தான். அப்பொல்லாச் செயலைப் புலவர் அறிந்தார். உள்ளந் திரிந்தார். "மூவனே! பழம் பெறவிரும்பிப் பறந்து வந்த ஒரு பறவை தான் விரும்பிய மரத்தில் பழம் இல்லையானால் அது எங்ஙனம் தளர்ந்து மீளுமோ அங்ஙனமே நான் இன்று வருந்தி மீள்கின்றேன்." என்று புலவர் கரைந்து மீண்டார். பெரியோர்கள் உள்ளம் பேதித்தால் எப்பொருளும் பேதிக்கும். ஆதலால் அன்று முதல் இவன் செல்வம் குன்றி அழிந்தது. இவறியான் செல்வம் உயற்பாலது இன்றிக் கெடும் என்பதை உலகம் இவன்பால் கண்டு தெளிந்தது.

## 8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும் எண்ணப் படுவதொன் றன்று. (438)

பரிமேலழகர் உரை :- பற்றுள்ளம் என்னும் இறைவன்மை - பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளமாகிய உலோபத்தினது தன்மை; எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று குற்றத்தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவதொன்றன்று, மிக்கது என்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

கவேதன் என்பவன் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் விதர்ப்ப நாட்டை ஆண்டிருந்த சுதேவன் என்னும் வேந்தன் புதல்வன். இவன் காமினி என்னும் ஓர் அழகிய மங்கையை மணந்து காதலின்பம் துய்த்தான். தந்தை மாண்டபின் பூமியை இவனே பொருந்த ஆண்டான். பணிவு இன்சொல் முதலிய நல்ல குணங்கள் எல்லாம் இவன்பால் இயல்பாகவே பொருந்தியிருந்தது. ஆயினும் பொருள்மேல் பெரும்பற்று உள்ளவன். பெருந்திருவுடையவனாயிருந்தும் பிறர்க்கு உதவி செய்வதில் சிறிதும் மனமில்லாதவன். ஈய்ந்து இன்புறாமல் எல்லா இன்பங்களையும் அனுபவித்தான். தன்பால் இயல்பாக அமைந்திருந்த குணமாட்சிகளைத் தன்பற்றுள்ளத்தால் இவன் பற்றா திழந்தான். தன்நலமே கருதிப் பிறர் நலம் பேணாத கடு உலோபியாயிருந்தும் முதிர் பருவத்தில் அரசாட்சியைத் தன்மகன்பால் வைத்துவிட்டு சிறிது காலம் அருந்தவம் புரிந்தான். அதன் பயனாக மறுமையில் இவன் அயன்பதம் அடைந்தான். இன்பவுலகமாகிய தெய்வப்பதவியை அடைந்தும் பசிநோயால் இவன் துன்பமே அடைந்தான். இதற்குக் காரணம் யாது என்று இவன் கலங்கி அழுதான். பிரமன் தோன்றி "நீ முன்பு அரசனாய் இருக்கையில் ஒருவருக்கும் உதவாமல் நீயே உண்டுவந்தாய். அப்பாபத்தின் பயனே பசி நோயாய் வந்து இங்கு உன்னைப் பற்றியுள்ளது இது தீரவேண்டுமாயின் நீ முன் தவம் புரிந்த இடத்தில் உள்ள வாவியில் உன் கொழுத்த பிணவுடல் மிதக்கும். அதனை நீ தின்று தீர்ப்பையேல் அப்பசி நின்றுபோம்" என்றார். அவ்வாறே இவன் அங்கு வந்தான். தன்னுடல் மிதக்கக் கண்டான். பசி நோய்க்கஞ்சி அதனைப்பற்றி மிசைந்தான். நாளும் நாளும் வந்து மிசைந்தும் அவ்வுடல் மீள மீள வளர்ந்து நிறைந்தது. தெய்வப் பதவியை எய்தியும் இப்பெருந் துன்பத்தை எய்தி வருந்துகின்ற இவன் ஒருநாள் தின்றுகொண்டிருக்குங்கால் அங்கு வந்த அகத்திய முனிவரைக் கண்டான். பிணமும் தொலைந்தது. பசியும் அகன்றது. முனிவரது காட்சியால் எய்திய மாட்சியென்று தெளிந்து விரைந்து சென்று அவருடைய திருவடியைப் பணிந்து நின்று ஒரு மணியணியைத் தந்தான். தெய்வவுருவுடன் நிற்கும் இவனது வரலாற்றை அவர் தெரிந்தார். பிறகுற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுள்ளும் அரசர்க்கு உலோபத்தால் உளவாம் தீமையை உணர்த்தினார். முற்றிய திருவுடனிருந்தும் பற்றுள்ளத்தாற்றான் உற்ற துயரையும் பெற்ற பழியையும் எண்ணி இரங்கிப்பின் எழுந்து சென்றான். பற்றுள்ளம் என்னும் உலோபம் எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று என்பதை உலகம் இவன்பால் அறிந்து தெளிந்தது.

## 9. வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க நன்றி பயவா வினை (439)

பரிமேலழகர் உரை :- எஞ்ஞான்றும் தன்னை வியவற்க
தான் இறப்ப உயர்ந்த ஞான்றும் மதத்தால் தன்னை நன்கு
மதியாதொழிக; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு
நன்மை பயவா வினைகளை மனத்தால் விரும்பாது
ஒழிக என்றவாறு.

**கதை**

சடாசுரன் என்பவன் இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் காமிகம் என்னும் புரியிலிருந்து ஆட்சி செய்த ஓர் அரசுவேந்தன். இவன் பிரமனை நினைத்து பெருந்தவம் செய்து அதன் பயனாகத் திருவும் வன்மையும் சேரப் பெற்றான். வேண்டிய பொழுது வேண்டிய உருவம் விரைந்தெடுக்க வல்லவன். மன்னவர் பலரை வஞ்சித்து வென்று தன்னையே வியந்து தருக்கித்தரிந்தான். சிறந்த வரபலங்களை அடைந்திருந்தும் இழிந்த செயல்களையே இவன் நயந்து புரிந்து வந்தான். அழகிய மங்கையர் பலரை நலிந்து கொண்டுபோய் வலிந்து துய்த்தான். நன்றி பயவா வினையை நயந்து புரிகின்ற இவன், பாண்டவர் பத்தினியாகிய பாஞ்சாலியை வனத்திற் கண்டான். பழிபடு வினையை மனத்திற் கொண்டான். விஜயன் முதலிய வீரர்கள் ஆற்றலை இவன் அறிந்திருந்தும் தான் கொண்ட எண்ணத்தை முடித்துவிட வேண்டும் என்று குறித்துத் துணிந்தான். ஓர் அந்தணர் முனிவன் போல் அமைந்து சென்று அந்த அம்மை முன் நின்றான். வஞ்சம் யாதும் அறியாமல் வணங்கி நின்ற அவ் வஞ்சியை இவ்வஞ்சன் வலிந்து எடுத்துக்கொண்டு வான்வழி ஏகினான். வீமன் அறிந்து வெகுண்டு ஓடி ஒரு விலங்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசி இவனை வீழ்த்தினான். மாதினை மேலே வீசி இவன் கீழே வீழ்ந்தான். அடலுறுகதையால் வீமன் இவன் உடலினைச் சிதைத்தான். அரவம் உமிழ்ந்த முழுமதி போலத் துரோபதை அருளுடன் விளங்கினாள். தான் நயந்த இழிவினையால் சடாசுரன் பழியும் கேடும் அடைந்து அறிவுறலானான். தன்னை வியந்தானும் நன்றி பயவா வினையை நயந்தானும் எத்துணைச் சிறந்தவனாயினும் பழியுற்று அழிவான் என்பதை இவன் அழிந்து உணர்த்தினான்.

## 10 காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் ஏதில ஏதிலார் நூல் (440)

பரிமேலழகர் உரை :- காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதலையறியாமல் அனுபவிக்க வல்லவனாயின்; ஏதிலார் நூல் ஏதில - பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம் என்றவாறு.

**கதை**

அக்கினி என்பவன் திக்கு பாலகருள் ஒருவன். வன்னி, தகனன், வசு, பாவகன் எனப்பல ஏதுப்பெயர்களைக் கொண்டவன். தென்கீழத்திசைக்குத் தலைவன், மனைவி பெயர் சுவாகாதேவி, இவன் சிவந்த உருவமும் மிகுந்த ஒளியும் உடையவன். வேள்வி முதலிய கருமங்களில் முதன்மையாகப் போற்றப்படுபவன். பாண்டவர் காலத்தில் யமுனை நதிக்கரையில் காண்டவம் என்னும் வனம் ஒன்று இருந்தது. இனிய கனிகளாலும் அரிய ஔடதங்களாலும் அது பெருகி விளங்கியது. அஃது இந்திரனுக்கு உரியது. அதன் நலங்களை உண்டு மகிழ்ந்த இவன் காதல் கொண்டான். தன் காதலைப் பிறர் அறியின் தன் கருத்து முற்றாவண்ணம் தன்னை இந்திரன் கெடுத்துவிடுவான் என்பதை இவன் பல முறையும் நுனித்தறிந்தான். ஆதலால் அதனை ஒருவரும் அறியா வண்ணம் நெடுநாள் உய்த்தான். கண்ணனும் அருச்சுனனும் கலந்து உரையாடியிருக்கும் போது ஓர் அந்தண முனிவன் போல் இவன் அவர்பால் அடைந்தான். அவ் இருவரும் இவனையறியாது உபசரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது வேண்டும் என்றார். பெரும் பசியால் வருந்துகின்றேன். யான் அருந்துவதற்குச் சிறிது உணவு உதவவேண்டுமென்று இவன் ஒடுங்கியுரைத்தான். அவர் தந்தோம் என்றார். உடனே இவன் உண்மையை உரைத்துக் காண்டவ வனமே எனக்கு வேண்டும் என்றான். ஆகுக என்றும் அவரும் இசைந்தார். அக்கினி அங்கு புகுந்து தான் விரும்பிய வண்ணமே அருந்தி மகிழ்ந்தான். தான் உண்ணுங்கால் இந்திரன் முதலாயினர் வந்து பல வஞ்சங்கள் இழைத்தார். அவை யாவும் முன் குறித்த இருவரால் விலக்கப்பட்டன. இவன் யாதொரு நோவும் இன்றி விரும்பியதை விரும்பிய வாறே துய்த்து மகிழ்ந்தான். தன் காதலைப் பிறர் அறியா வண்ணம் ஒருவன் உய்க்கின், பகைவர் செய்யும் வஞ்சம் அவன்பால் பலியாதென்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

## 45ம் அதிகாரம்.
## பெரியாரைத் துணைக்கோடல்

அஃதாவது மூவகைக் குற்றமும் முறைமையின் கடிதலின் காவற்சகாடு உகைத்தற்கு உரியனாய் அரசன் தீநெறி விலக்கி நன்நெறியிற் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல்.

### 1. அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறன் அறிந்து தேர்ந்து கொளல் (441)

பரிமேலழகர் உரை - அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை - அறத்தினது நுண்மையை அறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை; தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன் அதனது அருமையை ஓர்ந்து, கொள்ளும் திறம் அறிந்து கொள்க என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

அத்திபதி என்பவன் காந்தார நாட்டிலுள்ள பூருவ தேசத்து வேந்தன். செருக்கு முதலிய இழிகுணங்கள் சிறிதுமில்லாதவன். அமைதியும் பொறுமையும் அன்பும் உடையவன். இவனது காலம் ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்னர் என்பர். இவனுடைய மனைவி பெயர் நீலபதி. மகன் பெயர் இராகுலன். சீலமுள்ளவர்களை இவன் தெய்வம் என்று கொண்டவன். இடவயம் என்னும் நகரிலிருந்து இவன் இனிது அரசாண்டான். நுண்மை அறனும் மிகத் தெளிந்து நூலினியல்பும் உலகியல்பும் வண்மையுறத் தேற்றிடுமாற்றல் வல்லராகி வளர்சீலம் திண்மை அறிவு ஆயுளின் முதிர்ந்தோர் சேர நன்கு மதித்திடுக; வெண்மை புரியா துயர்ந்திடுக; வியம்பும் வழியே நின்றிடுக என்ற வண்ணமே இவன் நின்றான். இவனுக்கு இனிமை உறவினராயிருந்து பின்பு துறவியாகிய பிரமதருமர் என்னும் முனிவரொருவரை இவன் நாளும் பேணினான். அவர் அருந்தவக் கொள்கையில் திருந்திய பண்பினர். அறநுணுக்கங்களை வழுவறத்தெரிந்தவர். வருங்கால நிகழ்ச்சிகளையும் ஐயமுறக் காணும் மெய்யறிவுடையவர். அறிவும் சீலமும் அமைந்து நின்ற அவரது கேண்மையை இவன் அமையப் பெற்று அவரை ஆதரித்து வந்தான். வருங்கால் ஒருநாள் அவர் இவனை நோக்கி "அரசே! இன்றைக்கு ஏழாம் நாளில் இங்குப் பூகம்பம் உண்டாகும். இந்நகரும் நாடும் காணுறு யோசனை அளவு பாதலத்தில் பதிந்து பாழாகும்; இதனை விடுத்து நின்குடியோடு வேற்றிடம் செல்க" என்று வேண்டி மொழிந்தார். அவ்வாறே இவன் சென்று அவர் குறித்த ஓர் இடத்தில் இருந்தான். குறித்த நாளில் அவர் உரைத்தது நடந்தது. முனிவரது மேன்மையை அனைவரும் போற்றினர். அவரைத் துணையாகக் கொண்டமையால் அரசன் பெரும் புகழ் கொண்டு பின்பு பேரின்பம் கொண்டான். அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மையைத் திறன் அறிந்து கொண்டவனுக்கு எல்லா நலங்களும் உளவாம் என்பதை உலகம் இவன்பால் கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல் (442)

பரிமேலழகர் உரை : உற்ற நோய் நீக்கி - தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி உறா அமை முன்காக்கும் பெற்றியார் பின் வராவண்ணம் முன் அறிந்து காக்க வல்ல தன்மையினை உடையாரை, பேணிக்கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க என்றவாறு.

**கதை**

சோமகாந்தன் என்பவன் பல நூற்றாண்டுகட்கு முன்னர் சவுராட்டிரம் என்னும் தேசத்தை ஆண்ட ஓர் வேந்தன். பேரழகுடையவன். நிறையும் நீதியும் நிலைத்த நெஞ்சினன்.

தக்க அறி வாலமரர் தங்குருவை வென்றான்
மிக்கபொறை யால்நெடிய மேதினியை வென்றான்.
தொக்க ஒளி யாலிலகு சூரியனை வென்றான்
நக்கபுகழால் உலவு நாண்மதியை வென்றான்.
கைக்கொடையினால் எழுகரும்புயலை வென்றான்
மெய்க்கண் அழகால் உருவ வேண்மதனை வென்றான்
வைக்கும் நிதியால் அளகை மன்னவனை வென்றான்
எக்கமிகு போகமதில் இந்திரனை வென்றான்.

என்று புலவர்களால் இவன் புகழப்பட்டான். இத்தகைய நலங்களையுடைய இவன் சுதன்மை என்னும் ஓர் அழகியை மணந்து எமகண்டன் என்னும் புதல்வனைப் பெற்று இன்புற்றிருந்தான். இங்ஙனமிருக்குங்கால் பழவினைப்பயனாக இவனைத் தொழுநோய் பற்றியது. அதனால் உளமிக வருந்தி அரசைப் புதல்வன் பால் வைத்துவிட்டுத் தனியேயிருந்தான். ஒருநாள் பிருகு முனிவரைக் கண்டான். அவரடிமேல் விழுந்து அகங்குழைந்து நின்றான். அவர் இவரது அன்புடைமையை நோக்கி அருள்மீக்கூர்ந்தார். முன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையால் உற்ற இவன் இன்னல் நோயை முன்னியிரங்கி அது நீங்குமாறு இறைவனை எண்ணி இறைஞ்சினார். அத்தொழுநோய் முழுதும் உடனே ஒழிந்தது. அரவம் உமிழ்ந்த மதிபோல் அரசன் விளங்கினான். உற்ற நோயை நீக்கிய முனிவரது பெற்றியை வியந்து பெரிதும் போற்றித் தன் அரசில் வைத்து அவரருள் வழி ஒழுகினான். அதன் பின் துன்பம் யாதுமின்றி இன்பமுற்று விளங்கினான். உற்ற நோயை நீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியாரைப் பேணிக் கொள்ள வேண்டும் என்பதை இவன் உலகம் காணக் காட்டினான்.

## 3. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல் (443)

பரிமேலழகர் உரை :- பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - பெரியவர்ளை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல்; அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது என்றவாறு.

### கதை

தக்கன் என்பவன் பல நூற்றாண்டுகட்கு முன்னர் பானுநகரிலிருந்து அரசுபுரிந்த வல்லவன் என்னும் வேந்தனின் புதல்வன். இவன் தாய் பெயர் கமலை. மகன் குட்ட நோயால் அழகிழந்திருந்தமையால் அவனைத் தந்தை வெறுத்து அகற்றினான். இவனும் அகன்று தனியே ஒருவனத்துட் புகுந்தான். அங்கு முற்கல முனிவரைக் கண்டான். அவர் அருள் புரியுமாறு பல பணிமொழிகளைப் புகன்றான். அவர் இரங்கி அருள் புரிந்தார். இவன் அருள் வழி ஒழுகி அவரோடு அமர்ந்திருந்தான். அக்காலத்தில் கவுண்டிண்ணியம் என்னும் நகரிலிருந்த சந்திரசேனன் என்னும் மன்னன் இறந்து போயினான். அவனுக்குச் சந்ததியில்லை. முற்கல முனிவர் அங்கு சென்று அவ் அரசபதவி தக்கனுக்கு உரிமையாகுமாறு ஓர் அற்புதச் சூழ்ச்சியைச் செய்தார். அதனால் அனைவரும் இவனையே அரசனாகக் கொண்டு மணிமுடி புனைந்தார். தக்கனும் முனிவரது கேண்மையால் வந்த மேன்மையென்று மதித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அடி பணிந்து நின்று அகங்குழைந்து போற்றினான். அவரைத் துணையாகக் கொண்டே இனிது அரசு செய்தான். பெரியாரைப் பேணித் தமராக் கொளல் அரியவற்றுள் எல்லாம் அரிது என்பதும் அங்ஙனம் கொண்டவர்க்கு எல்லாப் பேறுகளும் எளிதில் உளவாம் என்பதும் உலகம் உணர இவன் உணர்த்தி நின்றான்.

## 4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை (444)

பரிமேலழகர் உரை :- தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர் வழி நின்று ஒழுகுதல்; வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லா வலியுடைமையிலும் தலை என்றவாறு.

### கதை

நந்தர்கோன் என்பவன் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யமுனை நதியின் அருகில் உள்ள கோகுலம் என்னும் நகரிலிருந்த ஒரு குறுநில மன்னன். மனைவி பெயர் யசோதை. இவன் இடையர்குலத் தலைவன். வசுதேவனுக்கு நண்பன். கஞ்சனுக்கு மறைந்து வந்து தன் இல்லில் வளர்ந்த கண்ணனைக் கண்ணினும் அருமையாக எண்ணிப் போற்றினான். உத்தவர் முதலிய பெரியோர்களது உறவையே இவன் பெரிதும் உவந்து பேணினான். இந்நலத்தால் இவன் பெரிதும் வலியுடையவனாய் எவரினும் மேன்மைபெற்றிருந்தான். தைமாதந்தோறும் கோவர்த்தனம் என்னும் மலையில் வைத்து இந்திரனுக்குத் திருவிழா நடத்தினான். ஒருமுறை கண்ணன் கூறிய உறுதிமொழியின் படி இவன் கருதி ஒழுகினான். அதனால் இந்திரன் வெகுண்டு கனமழை பொழிவித்தான். கண்ணன்

அதனைத் தடுத்துக் காத்தான். இந்திரன் இவனது தர்மநலத்தைக் கண்டு அஞ்சி அகன்று சென்றான். துணைவன்மையால் நந்தர்கோன் எய்திய மேன்மையை அனைவரும் வியந்தார்கள். பெரியாரைத் தமராக் கொண்டொழுகின் அரிய வன்மைகளெல்லாம் ஒருவனுக்கு எளிதில் உளவாம் என்பதை உலகம் இவன்பால் உணர்நதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் (445)

பரிமேலழகர் உரை :- சூழ்வார் கண்ணாக ஒழுகலான் - தன்பாரம் அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலான் மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையரான அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொளல் என்றவாறு.

**கதை**

விடப்பன்மன் என்பவன் பல நூற்றாண்டுகட்கு முன்னர் இப்பரதகண்டத்தின் வடபாலிருந்து அரசுபுரிந்த ஓர் அசுரகுல வேந்தன். ஆட்சிக்குரிய சூழ்ச்சித் துறைகளில் மிகத் தேர்ச்சி பெற்றவன், ஆற்றல் மிக்கவன், அமைதியும் உடையவன். எடுத்த காரியத்தைக் குறித்த காலத்தில் திருத்தமாகச் செய்து முடிக்கும் இயல்பினன். இவன் மனைவி பெயர் கனகமாலை. இவனுக்குச் சன்மிட்டை என்று ஒரு புதல்வி உண்டு. அவளுக்கும் தனது குலகுருவாகிய சுக்கிரன் மகளுக்கும் இடையே சிறிது கலகம் நிகழ்ந்தது. அதனால் வருந்திய குரு அரசைவிட்டகன்றார். அரசன் அறிந்தான். விரைந்து போய்க்கண்டு அவரை நயந்து தொழுதான். புதல்வி செய்த பிழையைப் பொறுக்க வேண்டுமென்று அரசன் போற்றி வேண்டினான். என்மகளுக்கு நின்மகள் ஈராறு திங்கள் ஏவல் புரியுமாறு இசைந்து விடுவையேல் நின்பால் வந்து நான் இசைந்திருப்பேன் என்று அவர் இசைந்து மொழிந்தார். அதற்கு அரசனும் இசைந்து அவரை அழைத்து வந்தான். தன் அருமைப் புதல்வியை அவர் புதல்விக்கு ஏவல் புரியுமாறு அரசன் ஏவி விடுத்தான். அரசனது ஒள்ளிய குணத்தையும் தம்மை உவந்து பேணிய திறத்தையும் எண்ணிவியந்து தம் உள்ளம் உருகினார். சூழ்வாரைக் கண்ணாகக் கருதி அரசன் சூழ்ந்து கொள்ள வேண்டும் என்பதை இவன் சூழ்ந்து காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்த தில் (446)

பரிமேலழகர் உரை :- தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானை - தக்காராகிய இனத்தை உடையனாய்த் தானும் அறிந்து ஒழுக வல்ல அரசனை செற்றார் செயக்கிடந்தது இல் - பகைவர் செய்யக்கிடந்ததொரு துன்பமும் இல்லை என்றவாறு.

### கதை

இராசேந்திர பாண்டியன் என்பவன் பல நூற்றாண்டுகளுக்கு முன் மதுரையில் இருந்து அரசுபுரிந்த குலபூடண பாண்டியனுடைய புதல்வன். இறைவன்பால் நிறைவான அன்பினன். ஆண்டில் இளைஞனாயினும் அறிவினில் பெரியன். மதிநலமுடைய முதியோரைத் தனக்கு உறுதுணையாகக் கொண்டு இவன் ஆட்சி புரிந்து வந்தான். வருங்கால் காஞ்சிபுரத்தில் அரசுபுரிந்திருந்த சோழன் ஒருவன் இவன்பால் பகைமை கொண்டிருந்தான். பின்பு நண்புடையான்போல் நடித்துத் தன்மகளை இவனுக்கு மணம்புரிந்து தருவதாக இசைத்தான். அவ்வமையம் இவன் தம்பியாகிய இராசசிங்கன் என்பவன் அங்கு சென்று மணந்து கொண்டான். ஆண்டே மருவியிருந்தான். காமச்சுவையின் களிப்பால் மாமனைக் கண்போல் கருதிக் கருத்தொன்றி நின்றான். அவ்வளவில் அமையாமல் அவன் உள்ளம் உவக்கும் என்று எண்ணித் தன்முன்னவனுக்கு இன்னல் இழைக்கவும் முயன்றான். இப்புதிய மருமகனைக் கொண்டே தனது பழைய பகைகளை வென்றுவிடவேண்டுமென்று அவன் உள்ளம் துணிந்தான். பொருபடையுடனே மதுரையை அணுகினான். அதனைப் பாண்டியன் அறிந்தான். தக்கார் சிலருடன் ஆய்ந்தான். அதன்பின் கோயிலுட் புகுந்து சோமசுந்தரப் பெருமான் திருமுன் நின்று வினைமுடிவு கருதி மனமுருகித் துதித்தான். இறைவன் அருளால் அப்பொழுது ஆகாயத்திலோர் தனிமொழி எழுந்தது. அரசன் மகிழ்ந்தான். அருளை வியந்தான். அம்மொழி வழி ஒழுகி மறுநாள் தமருடன் பொருந்தி அமர்முனை புகுந்தான். பொருதான். அதில் வந்த படைகள் எல்லாம் சிந்தியோடின. சோழனையும் துணைவனையும் தொடர்ந்து பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் முன் கொடுத்து விடுத்தார். பாண்டியன் இரங்கிப் பகைவனுக்கு இதம்பல கூறி அரியன உதவி அவன் பதிபுக விடுத்தான். தன் தம்பியாகிய இராசசிங்கனுக்கு உரிய சில கொடுத்து வேறே ஒதுக்கி வைத்தான். பகை உடையாரும் இவனது துணைவலிக்கஞ்சி இவன்பால் பணிவு கொண்டிருந்தார். தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானைச் செற்றார் ஒன்றும் செய்திடலாற்றார் என்பதனை அனைவரும் இவன் பால் அறிந்து தெளிந்தார்.

## 7. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமை யவர் (447)

பரிமேலழகர் உரை :- இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாந்தன்மையை உடையாரை இவர் நமக்குச் சிறந்தார் என்றாளும் அரசரைக் கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்து யாவர் என்றவாறு.

### கதை

நலங்கிள்ளி என்பவன் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் கருவூரிலிருந்து அரசு புரிந்த ஒரு சோழ மன்னன். சிறந்த போர் வீரன், பெருங்கொடையாளன். பல நூல்களிலும் நல்ல பயிற்சி உள்ளவன். கவியாளன், கவி செய்யுந் திறனும் நிரம்பப் பெற்றவன். கோவூர்க்கிழார், ஆலத்தூர்க்கிழார், உறையூர் முதுகண்ணன், சாந்தனார் முதலிய புலவர் பெருமக்களையே தனக்குப் பொருந்திய துணையாகக் கொண்டு புலமையின்பத்தை நுகர்ந்தான். ஆயினும் பல போர்முனைகளிலும் சென்று வென்று தன் கீர்த்தியை எங்கும் பரப்பினான். குன்றா வெற்றியனாய் நின்று நிலவுவதைக் கண்டு அரசர் பலரும் இவன்பால் பகைமை கொண்டனர். அவரனைவரையும் அடக்கவென்று ஆங்காங்கு தன் புலிக்கொடியைப் பொருந்த நாட்டினான். போர் புரிந்து வெற்றி கொள்ளுதலையே பெரும் பேறாகக் கொண்டு மகிழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனாரும் கோவூர்க்கிழாரும் இவனது போக்கைக் கடிந்து மொழிந்தார். தன்னுயிர் பரிந்தோம்பு மாறுபோல் மன்னுயிரோம்புதலே மதிநலம் எனவும், பகை என்னும் பண்பிலதனை நகையேனும் வேண்டற்க எனவும், தேய்தல் உண்மையும், மாய்தல் உண்மையும், பெருகல் உண்மையும் பிறத்தல் உண்மையும் அறியாதோரையும் அறியக்காட்டி திங்கட்புத்தேள் திரிதரும் உலகத்து வல்லவராயினும் அருளவல்லை எனவும் அவர் இடித்துக் கூறினார். அவரது உறுதி மொழிகளைக கேட்டு இவன் உவகை மீக் கூர்ந்தான். பகைமை என்பதைப் பற்றற ஒழித்தான். அவரையே தனக்கு அருந்துணைவராக ஆதரித்து வந்தான். அதனால் இவன் புகழ்மிகவுடையவனாய் யாதொரு கேடும் இன்றி இன்புற்றிருந்தான். இடிக்கும் துணையாரை ஆள்வாரை கெடுக்கும் தகைமையர் இல்லை என்பதை இவன் உலகிற்கு உணர்த்தினான்.

## 8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும் (448)

பரிமேலழகர் உரை : இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற்கு உரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையின் காவலற்ற அரசன்; கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லை ஆயினும் தானே கெடும் என்றார்.

### கதை

கயமுகன் என்பவர் ஓர் அசுரகுலவேந்தன். விபுகை என்னும் அசுர மங்கைக்கும் மாசுதர் என்னும் முனிவருக்கும் இவன் புதல்வனாய்த் தோன்றினான். பருத்த உடம்பும், சிறுத்த கண்களும், நெறித்த சிகையும், தழைத்த செவிகளும் உடையவன். அதனால் இவன் கயமுகன் எனப்பட்டான். திண்மையும் புன்மையும் சேர்ந்த நெஞ்சினன். பருவமெய்தியபின் இறைவனை நோக்கி அருந்தவம் புரிந்து உயர்நலங்களை அடைந்தான். பின்பு நாவலந்தீவில் மதங்கபுரி என்னும் ஓர் அழகிய நகரை அமைத்து அதிலிருந்து அரசு புரிந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசித்திகாந்தி என்னும் மங்கையை மணந்து விளங்கிய போகங்களை நுகர்ந்தான். மேலும் மேல் கீழ் எங்கும் தன் கோலும் குடையும் சென்று குலவச் செய்தான். அறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமல் தன் ஆற்றல் ஒன்றையே போற்றி மகிழ்ந்தான். எங்கும் சென்று எவரோடாயினும் போராடி வெல்லுதலையே இவன் பொருளாகக் கொண்டான். இவனது கொடுமையை நினைத்து அமரர் முதல் அனைவரும் அஞ்சி நடுங்கினர். தேவர்கள் வருந்தும் பொருட்டு ஒருநாள் இவன் வானுலகம் புகுந்தான். இறையருளால் அங்கு எதிரே வந்த விநாயகமூர்த்தி இவனைக் கண்டார். அவரையும் மதியாது துணிவோடெதிர்த்தான். அவர் நீதி கூறியும் யாதும் தேறாமல் இவன் வாது மீறினான். அவர் வெகுண்டார். அதனால் இவன் உருவங்குலைந்து உடனே தொலைந்தான். மதம் மீறிய யானை போல நெறியல்லாத நெறிகளில் மிதமீறிச் சென்றதால் தன் பதவியை இழந்து இவன் பழியோடு இழிந்தான். இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இல்லாமலே கெடுவான் என்பதை இவன் கெட்டு விளக்கினான்.

## 9. முதலில்லார்க்கு ஊதியம் இல்லை மதலையாம் சார்பிலார்க்கு இல்லை நிலை (449)

பரிமேலழகர் உரை :- முதல் இலார்க்கு ஊதியம் இல்லை. முதற்பொருள் இல்லாத வணிகருக்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாம். மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை - அது போலத் தம்மைத் தாங்குவதாம் துணை இல்லாத அரசர்க்கு அதனால் வரும் நிலை இல்லை என்றவாறு.

### கதை

சுந்தன் என்பவன் ஓர் இயக்கர் தலைவன் பல்லாயிர வருடங்களுக்கு முன்னர் இருந்தவன். திண்மையும் அழகும் சினமும் உடையவன். விந்த மலைக்குத் தென்பால் வசுமதி என்னும் நகரில் இருந்து அரசு புரிந்தவன் இவனுக்கு மாமன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சுகேது. அவனுடைய அருமை மகளை இவன் திருமணம் செய்து கொண்டான். அவர் பெயர் அனங்கலீலை என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமனும் இரதியும் கலந்த காட்சியி
தாமென இயக்கனும் அனங்க னாளும்வே
றியாமமும் பகலுமோர் ஈறின் றென்னலாய்த்
தாமுறு பெருங்களிச் சலதி மூழ்கினார்.

இங்ஙனம் மூழ்கிய இவன் அரசமுறைகள் அனைத்தையும் துறந்தான். வேறு போகங்களையும் மறந்தான். அவளது இளமைச் செல்வியையே இனிது நுகர்ந்திருந்தான். நாள் பல கழிந்தன.

பற்பல நாட்செலீஇவ் பதுமை போலிய
பொற்பினன் வயிற்றிடைப் புவனம் ஏங்கிட
வெற்பணி புயத்துமா ரீசனும் விறல்
மற்பொரு சுவாகுவும் வந்து தோற்றினார்

சுந்தன் கண்டான். தனது பெரிய நிலையையும் அழகிய மனைவியையும் இனிய புதல்வர்களையும் எண்ணியெண்ணி இவன் இறுமாந்தான். அரசு நிலை குலைவதை இவன் அறியாது திரிந்தான். அறிவுடையார் ஒருவரும் இவனை அணுகாது அகன்றார். தினமும் வேட்டை மேல் சென்று திரிந்தான். மான், முயல், மரைகளைக் கொன்று மகிழ்ந்தான். இவன் போக்கை தடுப்பாரும் இல்லை. இடிப்பாரும் இல்லை. ஒருநாள் கடல் நீர் முழுவதையும் அங்கையில் அடக்கிய மாதவனாகிய அகத்திய முனிவர் வந்து அமர்ந்திருக்க அந்த இடத்தில் இவன் அடங்காது அடைந்தான். பெரியவர் என்று மதியாமல் அங்கும் தன் சிறுமையைக் காட்டினான். முனிவர் முனிந்தார். தழல் எழ விழித்தார். உடனே இவன் சாம்பராயினான். அதன் பின் புதல்வரும் மனைவியும் பொங்கி வந்தார்கள். அவரனைவரும் அரக்கராகும் படி அருந்தவன் நினைத்தார். அவ்வாறே அவரனைவரும் ஆயினார். தாடகை என்னும் பெயரை அவள் தாங்கித்திரிந்தாள். புதல்வர்கள் மாரீசன் சுவாகு என்னும் பெயருடனே அரக்கராகத் தோற்றினர். தாங்குதற்குரிய நல்ல துணை இல்லாமையால் சுந்தன் தாழ்ந்து தொலைந்தான் என்று அனைவரும் தயங்கி மொழிந்தார். மதலையாம் சார்பு இல்லார்க்கு நிலை இல்லை என்பதை இவன் நிலையாய் உணர்த்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. பல்லார் பகைகொள்லின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல் (450)

பரிமேலழகர் உரை :- பல்லார் பகை கொளலின் பத்து அடுத்து தீமைத்து - தான் தனியனாய் வைத்துப் பலரோடும் பகை கொள்ளுதலின் பதிற்று மடங்கு தீமையுடைத்து நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாது ஒழிதல் என்றவாறு.

## கதை

முன்னொரு காலத்தில் இந்திரன் தனது பெரிய பதவியில் அமர்ந்து அரிய போகங்களைத் துய்த்து வருங்கால் அசுரர் பலர் இவன் பால் பகைகொண்டிருந்தார். இவனது துணைவலியையும் மனவலியையும் அறிந்து யாதும் செயலாற்றாது அவர்கள் அடங்கியிருந்தார்கள். அல்லல் யாதும் இன்றி அகமகிழ்வு கொண்டிருந்த இந்திரன் ஒருநாள் அமரர் புடை சூழ, அரம்பையர் நடம்புரியத் தெய்வநலங்களெல்லாம் இருமருங்கிலும் எய்தி விளங்க அரியணையில் அழகுற வீற்றிருந்தான். அவ்வமையம் தன் குருவாகிய வியாழபகவான் அங்கு வந்தார். தன்பதவியின் களிப்பால் அவரை இவன் மதியாதிருந்தான். உளமிக வருந்தி அவர் உடனே நீங்கினார். அதனால் இவன் திருவும் பெருமையும் சேர இழந்தான். அற்றம் நோக்கி இருந்த பகைவரும் இவன்பால் செற்றம் மீக்கூர்ந்து இருந்தார். அதன்பின் அல்லல் பலவும் இவன் அடைந்து வருந்தினான். பழியும் தொடர்ந்தது. பதவியையும் இழந்தான். இறைவன் அருளால் முடிவில் இவ் இழிவையெல்லாம் நீக்கினான். குருவைத் தேடியடைந்தான். தன் பிழை பொறுக்கும்படி அவரைத் தொழுது வேண்டித் துணைக்கொண்டு மீண்டும் துறக்கம் புகுந்தான். பல்லாரோடு பகை கொளினும் நல்லார் நட்பினைக் கைவிடலாகா தென்பதை இந்திரன் கண்டு தெளிந்தான். பெரியாரது கேண்மையை அரசன் ஒரு போதும் கைவிடலாகாதென்பது இதனாற் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46ம் அதிகாரம். சிற்றினம் சேராமை

அதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை சிறிய இனமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும் வீடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்று என்பது உணர்த்தற்கு இ∴து அதன் பின் வைக்கப்பட்டது.

## 1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும் (451)

பரிமேலழகர் உரை : பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறிய இனத்தை அஞ்சா நிற்கும் சிறுமைதான் சுற்றமாகச் சூழ்ந்துவிடும் - ஏனைய சிறியோர் இயல்பு அது சேர்ந்த பொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும் என்றவாறு.

**கதை**

விபூசனன் ஒருநாள் இராவணன் பேரவைக்குட் சென்றான். வச்சிரதந்தன், துன்முகன், பெரும்பக்கன், துமிரன், மகரக்கண்ணன், மாபக்கன், தூமாக்கன் முதலாகப் பல சேனைத் தலைவரும் பிறரும் அங்கு நிறைந்திருந்தனர். அண்ணன் திருமுன் விபூசனன் அணுகியிருந்தான். அவ்வமையம் தனக்கு ஆவன அறிந்து கூறுமாறு அவரை நோக்கி இராவணன் கூறினான். இருந்தவரனைவரும் எழுந்து தம்மனம் போனவாறு மொழிந்தார். சிறையில் வைத்த சீதையை வெளியே விடுதல் முறையல்ல என்றார் சிலர். வேறு சிலர் இராம இலக்குவரையும் வானரங்களையும் இலகுவாகக் கொன்றுவிடலாம் என்றார். மற்றும் சிலர், தண்டம் ஒன்றே அரசர்க்குரிய தனி அறம் என்றார். பின்னும் சிலர், அதனாலே தான் அண்டமனைத்தையும் ஆள வேண்டும் என்றார். இங்ஙனமே இன்னும் சிலர் எடுத்துரைத்தனர். பழியும் கேடும் பயக்கத்தக்க அக்கொடு மொழிகளை விபூசனன் கேட்டான். இயல்பாகவே களித்து நிற்கின்ற அரசனது உள்ளத்தைக் கலைத்து அரசைக் குலைக்கின்றார்களே என்று வருந்தி இரங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உரைத்தவற்றை மறுத்துச் சில உறுதிகள் உரைத்தான். ஒன்றும் பலிக்கவில்லை. இனி அவரோடு இருந்தால் இருமையிலும் சிறுமையுண்டாம் என்று அறிந்தான். அவரை அஞ்சி அகன்றான். பெருமை சிற்றினத்தை அஞ்சும். சிறுமைதான் அதனைச் சுற்றமாகச் சூழ்ந்துகொள்ளும் என்பதை உலகம் காண இவர் அன்று உணர்த்தி நின்றார்.

## 2. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க் இனத்தியல்ப தாகும் அறிவு (452)

பரிமேலழகர் உரை :- நிலத்து இயல்பால் நீர் திரிந்து அற்றாகும் தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன் தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத்தாம். மாந்தர்க்கு இனத்தியல்பு அறிவு அது ஆகும். - அது போல மாந்தர்க்குத் தாம் இனத்தினது இயல்பானே அறிவும் தன் தன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மைத்தாம் என்றவாறு.

**கதை**

கைகேசி தன்கணவனைக் கண்ணிலும் சிறந்தவனாக எண்ணிக் காதலித்திருந்தாள். தசரதனும் அருமைக் காதலியாக இவளை ஆதரித்து வந்தான். இயல்பாகவே இராமன்பால் இவள் பேரன்புடையவள். தன்மகனாகிய பரதனைவிட இராமனையே இவள் நாளும் பேணி வந்தாள். வருங்கால் இராமனுக்கு அரசன் முடிசூடத் துணிந்தான். இதைக் கூனியாகிய மந்தரை அறிந்தாள். குலைக்க நினைத்தாள். அவள் வஞ்சமும் தீமையும் மருவிய நெஞ்சினள். கைகேயியிடம் விரைந்து வந்தாள். அவ்வமையம் பாற்கடற்படுதிரைப் பவளவல்லியே போல் பொங்கணைமேற் கிடந்து அரசி துயில் புரிந்தாள். கூனி அணுகினாள். "உனக்கு ஓர் இடர் வந்துள்ளதே நீ ஏன் மடி கொண்டுள்ளாய்." என்று எழுப்பினாள். அதனைக் கைகேயி கேட்டாள். விராவரும் புவிக்கெல்லாம் வேதமேயன்ன இராமனைப் பயந்த எனக்கும் இடருண்டோ என்று இயம்பி எழுந்தாள். இதனால் இவளது மனப்பண்பும் இராமன்பால் வைத்துள்ள நண்பும் இனிது புலனாம். இத்தகைய உயர் குணமுடையவளைச் சிறிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது தன்னுடன் சேர்த்து வைத்துக் கொண்டு கூனி பலவஞ்சமொழிகளைக் கூறினாள். அவளுடன் கொஞ்சம் சேர்ந்திருந்து அவள் மாய மொழிகளைக் கேட்டவுடனே இவள் தூய சிந்தையும் திரிந்தது. அதன்பின் வஞ்சவேடங்கொண்டு தன் நாயகனை வஞ்சித்தாள். இராமனை முடி சூடாதபடி தடுத்து வனம் போக விடுத்தாள். அதனால் தசரதன் நொந்துயிர் நீத்தான். இடர் எல்லாம் படைத்தாள் எனவும் பழிவளர்க்கும் செவிலி எனவும் பாழ்ந்த பாவி எனவும் கூனியை அனைவரும் பழித்தார்கள். அழகும் குணமும் அறிவும் அன்பும் நிறையும் முறையும் நெறியுமுடையளாய் இருந்தும் கூனியின் சேர்க்கையால் இவள் உள்ளம் திரிந்து பொல்லாதவள் ஆயினாள். அதனால் தள்ளரும் பழியைத் தாங்கினாள். எண்ணரும் புகழை இழந்தாள். இப்பழி விளைவுகளுக்குத் தான் சேர்ந்த இனமே காரணம் என்று பின்பு இவள் எண்ணி இரங்கினாள். நிலத்தியல்பால் நீர் திரிவது போல் மாந்தர்க்கு இனத்தியல்பால் அறிவு திரியுமென்பதை உலகம் இவள்பால் தெளிந்தது.

## 3. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம் இன்னான் எனப்படுஞ் சொல் (453)

பரிமேலரகர் உரை :- மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மாந்தர்க்குப் பொதுவுணர்வு தம் மனங்காரணமாக உண்டாம்; இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத்தன்மையன் என உலகத்தாரால் சொல்லப்படும் சொல் இனங்காரணமாக உண்டாம் என்றவாறு.

**கதை**

தருமசாமி என்பவன் பல நூற்றாண்டுகட்கு முன்னர் பாண்டி நாட்டிலிருந்த சிவகாமி என்னும் ஒரு வேதியனின் புதல்வன். தாய் பெயர் புனிதவதி. இவன் அழகில் மிக்கவன், அறிவிலும் சிறந்தவன். கல்வி பயின்று பருவமெய்திய பின்னர் ஆனதொரு கன்னியை ஆய்ந்து தந்தையார் இவனுக்கு மணம் புரிவித்தார். அவர் புலமையும் சீலமும் பொருந்திய பண்பினர். ஒரு பெருந்தொகைப் பொருளைக் கொடுத்துத் தனியேயிருந்து இல்லறம் புரிந்து வருமாறு இவனைப் பணித்தார். இவனும் அவ்வாறே அமைந்திருந்தான். இயற்கையாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமும் நல்ல குணமும் அமையப் பெற்றவன். இவனது உருவும் திருவும் நோக்கி வஞ்சர் பலர் இவன்பால் வந்து மருவினர். நாள் சில கழியுமுன் இவன் அவர் வயமானான். தையலார் மையலால் தன்னுளந் திரிந்தான்.

அழகினான் உயர்குலத்தா னானாலும் பெருங்காமம்
குழகினான் சீருணத்தின் குடப்பால் போல் குணந்திரிந்து
பழகிடா மூர்க்கரொடும் பழகினான் கல்வியெனும்
கழகமாம் பெரும்பயிர்க்கு மூடமெனும் களைமூட

முதியமறை நூல்விடுத்து மோகமறை நூல் பயிற்சி
அதரமுதற் பதினொன்றும் அமுதநிலை பதினைந்தும்
இதமுறுமா லிங்கனமும் எண்ணில் கரணமும் தெரிப்பான்.
பதுமினி சித்தினி முதலாம் பாவையாரைத் துருவுவான்.

இங்ஙனம் தன் இயல்பு முழுவதையும் இழந்து சிற்றினத்தாரையே இவன் சேர்ந்து திரிந்தான். அனங்கி மோகினி என்னும் அழகிய கணிகை ஒருத்தியை இவன் அணுகியிருந்தான். அவளுடைய மருள் வெள்ளத்தில் வீழ்ந்தான். அதனால் தன் பொருள் வெள்ளம் முழுவதும் போக்கினான். பின்பு தீமைகள் பலவும் செய்யத் துணிந்தான். சீலமுள்ள தன் தந்தையாரைச் சேர்ந்திருக்கும் போது நல்லனவாய் இருந்த இவன் சிறியார் இனத்தைச் சேர்ந்தபின் தீயவனானான். அதனால் பொல்லாதவன் எனப் பலரும் இவனை இகழ்ந்து பேசினார். மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தேயாயினும் இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் என்பதை இவன் எடுத்துக்காட்டி நின்றான்.

## 4. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற் கினத்துள தாகும் அறிவு (454)

பரிமேலழகர் உரை :- அறிவு - அவ்விசேடவுணர்வு; ஒருவற்கு மனத்து உளது போலக் காட்டி - ஒருவற்கு மனத்தின் கண்ணே உளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி; இனத்து உளதாகும் - அவன் சேர்ந்த இனத்தின் கண்னே உளதாம் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

தோடகர் என்பவர் ஆதிசங்கராசிரியருடைய சீடருள் ஒருவன். அடக்கமுடையவன். எவர்க்கும் இனிய பண்பினர். ஆசிரியர்பால் பேரன்புடையவர். ஆயினும் மந்த மதியினர். ஆதலால் நூல்களை நுணுகிப் பயிலுவதற்கு இயலாதவராய் குருவின் பணிகளையே செய்து வந்தார். சுரேசனர் சனந்தனர் முதலிய பேரறிவாளர்கள் ஆசிரியரையணுகியிருந்து பாடங்கேட்குங்கால் இவரும் ஒரு புறம் அடங்கியிருப்பர். பொருள்கள் விளங்காமைக்காக மிகவும் வருந்துவார். நாள் பல கழிந்தன. ஒரு நாள் ஆசிரியர் ஆடையைத் தோய்ப்பதற்காக நதிக்குச் சென்றிருந்தார்.அவ்வமையம் பாடங்கேட்கும் காலம் ஆதலால் அறிஞரனைவரும் வந்தார்கள் பணிந்து முன் இருந்தார். குன்றிய அறிவினராய தோடகர் அங்கு நின்ற மண்மதிலைப் பார்த்தார். அதனை ஆசிரியர் உணர்ந்தார்.

# 5. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனம்தூய்மை தூவா வரும் (455)

பரிமேலழகர் உரை :- மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - மனம் தூயவனாவதன் தன்மையும் செய்யும் வினை தூயவனாதல் தன்மையும் ஆகிய இரண்டும்; இனம் தூய்மை தூவா வரும் - ஒருவர்க்கு இனம் தூயனாதல் தன்மை பற்றுப்கோடாக உளவாம்.

## கதை

சசிவர்ணன் என்பவன் பாக எக்சியன் என்னும் ஒரு வேதியன் புதல்வன். இவனது காலம் பல நூற்றாண்டுகட்கு முன்னராகும். இவன் அழகில் உயர்ந்தவன். அறிவில் இழிந்தவன். பொது மாதர்கள் பால் மதமோடு திரிந்தான். மங்கையர் பலரை மருவிக் களித்தான். அவர் ஏவின பணியெல்லாம் இவன் மேவிச் செய்தான். "பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்" என்ற கம்பர் இன்னுரைக்கு இவன் எடுத்துக்காட்டாய் நின்றான். காமக்கொடுமையால் பல தீமைகளை இவன் கருதாது செய்தான். அப்பாபமிகுதியால் பல நோய்களும் இவனை பற்றிமுற்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றால் இவன் வருந்தி நொந்து அருந்துயர் மிகுந்தான். மகனது பாரிய நிலைமையைத் தந்தையார் கண்டு சிந்தை கவன்றார். இவனை அழைத்துக் கொண்டு போய் நந்தி பாராயணர் என்னும் மாதவரிடம் சேர்த்தார். அவர் தண்ணளி நிறைந்த புண்ணியராதலால் இவனைத் தன்பால் வைத்து அன்பு செய்து வந்தார். இவனும் அவரது அருள்வழி ஒழுகினான். அதனால் தனது தீமைகள் அனைத்தும் தீரப்பெற்றான். தூரனாகித் துறவினையடைந்தான். அதன் பின் மனம் மொழி மெய்கள் மாசற்று விளங்கினான். தான் சேர்ந்த இனம் ஒருவனுக்குத் தூய்மையாக அமையுமாயின் அவன் மனந்தூயனாகி மதிநலம் பெறுவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

## 6. மனத்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க் கில்லைநன் றாக வினை (456)

பரிமேலழகர் உரை :-மனம் தூயார்க்கும் எச்சம் நன்றாகும் - மனம் தூயராயினார்க்கு மக்கட்பேறு நன்றாகும் இனம் தூயார்க்கும் நன்று ஆகா வினை இல்லை - இனந்தூயராயினார்க்கு நன்றாகாத வினை யாதும் இல்லை என்றவாறு.

### கதை

வசுதேவர் என்பர் சூரசேனருடைய புதல்வர். யமுனா நதியை அடுத்திருந்த ஒரு சிறிய நிலப்பகுதிக்கு உரியவர். அடக்கமுடையவர். மனத்தில் தூய்மையும், வாக்கில் வாய்மையும் என்றும் மருவப் பெற்றவர். இவர் தேவகன் குமாரியாகிய தேவகியை மணந்து இன்புற்று வந்தார். வருங்கால் வடமதுரையிலிருந்து அரசு புரிகின்ற உக்கிரசேனன் இவரைத் தன்பால் அழைத்து வைத்து அன்பு செய்து வந்தான். அவ் அரசன் தேவகனுக்கு அண்ணனும் கம்சனுக்கு தந்தையுமாவான். இவர் அங்கு மனைவியோடு இனிதமர்ந்திருந்தார். ஒருநாள் மனைவியும் தானும் மைத்துனனாகிய கம்சனும் இரதத்திலேறி உலாவப் போனார். அப்பொழுது தேவகி கர்ப்பவதியாயிருந்தாள். அவள் வயிற்றில் தோன்றும் பிள்ளையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு நாசம் தோன்றும் என்று வானில் ஒரு தனி ஒலி எழுந்து கம்சன் காதில் பட்டது. அக்கொடியவன் உடனே அவளைக் கொல்லத் துணிந்தான். வசுதேவர் கலங்கி எழுந்து அவன் கையைப் பிடித்து இதம்பல கூறித் தன்தேவியைக் காத்தார். ஆயினும் இவரை வெளியே போகவிடின் தனக்கு அழிவுண்டாம் என்று கருதி காலிலும் கையிலும் கடுவிலங்கிட்டு இவ்விருவரையும் அவன் சிறையிலடைத்தான். அங்கு அல்லல் பல விதைத்தான். பலமுறை கொல்லவும் விளைந்தான். அவ்வெல்லாவற்றிற்கும் இவர் யாதும் கூறாது அமைதியோடிருந்தார். இவரது மனநலத்தையும் குணமாண்பையும் வியந்து திருமாலே இவர்க்கு ஒரு புதல்வனாகத் தோன்றினார். அதனால் அவர் வாசு தேவர் என்று ஒரு பெயரும் பெற்றார். அதன் பின் அல்லல் யாதுமின்றி அப்பிள்ளையின் நலத்தால் இவர் எல்லா மேன்மைகளையும் எய்தினார். நாரதர், மரீசி, கபிலர் முதலிய தெளிந்த முனிவர் இனத்தையே இவர் சேர்ந்திருந்தார். அதனால் சிறந்த நலங்களை அடைந்தார். மனமும் இனமும் தூய்மையுடையவர், இனிய மக்களையும் அரிய பேறுகளையும் எய்தி மகிழ்வார் என்பதை இவர் இசைந்து காட்டினார்.

## 7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம் எல்லாப் புகழும் தரும் (457)

பரிமேலழகர் உரை :- மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் - நிலைபெற்ற உயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இன நலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும் என்றவாறு.

**கதை**

அனுமான் பெருமை அளவிடலரிது. மனநலம் மதிநலம் சீலம் வீரம் செம்மை முதலிய உயர்நலங்களெல்லாம் அவரிடம் ஒருங்கே குடிகொண்டிருந்தன. ஆயினும் வானரர்களோடு கூடியிருக்கும் பொழுது இவரது பெருமை வெளியே ஒன்றும் தோன்றாதிருந்தது. வானரர்களும் தம்மில் ஒருவராகவே இவரை மதித்திருந்தனர். இவர் இராமமூர்த்தியைச் சேர்ந்த பின்னரே இவர் புகழ் உலகெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவியது. இசை சுமந்து எழுந்த தோளன் எனவும், இராகவன் கழல் எனப் புகழோன் எனவும், சொல்லின் செல்வன் எனவும், மேலாம் அறிவன் எனவும், ஆண்டகை எனவும் இவரைக் கம்பர் இசைப்பர்.

அறந்தலை எடுத்த புவி வானவர்களானவர்கள் ஆடினார்கள் தீ மறந்தலை இறங்கியது வாலிமுத லானவர்கள் வாமநயனம் சிறந்ததிரன் தோள்புருவம் மார்பிவை துடித்தன சிறந்த புகழான் நிறைந்த குணமாருதி நினைத் திருவடித்தொழுது நின்ற பொழுதே.

இது அனுமான் இராமனைச் சேர்ந்த பொழுது நிகழ்ந்த நலங்களைக் குறித்து அவரிடம் அகத்தியர் கூறியது. இங்ஙனம் முனிவரும் அமரரும் வியந்து போற்றத்தக்க பெரும் புகழ்களை அனுமார் இனநலத்தாலே எய்தி விளங்கினார். ஆதலால் இனநலம் எல்லாப் புகழும் தரும் என்பதற்கு இவர் எடுத்துக்காட்டாய் விளங்கினார்.

## 8. மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப் புடைத்து (458)

பரிமேலழகர் உரை :- மனநலம் நன்கு உடையராயினும் மன நன்மையை முன்னை நல்வினையால் தாமே உடையராயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து - அமைந்தார்க்கு இன நன்மை அதற்கு வலியாதலை உடைத்து என்றவாறு.

**கதை**

உடையவர் என்பவர் தொளாயிரம் ஆண்டுகட்கு முன்னர் திருப்பெரும்புதூர் என்னும் நகரிலே வேதியர் குலத்திலே கேசவப் பெருமாள் என்பவருக்குப் புதல்வராய்த் தோன்றினார். தாய் பெயர் பூமி நங்கை. இவரை ஆதிசேடனது அமிசம் என்பவர். இவர் நுண்ணறிவும் தண்ணறிவும் உள்ளவர். வேத முதலிய நூல்கள் பலவும் ஓதித் தெளிந்தார். யாதவப் பிரகாசர் என்னும் பெரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரை முதலில் இவர் குருவாகக் கொண்டிருந்தார். உண்மைப் பொருளை நுண்மையாக உணர்ந்து எண்மையாகக் கூறும் இவர் திண்மையை உணர்ந்து அவரும் பொறாமை கொண்டார். அதனால் அவரைப் பிரிந்தார். மனநலமுடையராய் இறையருளை நாடித் தனியேயிருந்தார். இங்ஙனம் இருந்து வருந்துங்கால் திருக்கோட்டியூர் நம்பி, திருமலை நம்பி, திருமோ கூரப்பன், தெய்வப்பெருமாள், திருக்குருகூர்தாசர், மாறனேறி நம்பி, திருக்கச்சிநம்பி, பெரியநம்பி, திருமோகூர் ஆழ்வார் முதலிய பெரியார்களைக் கண்டார். அவர்களுடைய குணநலங்களை வியந்தார். அவர்களுள் பெரியநம்பி என்னும் பெரியாரையே குருவாக நம்பிப் பேணி நின்றார். அவர் விரிந்த நோக்கமும் பரந்த அருளும், சிறந்த குணங்கள் பலவும் ஒருங்கே நிறைந்தவர். அவரும் இவரது மதிநலத்தையும் மனநலத்தையும் வியந்து சில மந்திரங்களை உபதேசித்துத் தன் குருவாகிய ஆளவந்தாரிடம் இவரை அழைத்துச் சென்றார். இவர் சென்று சேருமுன் அவர் திருவுடலை விட்டுப் பரனருள் சேர்ந்தார். இவர் பெரிதும் இரங்கினார். அவரது குணநலங்களைக் கூறக்கேட்டுத் தம் உள்ளத்தில் பேரருள் கூர்ந்தார். அவர் குறித்திருந்தபடியே வியாச சூத்திரத்திற்கு இவர் வியாக்கியானம் செய்தார். திருமாலின் அருள் இயல்களையும், அவரை அடைந்தின்புறும் நெறிமுறைகளையும், உயிர்கள் எளிதில் உணருமாறு பல முறைகளை அருளினார். "திருமாலுக்கு அடிமை செய்" என்னும் உறுதிமொழியை இவர்தான் உலகெங்கும் பரவச் செய்தார். நாதமுனி உய்யக் கொண்டான். மணக்கால் நம்பி முதலிய வைணவ ஆசாரியார்க்கெல்லாம் முதன்மையை உதவி வைணவ மதத்திற்கு இவர் உயிர் என நின்றார். அதனால் எம்பெருமானார் இளையாழ்வார் இராமநுசர் பாஷியகாரர் என்று இவர் போற்றப்பட்டார். பெரிய நம்பி முதலிய பெரியாரைச் சேர்ந்த பின்னரே இவர் உயர்நலம் அடைந்தார். மனநலம் நன்கு உடையாராயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து என்பதை உடையவர் மூலமாகவே உலகம் உணர்ந்து கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும் இனநலத்தின் ஏமாப் புடைத்து. (459)

பரிமேலழகர் உரை :- மனநலத்தின் மறுமை ஆகும் - ஒருவற்கு மனநன்மையானே மறுமை இன்பம் உண்டாகும். அஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து என்றவாறு - அதுவும் இன நலத்தால் பெரிதும் மாண்புறும் என்றவாறு.

**கதை**

உத்தவர் என்பவர் வசுதேவன் தம்பியாகிய தேவபாலன் புதல்வன். வடமதுரையில் இருந்தவர். அகத்தில் அருளும் புறத்தில் அழகும் பொருந்தப்பெற்றவர். பெருந்திருவுடையவர். ஆயினும் உலக இன்பங்களை இவர் விரும்பாமல் உண்மை இன்பங்களையே உவந்து நின்றார். இவரது மனநலத்தையும் மதிமாண்பையும் விதுரர் தெரிந்தார். இவரை வந்து கண்டு மெய்யன்பு செய்தார். அவ் உத்தமருக்கும் இவர் தத்துவ உபதேசம் செய்தார். மனதின் இயல்பையும் சுகம் துக்கம் முதலிய எவற்றிற்கும் அதுவே காரணமாகும் என்பதையும், அது நலமுறின் எல்லா நலங்களும் ஒருவனுக்கு ஒருங்கே உளதாம் என்பதையும் அவர் உணர உணர்த்தினார். புலகர், வற்சர் முதலியபெரியோர் இனத்தையே இவர் மருவியிருந்தார். துவாபர யுகத்தின் முடிவில் கண்ணன் தன்னை விட்டுப் பிரிந்து விடுவார் என்று தெரிந்து வருந்தி மயங்கினார். உணர்ந்த கண்ணன் இவரைத் தனியே அழைத்து வைத்து பிறப்பின் இயல்பையும் உயிர்களின் நிகழ்ச்சியையும் இவர் உணர உணர்த்தினார். அதன்பின் உண்மையை உணர்ந்து உயர்நிலை அடைந்தார். இயல்பாகவே மனநலம் உடையவராய் இருந்தும் இனநலத்தாலேயே அது வலியுறப் பெற்றார். அதனால் உயர்பதம் அடைந்தார். மறுமை இன்பத்தைத் தருதற்குரிய மனநலமும் இனநலத்தால் மாண்புறும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின் அல்லற் படுப்பதூஉம் இல் (460)

பரிமேலழகர் உரை : நல்லினத்தின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையும் இல்லை; தீயினத்தின் அல்லற் படுப்பதூஉம் இல் - தீய இனத்தின் மிக்க துன்பமும் இல்லை என்றவாறு.

**கதை**

கூன்பாண்டியன் என்பவன் மதுரையிலிருந்து அரசுபுரிந்த சத்துருசாதன பாண்டியனுடைய மைந்தன். இவனது காலம் நாலாயிரத்து முந்நூறு வருடங்கட்கு முன்னராகும். அழகு மிகுந்திருந்தும் முதுகில் ஒரு கூன் இருந்தமையால் இவன் பெயர் முன்னும் அது கூடியிருந்தது. இவன் சிறந்த போர் வீரன். மணம் புரியுமுன்னரே அரசு புரிந்து வந்த இவன் சேரன், சோழன் என்னும் இரு பெரு வேந்தரையும் ஒரு சேர வென்றான். இவனது பேராற்றலை வியந்து தனது அருமைத்திருமகளாகிய மங்கையற்கரசியைச் சோழன் இவனுக்கு மணஞ்செய்து தந்து பெரு நட்பு கொண்டான். இவனும் அக்கற்புக்கரசியொடு கலந்தினிதிருந்தான். இருக்குங்கால் சமணர் சிலர் வந்து இவனைத் தம்வயப்படுத்தினர். அவர் அருளையே தெய்வமாகக் கொண்ட விழுமிய சமணமதத்தைத் தழுவியிருந்தும் பழிவினைகளை அஞ்சாது புரியும் இழிவினையுடையவர். தவவொழுக்கமுள்ள தம்மதமுள்ளவர் அருளியுள்ள அரிய உண்மைகளை அறியலாற்றாது அம்மதத்தினர் வென்று தம்மை வெளிப்படுத்தி ஆரவாரஞ் செய்து அவமே புரிந்தார். அவராலே தான் அன்று முதல் அம்மதம் இழிக்கப்பட்டது. அமைதியும் பெருந்தன்மையும் அமையப்பெறாமல் சமயச்சார்பினர் போல் நடித்து பொதுவாக உள்ள ஓர் உயர்மதத்தை தம் உளமதப்படி திரித்துப் பொறாமையும் வஞ்சமும் புன்மையும் பொருந்தி அழிமதியுடையராய்ச் சிலர் ஒழுகுவாராயின் அவர் நிலைமை மிகவும் பரிதவிக்கத்தக்கதேயாகும். ஒரு குடியில் மடியுடை மக்கள் தோன்றின் அ்.்து அடியோடு கெடும். அது போல் ஒரு மதத்தில் செம்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலமும் இல்லாதவர்கள் செறியப்பெறின் தன் உண்மைச் சீர்மையை அஃது உறாமல் ஒழியும். இச்சிறுமையை அச்சமணமதம் அன்று சார்ந்தவர் தன்மையால் தாழ்ந்து நின்றது. அரசனும் அவரால் அறிவு திரிந்தான். தனது அரிய ஒழுக்கங்களைத் துறந்தான். அதனை நோக்கி அரசியார் வருந்தினார். அவ்வமையம் அங்கு வந்திருந்த திருஞான சம்பந்த சுவாமிகளால் நாயகனுக்கு நன்மதி கூற நயந்திருந்தார். அதனைச் சமணர்கள் அறிந்தார். அரசனிடம் சென்று சம்பந்தரைச் சதிசெய்ய வேண்டுமென்று துணிந்தார். அரசனும் இசைந்தார். அவர் இருந்த மடத்தில் அத்தீயோர் இரவு வந்து தீயினை வைத்தார். பிள்ளையார் அறிந்தார். உள்ளங்கவன்றார். இத்தீ பையவே சென்று பாண்டியற்காகவே என்று ஒரு பாடலைப் பரிந்து பாடினார். அவ்வாறே அஃது இதமுடன் சென்று அரசன் மேனியில் சுரமாகி நின்றது. அவன் ஆற்றாது அலறினான். சமணர்கள் வந்து அதனைத் தீர்க்க முயன்றார். முடியவில்லை. சம்பந்தர் வந்தார். வெண்ணீறு எடுத்து அவர் மேனியிற் பூசினார். உடனே உள்ள கூனோடு வெப்புநோய் ஒழிந்து மீனுயர்ந்த வள்ளல் மாசறக்கடைந்த விண்மணியெனப் பொலிந்தான். அரசன் அதனைக் கண்டான். அளவில் உவகை கொண்டான். தீயினத்தவரால் தான் முன் அடைந்த அல்லலை நினைந்தான். அகமிக வருந்தினான். அவரை அகற்றி ஒழித்தான். சம்பந்தரை அடைந்து வணங்கினான். முன்னர் இழிவும் துன்பமும் எய்தியிருந்த மன்னன் சம்பந்தரைச் சேர்ந்தபின் உயர்வும் இன்பமும் ஒருங்கே கொண்டான். தீயினம் அல்லற் படுத்தும் என்பதும், நல்லினம் அல்லறுத்து அருளுடன் காக்கும் என்பதும் உலகம் காண இவன் உணர்த்தி நின்றான்.

## 47ம் அதிகாரம். தெரிந்து செயல்வகை

அஃதாவது அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கோடல் பயனுடையதாயவழி அவரோடும் செயல்ப்படுவது ஆகலின், இது சிற்றினம் சேராமையின் பின்வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அழிவதூஉம் ஆவதூம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல் (461)

பரிமேலகர் உரை :- அழிவதூம் - வினை செய்யுங்கால் அப்பொழுது அதனால் அழிவதனையும்; ஆவதூம் - அழிந்தால் பின் ஆவதனையும்; ஆகி வழிபயக்கும் ஊதியமும் - ஆய்நின்று பிற்பொழுது தரும் ஊதியத்தையும்; சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயின் செய்க என்றவாறு.

**கதை**

பிட்டங் கொற்றன் என்பவன் சற்றேறக்குறைய இற்றைக்கு ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்கு முன்னர் சேரநாட்டில் இருந்த ஒரு குறுநில மன்னனாவான். அறிவு நூல்களையும் கருவி நூல்களையும் அமையக்கற்றவன். படைக்கலப் பயிற்சியில் மிக்க மகிழ்ச்சியுள்ளவன். நல்ல போர்வீரன். எவர் வரினும் இல்லை என்னாமல் கொடுக்கும் வள்ளண்மையுடையவன். இவன் சேரன் இரும்பொறை என்பவனுக்கு உறுதுணையாய் நின்றவன். பல போர்முனைகளிலும் சென்று பொருது வென்று அவனுக்குப் பெருமை தந்தவன். ஆழ்ந்த அறிவுடயனாய் இவன் வாழ்ந்துவருங்கால் நிலவளமுடைய மலைப்பகுதி ஒன்றை அரசனிடமிருந்து தனக்குரிமையாகப் பெற்றான். அதனைப் பயன்படுத்த முனைந்தான். எதையும் தெளிவாக உணர்ந்த பின்னரே துணிவாக இவன் செய்வதனால் முதலில் அதற்கு ஏற்படும் செலவையும், அதில் களையப்படும் மரங்களால் அது பொழுது உளவாம் வரவையும், பின்பு விளையும் பெருக்கையும் சீர்தூக்கி நன்கு நோக்கினான். பலனுறுமென்று தெளிந்து நலனுறச் செய்தான். பெரிய நீர்நிலைகளாலும் இனிய கனிமரங்களாலும் விரிந்த வயல்களாலும் அது பின் சிறந்து நின்றது. அதனால் இவன் பெருவளமுடையவனாய் எல்லார்க்கும் அருள் சுரந்து ஈய்ந்து அமைந்து வாழ்ந்தான். ஒரு வினையைச் செய்யுங்கால் அப்பொழுது அதனால் எய்தும் செலவு வரவுகளையும், பிற்பொழுது அதுதரும் ஊதியத்தையும் ஆராய்ந்தே அறிவுடையார் செய்வார் என்பதை இவன் அறிய உணர்த்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்றும் இல் (462)

பரிமேலழகர் உரை :- தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணிச் செய்வாரக்கு - தாம் தெரிந்து கொண்ட இனத்துடனே செய்யத் தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு: அரும்பொருள் யாதொன்றும் இல் - எய்துதற்கு அரிய பொருள் யாதொன்றும் இல்லை என்றவாறு.

**கதை**

தசரதன் பெருந்திருவுடையனாய் அறுபதினாயிரம் ஆண்டுகளாக இவ்வுலகை ஆண்டிருந்தும் மகப்பேறு இலாதவனாயினான். அதனை நினைந்து ஒருநாள் மிகவும் வருந்தினான். தனது பெரும் பருவத்தில் அவ் அரும்பொருளை அடைதல் அமையாதெனவும் கலங்கினான். ஆயினும் குலகுருவாகிய வசிட்டரிடம் ஒருமுறை உறுகுறையை உணர்த்தத் துணிந்தான்.

அறுபதி னாயிரம் ஆண்டும் மாண்புற
உறுபகை ஒடுக்கி இவ்வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறையிலை எற்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டாரோ

அருந்தவ முனிவரும் அந்தணாளரும்
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினார்
இருந்துயர் உழக்குநர் எற்பின் என்பதோர்
அருந்துயர் வருத்தும் என் அகத்தை என்றனன்.

மன்னன் சொன்ன இந் நன்னய மொழிகளால் அவனது மனப்பண்பும் உலகம் காத்த ஒண்மையும், உயிர்கள் மாட்டுள்ள தண்மையும், உறு பகை நீக்கிய உண்மையும், எண்ணுதற்கரிய வண்மையும் தன்னயங்கருதாத் தன்மையும் பிறவும் புலனாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஒரு புதல்வன் இல்லையே என்னாது என்பின் வையகம் மறுகுறுமே என்றதில் பலபொருள் நயங்கள் புகுந்து நிற்கின்றன. ஆயுந்தோறும் அறிஞர் அறிவுக்கு அஃதோர் பெருவிருந்தாகும். இதனைக் கேட்டவுடன் பரமபதநாதன் மனிதவுருக்கொண்டு இங்கு வருவதாக அமரர்குழாத்துள்முன் அருளியிருந்த தனிமொழியை முனிவர் மன்னுற உணர்ந்தார். மன்னனுக்கு உணர்த்தினார். அம்முதல்வனே தனக்குப் புதல்வனாக வருதற்குரிய சில உபாயங்களை அவரோடு ஆராய்ந்து உடனே செய்தான். அதனால் அவ் அரும் பொருளைத் தனக்கே உறும் பொருளாக இவன் அடைந்து மகிழ்ந்தான். உன்னையே புகல்புக்கேனுக்கு ஒரு பொருள் அரியதுண்டோ என்று முனிவனை உவந்து புகழ்ந்தான். அறிந்தவர்களோடு ஆராய்ந்து வினை செய்வார்க்கு அரிய பொருள்களெல்லாம் எளிதில் உளவாம் என்பதை இவன் எய்தி உணர்த்தினான்.

## 3. ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை ஊக்கார் அறிவுடை யார் (463)

பரிமேலழகர் உரை :- ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை மேல் எய்தக்கடவ ஊதியத்தினை நோக்கி முன் எய்திநின்ற முதல் தன்னையும் இழத்தற்கு ஏதுவான செய்வினையை; அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார் என்றவாறு.

### கதை

தமன் என்பவன் சூரிய குலத்து வேந்தனாகிய நரசியந்தனுடைய புதல்வன். தாய் பெயர் இந்திரசேனை. இவன் நுண்ணறிவுடன் நூலறிவும் சாலப்பெற்றவன். இளவரசனாய் இருக்கும் பொழுதே அரசியல் முறைகளை இவன் முழுவதும் தெளிந்தான். தான் செய்தற்குரிய வினையைக் குறித்து நெடிது நேரம் இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்திருப்பான். சிறிய கருமாயினும் நுணுகி அறிந்த பின்னரே அதன் மேல் துணிவுகொள்வான். அழகிலும் குணத்திலும் அக்காலத்தில் எவரும் தனக்கு இணையில்லாதவரும், தாருணதேசத்து அரசன் புதல்வியுமான சுமுனை என்பவளை மணந்து இவன் இனிது வாழ்து வந்தான். வருங்கால் வபுமந்தன் என்னும் பெயரினையுடைய மறுபுலத்து மன்னன் இவன் மேல் பகை கொண்டான். இவனை கெடுக்க முயன்று பல இடுக்கண் விளைத்தான். அவ்வெல்லாவற்றையும் முன்னறிந்து காத்து இவன் இன்னலுறாதிருந்தான். மாயங்கள் பல வல்ல இரசவாதி ஒருவனை அவன் இவன்பால் ஏவினான். வந்தவாதி பொருள் சிறிது தரின் அதனை மிகப் பெரிதாக்கி அளகை வேந்தன் போல் உன்னை ஆக்கிவிடுகிறேன் என்று இவன்முன் தூக்கி மொழிந்தான். இவன் அவனை நோக்கி நகைத்து வறிய பேழையொன்றை தூக்கிக் கொடுத்து நீ ஆக்கும் பொருளை இதில் அடக்கி வைத்து அவன் போல் நீயே ஆகியிரு என்று போக விடுத்தான். அக்கருத்தைக் கருதித் தன்முதலை இழத்தற்கு ஏதுவாகிய வினையை
அறிவுடையார் செய்யார் என்பதை இவன்பால் அவன் தேர்ந்து போய் வபுமந்தன் பால் நிகழ்ந்தை உரைத்தான். அவன் இவனது அரசைக் கவர்ந்து கொள்ளக் கருதி இறுதியில் ஒரு நாள் படையோடு திரண்டு இவன் நகர் மேல் வந்தான். தனியே தங்கித் தவங்கொண்டிருந்த இவன் தந்தையை அவன் கொன்றான். அதனை அறிந்த தமன் வஞ்சினங் கூறி வாளோடு எழுந்து படையை அறவென்று முடிவில் அவனையும் கொன்று அவன் உதிரத்தைக் கொண்டே தன் பிதிர்க்குரிய கருமத்தைச் செய்தான். அவன் அரசையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். இவனது அரசைக் கருதிவந்த அவன் தானும் அழிந்து தன் அரசையும் இழந்தான். ஆக்கம் கருதி முதலை இழக்கும் வினையை அறிவுடையார் ஊக்கார் என்பதையும் அறிவுகள் ஊக்கி அழிவர் என்பதையும் உலகம் அறிய முறையே இவர் இருவரும் உணர்த்தி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தெளிவில் லதனைத் தொடங்கார் இளிவென்னும் ஏதப்பா டஞ்சு பவர் (464)

பரிமேழகர் உரை :- தெளிவு இலதனைத் தொடக்கார் - இனத்தொடும் தளித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார். இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவு என்னும் குற்றம் உண்டாதலை அஞ்சுவார் என்றவாறு.

**கதை**

குலோத்துங்க பாண்டியன் என்பவன் இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் மதுரையில் இருந்து அரசு புரிந்த இராசசேகர பாண்டியனுடைய புதல்வன். அழகினால் மதனை வென்ற ஆடவர்திலகன் என்று இவனை அனைவரும் பாராட்டினர். ஆண்மையோடு அறிவும் அமைதியும் அமையப்பெற்றவன். தன் குலமகளிர் பலரை முறையே மணந்து நிறையின்பம் துய்த்தான். அம்மங்கையர் அனைவரும் மகப்பேறுடையராய் மகிழ்ந்து விளங்கினர். இவனுடைய முதல் மனைவிக்கு மாணிக்கமாலை என்று பெயர். இவன்புதல்வர் பலருள்ளும் அனந்தகுணன் என்பவனே சிறந்து நின்றான். மனைவியர் அமைவும், மக்கள் மாண்பும் இவனுக்கு மிக்க மகிழ்ச்சியை ஊட்டின. அரிய நலங்களை எல்லாம் ஒருங்கே எய்தி இவன் அரசு புரிந்து வருங்கால் மதுரையை நோக்கி வந்த மறையவன் ஒருவன் தன் மனைவியை நீலன் என்ற ஒருவன் கொன்றுவிட்டதாக இவன்முன் அவனைக் கொண்டு வந்து நிறுத்தினான். உண்மையில் வழியிடை இருந்த ஓர் ஆலமரத்தில் தொங்கிக் கிடந்த அம்பு அலைந்து விழுந்ததால் அவள் ஆவி துறந்தாள். அதனை அறியாமல் வேதியன் அவனை இழுத்து வந்தான். அவ்வேடனை இவ்வேந்தன் பார்த்தான். அவன் வாய்மொழிகளைக் கேட்டான். கொலைக்குரிய குறிப்பு ஒன்றும் அவன் முகத்தில் இல்லையே என்று அமைச்சரை அரசன் குறித்து நோக்கினான். இவனே கொன்றான் இவனே கொன்றான் என்று மறையவன் மாரடித்து நின்றான். தெளிவில்லாமையால் தண்டமொன்றும் செய்யாமல் வேடனை ஓரிடத்தில் நிறுத்தி விட்டுத் தன் குலதெய்வமாகிய சோமசுந்தரப் பெருமான் முன் தனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் நின்று உண்மை தெரியுமாறு உருகித் துதித்தான். அப்பெருமான் அருளால் ஒருமொழி வானில் எழுந்தது. அம்மொழிவழியே சென்று உண்மையை உணர்ந்து மறையவனுக்கு உணர்த்தினான். அவன் உணர்ந்து நாணித்தன் ஊருக்குப் போனான். வேடனைத் தேற்றி வேண்டுவகொடுத்து அரசன் வெளியே விடுத்தான். இழிவினை அஞ்சுபவர் தெளிவில்லாத வினையைத் தொடங்கார் என்பதும் ஆராய்ந்து தெளிந்தே அறிவுடையார் ஒரு காரியத்தைத் தொடங்குவர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து நின்றது.

## 5. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோர் ஆறு (465)

பரிமேலழகர் உரை :- வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழும் திறங்களை எல்லாம், முற்ற எண்ணாது சில எண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற் செல்லுதல்; பகைவரைப் பாத்திப்படுப்பது ஓர் ஆறு - பகைவரை வளரும் நிலத்திலே நிலை பெறச் செய்வதொரு நெறியாம் என்றவாறு.

### கதை

துந்துபி என்பவன் அசுர தச்சனாகிய மயனுடைய புதல்வன் மாயாவிக்கு முன் பிறந்தவன். அறிவிற் சிறந்தவனில்லையாயினும் ஆண்மையில் உயர்ந்தவன். அச்சம் என்பதை அணுவும் அறியாதவன். இவன் சினந்து முழங்கின் பேரிகைப் போலப் பேரொலி உண்டாகும். ஆதலால் இவனுக்கு துந்துபி என்று பெயரிடப்பட்டது. இவன் பிரமனை நோக்கி அருந்தவம் செய்து பெரு வரங்களை அடைந்தான். அதன் பின் அனைவரையும் வென்று அரசுரிமை கொண்டு மதிமுகி என்னும் அரசகன்னியை மணந்து அரும்போகம் துய்த்து மனக்களிப்பொடு மயங்கி இருந்தான். தேவரையெல்லாம் ஒருசேரவென்று விட்டதாகச் செருக்கியிருந்த இவன்பால் ஒரு நாள் நாரதர் வந்தார். “என் வன்மையைக் குறித்து உலகம் என்ன சொல்கின்றது என” இவன் அவரை எதிர்த்துக்கேட்டான். “அனைவரும் புகழ்கின்றார். வாலி மாத்திரம் உன்னைக் கேலி பண்ணுகிறான்.” என்று அவர் தமது வேலையை முடித்துச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுமுதல் அவனை கொன்றுவிட வேண்டுமென இவன் கன்றியிருந்தான். மாலயன் முதலானவரோடு வாது புரிந்து முடிவில் வாலிமேல் வந்தான். அவன் வன்மையை அறியாது வலிந்து அறை கூவினான். வலிய வந்தானே என்று அவ்வல்லவன் எழுந்தான். மல்லமர் புரிந்து இவன் வல்லுயிர் குடித்தான். இவன் மாய்ந்து தொலைந்தான். இவன் வழியினர் இன்னும் வருவர் எனஎண்ணி வஞ்சினங் கொண்டு வாலி தன்னை வலிசெய்து கொண்டான். வகையறச் சூழாது எழுதல் பகைவரைப் பாத்திப்படுப்பதோர் ஆறு என்பதனைத் துந்துபி எழுந்து காட்டினான்.

## 6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும் (466)

பரிமேலழகர் உரை :- செய்தக்க அல்ல செயக்கெடும் - அரசன் தன் வினைகளுள் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலால் கெடும். செய்தக்க செய்யாமை யானும் கெடும் - இனி அதனாலே -யன்றி செய்யத்தக்கனவற்றைச் செய்யாமை தன்னாலும் கெடும் என்றவாறு.

**கதை**

சமதக்கினி என்பவர் இருசித முனிவருடைய புதல்வன், தாய்பெயர் சத்தியவதி, தவஒழுக்கத்தில் இவர் மிகச் சிறந்தவர். இவர் இரேணுகையை மணந்து அனு, விசுவாவசு, பரசுராமர், திரணதூமாக்கினி என்னும் புதல்வர் நால்வரைப் பெற்றார். அவருள், தமிழ்க்கடலுள் இனிதாக உலாவுதற்கு அருங்காலமாக அமைந்துள்ள தொல்காப்பியம் என்னும் சிறந்த நூலைத் திரணதூமாக்கினியாரே ஆக்கி அருளினார். தொன்மையான காப்பியக் குடியில் தோன்றினவராதலால் இவர் பின்பு தொல்காப்பியர் எனப்பெற்றார். இங்ஙனம் அறிவறிந்த மக்களும், அழகமைந்த மனைவியும் இனிதமையப் பெற்று நெறிவழுவாமல் இவர் இல்லறம் புரிந்து வருங்கால் ஒருநாள் பிதிர்க்கடன் ஆற்றும் பொருட்டில் பால்கறந்து ஒரு கலத்தில் வைத்திருந்தார். அதனை ஒரு காக்கை வந்து கரந்து குடித்தது. இவர் கண்டார். அதுவும் ஒரு உயிர்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்துச் செல்லட்டும் என்று இவர் ஒன்றும் செய்யாமல் இருந்தார். எங்களுக்கு வைத்திருந்த பாலை ஒரு பறவை குடித்து எச்சிலாக்குவதைப் பார்த்திருந்தும் ஓட்டாதிருந்தாய் ஆதலால் நீ கீரி ஆகக் கடவாய் என்று பிதிரர் சீறி மொழிந்தார். உடனே இவர் கீரி ஆனார். பாரில் அலைந்து சந்துப்பிரத்தன விருந்தோம்பிய மிச்சிலில் புரண்டு ஒருபாதி பொன்னிறமாகப் பெற்று தருமரது அசுவமேத யாகத்தில் புகுந்து அங்குப்புரண்டு ஒன்றும் தோன்றாமை கண்டு அதனை இகழ்ந்து பின்பு அவர் போற்றப் புகழ்ந்து முழுதும் பொன்னிறமாகிப் பிதிரரை முன்னினார். அவர் அருளுடன் தோன்றி நீ அன்று செய்ய வேண்டிய கடமையைச் செய்யாது தாழ்ந்தமையால் இத்தாழ்வு வந்ததென்று வாழ்வுறக் கூறிச் சாபத்தை நீக்கினார். முனிவர் முன்னைய உருவமடைந்து அறநுணுக்கங்களையும், பருவமறிந்து கருமம் செய்யாமையால் தான் எய்திய சிறுமையையும் அறிந்து தெளிந்தார். செய்யத்தக்க செய்யாமையானும் கெடும் என்பதை உலகறிய இவர் உணர்த்தி நின்றார்.

## 7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்ப திழுக்கு (467)

பரிமேலழகர் உரை :- கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தையும் எண்ணித் தொடங்குக. துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வைத்துப் பின் எண்ணக்கடவோம் என்று ஒழிதல் குற்றம் ஆதலான் என்றவாறு.

**கதை**

சிரகாரி என்பவர் கௌதமருடைய புதல்வருள் ஒருவர். சதானந்தருக்கு இளையவர். நுணுகிய அறிவோடு விழுமிய குணங்கள் பலவும் நிறைந்தவர். ஒரு நாள் தன் தாயாகிய அகலிகை மேல் தந்தையார் சிறுதுணி கொண்டார். அதனால் பண்டு நிகழ்ந்த பெரும் பிழையையும் அன்று அவர் கருத்திற் கொண்டு கடுஞ்சினங் கூர்ந்தார். மூன்று தினங்களுக்குள் அவளைக் கொன்றுவிட வேண்டும் என்று சிரகாரிக்கு ஆணைகொடுத்துத் தனியிடத்திலிருந்து அவர் மனமடங்கியிருந்தார். தந்தை பணித்ததை இதுவரையும் தவறாது செய்து வந்த இவர் அக்கொடுவினையை நினைந்து நின்று நெடிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவன்றார். தந்தை சொல்லின்படி நடப்பதே தருமம் என்று ஒருமுறை எண்ணித் துணிவார். தாயினும் சிறந்தபொருள் யாதும் இல்லையே என்று தயங்கித் தளர்வார். தாழாது செய்யுமாறு தனக்குத் தந்தையார் தந்த கருமத்தின் விளைவை இவர் கருதி ஆய்ந்தார். அது முடிவுறாமையால் இவர் அதில் அடியுறாது நின்றார். யாதுஞ்செய்யாது எண்ணி எண்ணி நின்றதால் குறித்த கால எல்லை கழிந்தது. கௌதமர் விழித்தார். கோபந்தணிந்தார். தனது மனைவியை நினைந்தார். அவளது பேரழகையும் பேதமை இயல்பையும் எண்ணியிரங்கிப் பெரிதும் இவன்றார். தான் கூறியபடியே மைந்தன் கொன்றிருப்பானோ என்று குலைந்து எழுந்தார். விரைந்து வந்தார். துணிந்து செய்யாமல் வினையின் விளைவை ஆராய்ந்து கொண்டே நிற்கும் புதல்வரைக் கண்டார். பெருமகிழ்வு கொண்டு அவரைப் பேணியணைத்துச் "சினத்தால் மனந்திரிந்து சொன்னதைத் துணிந்து செய்திடாமல் நினைந்து நின்று நின் பெயரியல்பை விளக்கினாய்" என்று புகழ்ந்து போற்றினார். சிரகாரி என்பதற்குக் காரியங்களை ஆராய்ந்து செய்வோன் என்பது பொருள். தாயின் அழிவையும் தந்தைக்கும் தனக்கும் வரக்கூடிய பழியையும் ஆராய்ந்து செய்யவல்ல தமது நுணுகிய அறிவினால் அகற்றியருளினார். முனிவரும் பிறரும் இவரது தெரிந்து செய்யும் திறத்தை வியந்து புகழ்ந்தார். அறிவுடையார் எக்கருமத்தையும் எண்ணியே துணிவர் என்பதை உலகம் இவர்பால் கண்டது.

## 8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று போற்றினும் பொத்துப் படும் (468)

பரிமேலழகர் உரை :- ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் துணைவர் பலர் நின்று புரைபடாமல் காப்பினும் புரைபடும் என்றவாறு.

### கதை

மன்மதன் என்பவன் திருமாலுடைய அருமைத் திருமகன். அழகிற்கு இவன் அதிதேவதை. உலகில் அழகு அமைந்தவர்களைக் கவிகள் புகழவிரும்பின் இவனை உவமையாக்கியே புகழ்வார். உள்ளத்தில்களிப்பூட்டி உயிர்களுக்குக் காம இச்சையை விளைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் உலகை விருத்தி செய்தான். இவன் தேவியர் இரதி. கரும்பு வில்லாகவும், சுரும்பு நாணாகவும், தாமரை, அசோகம், சூகம், முல்லை, நீலம் என்னும் ஐவகை மலர்கள் அம்புகளாகவும் தென்றல் தேராகவும், பெண்கள் படைகளாகவும் தனக்கு அமையப் பெற்றவன். இவற்றால் ஞானியர், தீரர் சூரர்களை எல்லாம் இவன் இமைப்பில் துரும்பு செய்வான். மிக்க துடுக்குள்ளவன். பொறிகளை அடக்கி ஒருவன் அருந்தவம் செய்யப்புகின் உடனே இவன் அவன் உள்ளம் புகுந்து தன் குறும்பினைச் செய்வான்.

தாதவிழ்பூங் குழற்கனிவாய் தந்தைமொழி முத்துநகைத்
 தையலர்மேல்
காதலுறப் புரிசெயலே என்வடிவாய் அவரவர்தங்
 கருத்துட்டோன்றி
ஏதம் விளை விக்கும் என்னால் இரதியால் எனது சின்னத்
 தியல்பால் என்றும்
ஆதரவுற் றின்பமென்னும் அவ்வலையில் எவ்வுலகோர்
 அகப்பட்டாரே (1)

ஒத்தேறும் உருவம் இல்லாப் பிரமம் ஒன்றுமே யொழிய
 உருவமுள்ளார்
எத்தேவ ராயினும்ஓர் பூங்கணையால் தம்போகம்
 எல்லாம் நீக்கி
மத்தேறி உடையதயிர் போல் மனஞ்சுழன்று செயன்மறந்து
 மடவார் ஆசைப்
பித்தேறி இதமுரைத்துப் பேதையர்க்கும் பேதையராய்ப்
 பின்செல்வரால் (2)

செங்குமுத வாய்அதரச் சேயிழையார் நேயம்எவர்
 திறம்ப வல்லார்
அங்கவர்தம் பார்வையினால் யார்க்குமனங் கரைந்துருகா
 ததுவும் அன்றி
இங்கெனது பேர்ஞாலத் தெவ்வளவுண் டவ்வளவும்
 எவரே மாயக
கங்குல்விடிந் திருள்கழித்துக் கண்ணும் விழித் துணர்
 விதென்று காணவல்லார். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் தன்திறமையைக் குறித்துப் பெருமை பாராட்டி எவரிடமும் காட்டும் இயல்பினன். சனகாதி முனிவருக்கு உபதேசம் செய்துவிட்டுத் தனியாக யோகத்தில் இருக்கும் பரமனை உலக விருத்தியின் பொருட்டு அமரரனைவரும் எழுப்ப விரும்பினர். அதற்கு இவனே உரியவன் என்று இசைத்து விடுத்தார். இவனும் இசைந்து சென்று இறைவனை அணுகினான். அனைவரும் புடைநின்று இவனைக் காத்தார். எழுந்தருளும்படி இவன் குழைந்து வேண்டாமல் தன்கணையை முதல்வன் மேல் இழுத்து ஏவினான். அது விரைந்து பாய அவர் விழித்து நோக்கினார். இவன் வெந்து சாம்பரானான். கருதிய நன்மை தொலைந்து கருதாத தீமை உளதாயதைக் கண்டு இவன் தேவி கலங்கி நொந்தாள். முறையான உபாயத்தால் முயலாமையால் அயன் முதலாகப் பலர் நின்று போற்றியும அம் முயற்சி பிழைபட்டழிந்து போனது. ஆற்றின் வருந்த வருத்தம் பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் என்பதை அன்று எல்லோரும் ஒத்துணர்ந்து கொண்டார். பின்பு முறையோடு போற்றி இறைவனருள் பெற்றார். இரதியும் முயன்றதால் மதனும் எழுந்தான். அதுமுதல் உருவிலி எனவும் அருங்கன் எனவும் மதன் உரைக்கப்பெற்றான்.

## 9. நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்<br>பண்பறிந்து ஆற்றாக் கடை (469)

பரிமேலழகர் உரை :- நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேற்று வேந்தர்மாட்டு நன்றான உபாயம் செய்தக்கண்ணும் குற்றம் உண்டாம்; அவர் அவர் பண்பு அறிந்து ஆற்றாக்கடை - அவரவர் குணங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கு இயைய செய்யாவிடின் என்றவாறு.

**கதை**

குபேரன் என்பவன் விச்சிரவசு என்னும் முனிவருடைய மகன். தாய்பெயர் எழிவிளை, இவன் வடதிசைக்கு உரியவன். பருவம் நிரம்பு முன்னரே அரிய தவத்தைச் செய்தான். அதனால் இயக்கர் குலத்திற்குச் தலைவனாயினான். இவன் சித்திரரேகை என்னும் உத்தமியை மணந்து அளகையில் இருந்து அரசுபுரிந்து நளகூபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் புதல்வனைப் பெற்றான். சங்கநிதி பதுமநிதி முதலிய உயரிய நிதியங்களுக்கெல்லாம் இவன் அதிபதியாவான். தனதன், மரகதன், இருநிதிக்கிழவன், அளகையாளி முதலிய பல ஏதுப்பெயர்களை இவன் எய்தியுள்ளான். பசிய உருவினன், இனிய மொழியினன். நிறையும் நீதியும் இறை வழுவாதவன். இதனால் இறைவனுக்கும் இவன் இங்ஙனம் இருக்குங்கால் இராவணன் அமரர் பலரையும் வென்று இவனது அளகைக்கு வந்தான். அழகிய சோலைகளை அழித்தான். அனைத்தையும் அழிக்க முயன்றான். தனக்கு ஒரு வகையில் அவன் தம்பியாதலால் அமர் புரியாது அகலுமாறு பல இனிய மொழிகளை இசைத்துப் பல அரிய பொருள்களை உதவி தனது உரிமையையும் ஓதிவரும்படி அவன்பால் ஒரு தூதுவனை விடுத்தான். அவன் சென்றான். அவனைக் கண்டு பணிந்தான். கையுறை வைத்துக் கனிந்துமுன் நின்றான்.

மூத்துளோர்கள் சொல் முன்பின்னா பின்பினி தென்னும்
வார்த்தை யுண்டது மனத்தினிற் கொண்டு யானுரைப்ப
வார்த்தையாகுமீ தென்றுகொண் டறம்வழுவாமல்
பார்த்துச் செய்வசெய் பழிபடுகாரியம் செய்யேல்

என்று குபேரன் ஓதிவிடுத்த இந்த நீதி மொழிகளைத் தூதன் அவன் பால் ஓதினான். இவற்றை அவன் கேட்டான். அறிவிற் சிறந்த தனக்கும் ஒருவன் அறிவுறுத்த வந்தானே என்று சுழன்று சினந்தான். தன் இடையிலிருந்த கடிவாளை உருவினான்.

ஆசில்லாதரன் ஒப்பவன் அளகையிலவனாம்
ஈசன் தோழனாம் அவையெலாம் என்முனஞ்சார்ந்து
பேசும் தூதனார் பெறுகென இவைஎன வாளால்
வீசினான் அவன் இருதுணியாக மண்வீழ

இங்ஙனம் துணிபட வீசிய அக்கொடியவன் முன்னையினும் சினந்து தனது பொருபடைகளை அளகைக்குள் ஏவினான். அழித்துக் கொள்ளை செய்து அகன்று போயினான். நல்ல உபாயங்களைக் குபேரன் நயந்து செய்தும் அவற்றால் பொல்லாங்கே மிகுந்து அல்லல் அடைந்தான். அவரவர் பண்பினையறிந்து ஆற்றாக்கடை, நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு என்பதை உலகம் குபேரன்பால் அன்று உணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொரு காலத்தில் தூக்கணாங்குருவி ஒன்று தன்குஞ்சு களோடு தான் கட்டிய ஒரு கூட்டில் இனிதாக வாழ்ந்து வந்தது. ஒருநாள் பெருமழை பெய்தது. அதனால் நனைந்து மெலிந்த வானரம் ஒன்று தூக்கணாங் குருவியிருந்த மரத்தின் அடியில் வந்து ஒதுங்கி நின்றது. அதனை மேலிருந்த அப்பறவை கண்டது. பரிவு கொண்டு கூடு ஒன்று கட்டி வசிக்கும்படி அக்குரங்கிற்கு நீதி கூறியது. குருவியுரை குரங்கிற்கு ஏற்காமல் உடனே தாவி அக்கூட்டைப் பிய்த்து எறிந்தது. பண்பறிந் தாற்றாமல் குருவி நன்றாற்றியும் அது குன்ற நேர்ந்தது.

வானரம் மழைதனில் நனையத் தூக்கணாம்
தானொரு நெறி சொல்லத் தாண்டிப் பிய்த்ததே
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடரதாகுமே

(விவேக சிந்தாமணி)

## 10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு கொள்ளாத கொள்ளா துலகு (470)

பரிமேலழகர் உரை :- தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளது - அரசர் வினை முடித்தற் பொருட்டுத் தன்னிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகம் தம்மை இகழாநிற்கும் எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் - ஆகலான் அஃது இகழா உபாயங்களை நாடிச் செய்க என்றவாறு.

### கதை

சாந்தகி என்பான் யதுகுலதிலகனும் வசுதேவருக்கு ஒருவகையில் தம்பியுமான சத்திபகனுடைய புதல்வன். அருந்திறலும் பெருங்குணங்களும் அமையப் பெற்றவன். இராமனுக்கு இலக்குவன் போலக் கண்ணனுக்கு இவன் அமைந்திருந்தான். விசயனிடத்தில் வில்வித்தையை இவன் இசையுறக் கற்றான். அதனால் அவன் பால் பேரன்பு கொண்டான். இவனது உண்மையையும், திண்மையையும், ஒண்மையையும் நினைந்து அவனும் இவன்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவகைகொண்டிருந்தான். பாண்டவர்கள் வனவாசம் முடிந்து வந்த பின்பு துரியோதனனிடம் போய் நாடு வேண்டி வரும்படி கண்ணனைத் தூது விடுக்கத் துணிந்தார். கண்ணனும் இசைந்தான். உடன் பிறந்தவன் போல உடனிருந்த சாந்தகி அன்று உடன்று எழுந்தான். வன்மையும் மேன்மையும் வாய்ந்திருந்தும் அப்புன்மையன்பால் இரவலர் போல் இழிந்து சென்று உங்களுரிமையைப் பெற விரும்புகின்றீர்களே என்று அவரை எதிர்த்து சினந்தான். நும் நிலைமையோடு பொருந்தாத செயலினை நீவீர் செய்வதேன் என தன் உள்ளங்கனன்றான். திண்மையும் வீரமும் இல்லாத கண்ணன் செய்த சூழ்ச்சியோ! இதுவென்று தன் அண்ணனையும் வைதான். அரசன் தெரிந்து செய்யவேண்டிய வகையை இவன் அறிந்து சொன்னதை மகிழ்ந்து கண்ணன் இவனை அணைத்துப் போற்றி மேல் நிகழப் போகும் உண்மையை உணர்த்தி ஆற்றினான். ஆயினும் எள்ளாதன அரசர் எண்ணிச் செய்ய வேண்டும். தம்மோடு கொள்ளாதன உலகம் கொள்ளாது என்பதை இவன் கொண்டு உணர்த்தினான்.

தண்டிருந்த திவன் கரத்தில் தனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன் மேல் மாசிருந்ததென இருந்தான்
கண்டிருந்தீர் எல்லாரும் கருதலர் பால் ஊர் வேண்டி
உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே (1)

சண்டமுகில் உருமனைய சராசந்தன் தனக்கஞ்சி
வண்டுவரை அரணாக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்பதியோ திகழ்தருமன் தன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய் வேண்டுவதென்றான். (2)

## 48ம் அதிகாரம். வலியறிதல்

அஃதாவது அவ்வுபாயங்களில் ஒறுத்தல் குறித்த அரசன் நால்வகை வலியையும் அளந்து அறிதல். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் - (471)

பரிமேலகர் உரை :- வினைவலியும் - தான் செய்யக் கருதிய வினைவலியும் தன்வலியும் அதனைச் செய்து முடிக்கும் தன்வலியையும் மாற்றான் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும் துணை வலியும் - இருவர்க்கும் துணையாவார். வலியையும் தூக்கிச் செயல் - சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க என்றவாறு.

**கதை**

அனுமான் இராம தூதனாய் இலங்கையுட் புகுந்து சீதையை அரிதிற் கண்டு சம்புமாலி பஞ்சசேனாதிபதி முதலிய அரக்கர் பலரையும் வென்று, அரக்கனைக் கொன்று முடிவில் இந்திரசித்தின் பாசத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு இராவணனைக் கண்டான். பெருஞ்சினங் கொண்டான். உடனே அவன்மேற் பாய்ந்து இவன் அமர் செய்யத் துணிந்தான். துணைவலி முதலிய அவனது நிலைமைகளையும் தனது தனிமையையும் சீர்தூக்கி நோக்கினான். போர் செயல் தீதென்று தெளிந்தான். அதனை ஒழித்துப் பின் ஆவன செய்தான். அறிவுடன் மீண்டான். வினைவலியும் தன்வலியும், மாற்றான் வலியும், துணைவலியும், தூக்கி நோக்கியே அறிவுடையார் தமது வினையைச் செய்வார் என்பதை அனுமான் அன்று விளக்கிக் காட்டினான் என்பதைப் பின்வரும் சுந்தரகாண்டப் பாடலின் மூலம் நன்று விளங்கிக் கொள்ளலாம்.

கொல்லலாம் வலத்தனும் அல்லன் கொற்றமும்
வெல்லலாம் தரத்தனும் அல்லன் மேலைநாள்
அல்லெலாம் திரண்டன நிறத்தன ஆற்றலை
வெல்லலாம் இராமனால் பிறரும் வெல்வரோ (1)

என்னையும் வெலற்கரி திவனுக் கீண்டிலன்
தன்னையும் வெலற்கரி தெனக்குத் தாக்கினால்
அன்னவே காலங்கள் கழியும் ஆதலால்
துன்னருஞ் செருத்தொழில் தொடங்கல் தூயதோ (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றூக்கி எயிறுகடித் திருகரனும் பிசைந்தெழுந்து
நின்றூக்கி உணர்துரைப்பான் நேமியோன் பணியன்றால்
ஒன்றூக்கி ஒன்றிழைதல் உணர்வுடைமைக் குரித்தன்றால்
பின்றூக்கின் இதுசாலப் பிழையாகும் எனப் பெயர்ந்தான். (3)

## 2. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச் செல்வாக்குச் செல்லாத தில் (472)

பரிமேலழகர் உரை :- ஒல்வது அறிவது அறிந்து - தமக்கு இயலும் வினையையும் அதற்கு அறியவேண்டுவதாய வலியையும் அறிந்து அதன் கண்தாங்கில் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழி மெய்களை அதன்கண் வைத்துப் பகை மேற்செல்லும் அரசர்க்கு செல்லாதது இல் - முடியாத பொருள் இல்லை என்றவாறு.

**கதை**

சுக்கிரீவன் நெடுங்காலமாக வாலிக்குப் பயந்து ஒடுங்கி இருந்தான். இருக்குங்கால் இடையே இராமனைக் கண்டு நட்புக் கொண்டான். அவர் உதவியால் தனது பகைவனை வென்று விடலாம் என்று துணிந்தான். அனுமான் முதலானவரோடு ஒல்வதை அறிந்து உடனே சென்றான். செல்லுங்கால் தனக்குத் துணையாய் வருகின்ற இரகுவீரன் வலியைச் சுக்கிரீவன் அறியவிரும்பினான். ஆயினும் அதனை வெளிப்படையாக உரைக்க அஞ்சினான். அக்குறிப்பை அனுமான் உணர்ந்து இடைவழியில் நிற்கின்ற வலிய மராமரங்கள் ஏழையும் ஒருகணையால் அவ்வீரன் எய்யக்காண்டி என்று இவனைச் செய்யத் தூண்டினான். இவனும் தன் உள்ளக்கருத்தை அவ்வள்ளல் பால் வணங்கி உரைத்தான். அவர் புன்னகை செய்து இவன் எண்ணியபடியே ஒரு கணையை எய்து காட்டினார். அது

ஏழுமராமரம் உருவிக் கீழுலகமென் றிசைக்கும்
ஏழுமூடுபுக் குருவிப்பின் னுடனடுத் தியன்ற
ஏழிலாமையால் மீண்டதவ் இராகவன் பகழி
ஏழுகண்டபின் உருவுமால் ஒழிவதன் றின்னும்

என்றபடி ஏகிநின்றது. இவன் கண்டான். தனக்கு வாய்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையின் வலியை நினைந்து பெருமகிழ்வு கொண்டு துணிவோடு போர் மேற்கொண்டு சென்று வாலியை வென்று பேரரசை அடைந்தான். ஒல்வதையும், அறிவதையும் உணர்ந்து அதன் கண் உறைந்து செல்வர்க்குச் செல்லாதது ஒன்றுமில்லை என்பதை உலகம் இவன் பால் உணர்ந்தது.

## 3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
## இடைக்கண் முறிந்தார் பலர் (473)

பரிமேலழகர் உரை :- உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலையுடைய தம் வலியின் அளவு அறியாதே ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியால் தம்மின் வலியாரோடு வினை செய்தலைத் தொடங்கி, இடைக்கண் முறிந்தார். பலர் - அவர் அடர்த்தலான் அது செய்துமுடிக்கப் பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர் என்றவாறு.

### கதை

சலந்தரன் என்பவன் ஓர் அசுரவீரன். இந்திரன் ஒருமுறை இறுமாப்போடு கைலைக்குச் சென்றான். அதனால் உருத்திர மூர்த்தி பூதவடிவினராய் அவனெதிரே தோன்றிச் சிறிது சினந்தார். அமரர் கோமான் அதனை அஞ்சி வணங்கினான். அச்சினம் அவனை அருள் செய்து விடுத்து ஒருவாய்த்திரண்டு போய்க் கடலில் விழுந்தது. உடனே ஓர் அழகிய குழந்தையாய் அஃதமைந்தெழுந்தது. கடலிறைவன் கண்டு காத்துவந்தான். பிரமன் வந்து ஒருநாள் அக்குழந்தையை எடுத்தார். அவரது தழைத்த தாடியை அக்கொழுத்த பிள்ளை வளைத்துப்பிடித்தது. அவர் அசைத்து அலறினார். அது நகைத்து விடுத்தது. சலம் தரித்து நின்றதனாலும் பிரமனுக்குச் சலத்தை தந்ததனாலும் சலந்தரன் என்று இவன் பெயர் கொண்டெழுந்தான். (சலம் - சினம், நீர், துயரம்) இவன் பின்பு பெருந்தவம் செய்து அசுரகுலத்துக்கெல்லாம் அரசனாகிப் பிருந்தை என்னும் கன்னியை மணந்து திருந்திய போகங்களைத் துய்த்துப் பெரும் புகழோடு சிறந்து விளங்கினான். அமரர் முதல் அனைவரையும் வென்றான். எவரும் தனக்கு நிகரில்லை என்று இறுமாப்புக் கொண்டான். கைலைநாயகனையும் கலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றுவிடவேண்டுமென்று கலங்காதெழுந்தான். கற்புக்கரசியாகிய தன்மனைவி தடுத்தும் இவன் கருதாமற் சென்றான். கைலையை அணுகினான். அம்முன்னவன் ஒரு முனிவன் போல் இவன் முன்னே தோன்றி "நீ முன்னிவந்தது என்னே" என்றார். உன்னிவந்ததை இவன் உரைத்து நின்றான். அவர் ஒரு துரும்பை வளைத்து நிலத்தில் அழுத்தி இதனை நீ எடுக்க வல்லையேல் அவரோடு அமர்தொடுக்க வல்லை என்றார். இவன் அதனைச் சிரித்து ஊதினான். அது சிறிதும் அசையவில்லை. இவன் சினந்து அசைத்தான். அவர் கனந்தானோ என்று நகைத்தார். தன் ஊக்க மிகுதியால் உழைந்து தூக்கிக் கழுத்துவரையும் அதனை இழுத்து வந்தான். அதன் கனத்தை ஆற்றாது இடையே கைதளர்ந்தான். அதனால் இவன் கண்டம் துண்டுபட அது மண்டி விழுந்தது. இவனும் மாய்ந்து விழுந்தான். தன்வலி அறியாது ஊக்கினால். இடையே அழிவடைவான் என்பதை உலகம் சலந்தரன்பால் உணர்ந்து கொண்டது.

## 4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும். (474)

பரிமேலழகர் உரை :- ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல் வேந்தரோடு பொருந்து ஒழுதுவது செய்யாது; அளவு அறியான் - தன் வலியளவு அறிவதும் செய்யான்; தன்னை வியந்தான் - தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன்; விரைந்து கெடும் - விரையக் கெடும் என்றவாறு.

### கதை

வலன் என்பவன் ஓர் அசுரவீரன். இவனது காலம் பலநூற்றாண்டுகட்கு முன்னராகும். இவன் உமாபதியை நோக்கி உயர் தவம் செய்து அரிய நலங்கள் பல அமையப் பெற்றான்.

பின்பு விசயசித்தி என்னும் அழகிய மங்கையை மணந்து வேண்டிய போகங்களை நுகர்ந்து இசையுடன் வாழ்ந்தான். நேரில் வந்து நின்றால் எவரும் இவனைப் போரில் வென்று கொள்ளார். அளவிடலரிய தனது உடல்வலி முதலியவற்றை வியந்து எவரையும் இவன் மதியாதிருந்தான். அமரரனைவரையும் அடக்கி வென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரோடும் இவன் அமைவின்றி ஒழுகினான். இவனை வஞ்சனையால் வெல்லக்கருதி இந்திரன் ஒருநாள் இவன்பால் வந்தான். "உன் தோள்வலியை வியந்தேன் அதனால் நீ விரும்பிய பரிசிலை மகிழ்ந்து தரவிளைந்தேன்" என்றான். அதனைக் கேட்ட இவன் மிகவும் நகைத்தான்.

ஈறிலான் அளித்த நல்ல வரமெனக் கிருக்கநின்பால்
வேறுநான் பெறுவதுண்டோ வேண்டுவ துனக்கியா தென்பால்
கூறுநீ அதனையின்னே கொடுக்கலனாகில் உன்போல்
பாறுவீழ் களத்தில் தோன்ற பழிப்புகழ் பெறுவனென்றான்.

இங்ஙனம் தன்னை வியந்து இவன் கூறியதை அவ்விந்திரன் கேட்டான். அமையாதவன் இன்று அமைந்தான் என்று அகமகிழ்ந்து யாகப்பசுவாக இவனை ஆக்கிக்கொண்டு போய் அடக்கிக் கொன்றான். அமைந்து ஒழுகாமல் தன்னை வியந்தவன் விரைந்து கெடுவான் என்பதற்கு வலன் எடுத்துக்காட்டாக விளங்கினான்.

## 5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் (475)

பரிமேலழகர் உரை :- பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலி ஏற்றிய சகடமும் அச்சுமுறியும்; அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப்பீலியை அது பொறுக்கும் அளவன்றி மிகுத்து ஏற்றின் என்றவாறு.

**கதை**

மகதேகர் என்பவர் ஒருவகை அசுரகூட்டத்தார். தென்கீழ்த் திசையில் மந்தேகம் என்னும் நகரில் இருப்போர். இவர் மிக்க கொடுஞ்செயல் உடையவர். தன் வன்செயலுக்கு இரவொன்றே உரியதென்று கருதியிருந்தார். இவர் பிரமனை நோக்கி அருந்தவம் செய்து பெருந்திறல் அடைந்தார். இரவில் எங்குஞ் சென்று எண்ணிய வண்ணம் இயற்றித்திரிந்தார். இதனால் நிசிசரர் என்னும் பெயரினை எய்தினார். தமது வஞ்சச் செயலுக்குச் சூரியன் இடையூறாக இருக்கின்றான் என்று கருதி உதயகாலத்தில் அவன் மேல் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய எழுந்தான். அவ்வமையம் வேதியர் காயத்திரி மந்திரத்தை ஓதி ஆதவனை நோக்கி நீரை அள்ளித்தூவினார். பல இடங்களில் இருந்தும் பல்லாயிரவர் வீசியதால் அதன் நிறை வலிக்கு அஞ்சி அவர் நீங்கிச் சென்றார். நீராயிருப்பினும் முறையோடு மறையவர் பல திரண்டு பெய்ததால் அவர் வலியடங்கி நின்றார். மெலியாராயினும் பலர் ஒருங்கு திரண்டால் வலியவரையும் அவர் வலியழிப்பர் என்பதை மகதேகர் அறிந்து மறைந்தார்.

மறையவர்பெய் கைநீரால் மகதேகர் வலிதொலைந்தார்
முறையுடைய வானரங்கள் முன்பெய்த மலைநிரையால்
நிறைகடலும் மேடாகி நின்றதால் பலர்திரண்டால்
குறைவறு போர்வலியினரும் குன்றுவர்தம் பெருவலியே.

## 6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி ஆகி விடும் (476)

பரிமேலழகர் உரை :- கொம்பர் நுனிக்கண்ணே ஏறி நின்றார். தம் ஊக்கத்தால் அவ்வளவினைக்கடந்து மேலும் ஏற ஊக்குவிப்பாராயின் உயிர்க்கு இறுதி ஆகிவிடும் - அவ்வூக்கம் அவருயிருக்கு இறுதியாகி விடும் என்றவாறு.

### கதை

மதுரையில் இருந்த வங்கிய சூடாமணிப் பாண்டியன் என்னும் அரசன் ஒருநாள் தனது மனைவியினுடைய கூந்தலில் இருந்து எழுந்த புதுமணத்தை இனிது நுகர்ந்தான். அந்நறுமணம் அதற்கு இயற்கையா? என்று ஐயுற்றான். தன் ஐயம் தெளியுமாறு அதனை அறிந்து கவி செய்வார்க்கு ஆயிரம் பொற்காசு பரிசுதருவதாக உறுதிசெய்து வெளியில் உரைசெய்தான். அப் பொற்கிழியைப் பெறவிரும்பிப் புலவர் பலர் கவிகள் புனைந்தார். தருமி என்னும் மறையவன் ஒருவன் அதனைப் பெறவிழைந்து இறைவனை நினைந்து தொழுதான். அரசன் கருதியதைப் பரமன் ஒரு கவியில் அமைத்துத் தருமிக்கு அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிழியது கெழிஇய நட்பின் மயிலியற்
செயிறெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே (குறுந்தொகை)

இறைவன் அருளிய இதனை அவன் எடுத்துச் சென்று சங்கம் புகுந்தான். புலவர் புலங்கொண்டு நோக்கினார். தன்கருத்து அதில் அமைந்துள்ளமையைக் கருதி அரசன் மகிழ்ந்தான். தருமி பொன்பொதியை எடுக்கப் பொங்கி எழுந்தான். கவியில் குற்றமுளது அதனைத் தொடாதே என்று நக்கீரர் தடுத்தார். பாவம், பார்ப்பான் வந்த வழியைப் பார்த்து மீண்டான். இறைவன் திருவடியில் வீழ்ந்து அழுதான். உடனே சோமசுந்தரப் பெருமான். ஒரு புலவன் போல் வடிவங்கொண்டு அரசவைக்கு வந்து என்கவிக்குக் குற்றங்கூறியது யார் என்று குணமுறக் கேட்டார். யானே கூறினேன் என்று கீரர் நேரே வந்தார். அவர் என்ன குற்றம் என்றார். மகளிர் கூந்தலுக்குச் செயற்கை மணமேயன்றி இயற்கை மணம் இல்லை என்றார். புலவர் முதல்வர் பதுமினி என்னும் உத்தமசாதிப் பெண்களுக்கு எப்படி என்றார். புலவர் அப்படித்தான் என்றார். தெய்வப்பெண்களுக்கோ? என்றார். இவர் அதுவும் அங்ஙனமேயாம் என்றார். நீ வழிபடுகின்ற உலகமகாதேவியாகிய உமாதேவியார் கூந்தல் எப்படி என்றார். எல்லாம் அப்படித்தான் என்று வல்லுரையாடினார். பிடிவாதத்தை இவர் விடுமாறு கருதித் தமது நெற்றிக்கண்ணைச் சிறிது அவர் நெரித்துக் காட்டினார். அதற்கும் அஞ்சாமல் "ஐயா! உமது உடம்பெல்லாம் கண்ணாகக் காட்டினும் நும் கவியில் குற்றம் குற்றமே" என்று இவர் கூறி முன்நின்றார். இவரது மீறிய மனத்துணிவை நோக்கி அவர் சிறிது சீறினார். அதனால் கீரர் நிலை குலைந்து வீழ்ந்தார். இறைவன் அருளால் பின்பு எழுந்து வந்தார். ஒருவன் அளவிறந்து ஊக்கின் அது அவன் உயிர்முடிவுக்கே ஏதுவாகும் என்பதை நக்கீரர் அன்று உணர்த்தி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள் போற்றி வழங்கும் நெறி (477)

பரிமேலழகர் உரை :- ஆற்றின் அளவறிந்து ஈக - ஈயும் நெறியானே தமக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப ஈக. அது பொருள் போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக்கொண்டு ஒழுகும் நெறியாம் என்றவாறு.

**கதை**

இளஞ்சென்னி என்பவன் உறையூரிலிருந்து அரசுபுரிந்த ஒரு சோழ மன்னன். அறிவிலும் உருவிலும் இவன் பெருமை பெற்றவன். சிறந்த குணங்கள் பல நிறைந்து நின்றவன். அரசியல் முறைகளை முழுதுந் தெரிந்தவன். எதையும் முன் எண்ணிச் செய்யும் நுண்ணுர்வுடையவன். எவரையும் குறிப்பாலுணர்ந்து அவரது தகுதிக்குத் தக்கவாறே இவன் உதவி செய்து வந்தான். வருங்கால் ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர் ஒருவர் வந்து இவர் பால் பெரும்பொருள் வேண்டினார். பலருக்கும் உதவ வேண்டி -யிருத்தலின் சிறிதே கொடுத்தலமையும் என்று இவன் இயம்பி இயன்றதை அவர்பால் ஈந்தான். மணங்கமழ் உணவை எவர்க்கும் உவந்து உதவி வந்தான். பொருளையும் காத்து அருளையும் போற்றி வந்த இவனது அறிவின் திறத்தை அனைவரும் போற்றினார். “வளவனாயினும் அளவறிந்து அளித்து உண்” என்று ஔவை அருளிய அருமை மொழிக்கு இவன் முன்னுரிமையாய் இருந்தான். அதனால் நீங்காத திருவுடையனாய் இவன் நிலைத்து விளங்கினான்.

வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக வொறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதிநீ பண்டையிற் பெரிதே
அமிழ்தட் டானார்க் கமழ்குய் யடிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கானல் நெடியோய்
எய்தவந் தனம்யாம் ஏத்துகம் பலவே (புறநானூறு)

இ∴து இவனது குணஞ்செயல்களை வியந்து ஊன்பொதி பசுங்குடையார் உவந்து பாடியது. இதனால் இவன் அளவறிந்து ஈந்ததும், அளவறிந்து தேர்ந்ததும், முறைபுரிந்து வாழ்ந்ததும் பிறவும் புலனாம்.

## 8. ஆகா றளவிட் டி தாயினும் கேடில்லை
## போகா றகலாக் கடை (478)

பலரிமேலழகர் உரை :- ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறி அளவு சிறிதாயிற்றாயினும் அதனால் கேடு இல்லையாம்; போகு ஆறு அகலாக் கடை - போகின்ற நெறி அளவு அதனின் பெருகாதாயின் என்றவாறு.

**கதை**

தனபாலன் என்பவன் இயக்கர் குலத்தில் தோன்றிப் பெரும் புகழுடன் விளங்கியிருந்த ஒரு சிறந்த செல்வன். அரசியல் முறைகளில் இவன் மிகவும் தேர்ந்தவன். பதுமினி என்னும் மனைவியோடமர்ந்து இவன் இனிது வாழ்ந்து வந்தான். இவனது நுண்ணிய அறிவையும், எண்ணியதை முடிக்கும் திண்ணிய நலத்தையும் குபேரன் வியந்து இவனைத் தனக்கு அமைச்சனாக்கிக் கொண்டான். அளகை மன்னனுக்குத் தலைமை அமைச்சனாய் இவன் அமர்ந்து சிறந்தான். உயர்ந்த புகழும் நிறைந்த திருவும் பொருந்தி மகிழ்ந்து இவன் இருக்குங்கால் கிருகாசி என்னும் தேவதாசியைக் கண்டான். அவள் கண்டவர் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்ற கட்டழகுடையவள். அவள் மோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளத்தில் இவன் முழுதும் ஆழ்ந்தான். அவளது போகக் கடலில் திளைக்கும் பொருட்டுத் தன் பொருள் முழுவதையும் போக விடுத்தான். தனது அமைச்சுரிமையையும் மறந்து அளகை மன்னன்பால் போவதையும் துறந்து அப்போக மாதையே இவன் பொருந்தியிருந்தான். அதனால் செல்வமும் பதவியும் சேர இழந்தான். வேந்தனும் இவனை வெறுத்தகற்றினான். இவன் வாழ்க்கை முழுவதும் வறிதே இழந்தான். பல இடங்களிலும் அலைந்து திரிந்து நொந்தான். "அளவறிந்து வாழாதான் வாழ்க்கை அடியோடு கெடும்" என்பதை உலகம் அன்று இவன்பால் கண்டது.

## 10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை<br>வளவரை வல்லைக் கெடும் (480)

பரிமேலழகர் உரை :- உள்வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ள அளவு தூக்காமைக்கு ஏதுவாய் ஒப்புரவாண்மையால் வளம் வரை வல்லைக் கெடும் - ஒருவன் செல்வத்தின் எல்லை விரையக் கெடும் என்றவாறு.

**கதை**

விரோசனன் என்பவன் பிரகலாதன் புதல்வன். இவன் சிறந்த வீரன். அருந்தவங்களைச் செய்து அவற்றால் பெரும் பதங்களை அடைந்து இவன் விளங்கயிருந்தான். சுதேவி என்னும் ஓரழகிய மங்கையை மணந்து இவன் இன்பம் நுகர்ந்து வருங்கால் ஒரு புதல்வன் தோன்றினான். அவனுக்குப் பலி என்று பெயரிட்டான். பின்போர் புதல்வி தோன்றினாள். அவளுக்கு வச்சிர சுவாளை என்று பெயர். உலக போகங்ளை உவந்து துய்த்தலையே முத்தியின்பமாக இவன் உணர்ந்திருந்தான். இவனது உணர்வொழுங்கின்படியே அனைவரும் உணர்ந்து ஒழுகினர். உலகாயுதம் என்னும் மதத்திற்கு இவனே முதல்வனாயிருந்தான். அசுரசேனனாகிய இவன் மீது அமரர் அனைவரும் பொறாமை கொண்டிருந்தார். தற்புகழ்ச்சியில் இவன் மிக்க மகிழ்ச்சியுள்ளவனாதலால் அவருட் பலர் முனிவர் போல் இவன்பால் வந்து புகழ்ந்து புகழ்ந்து பொருளைக் கொள்ளை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயினார். பின்பு இந்திரன் முதலிய அமரர் சிலர் அந்தணர் போல் வந்து விந்தை மொழிகள் பலபுகன்று இவன் பொருள் முழுவதையும் தத்தங் கொண்டு சென்றார். அதனால் இவன் அரசிழந்து வறிஞனாகி அனகர் என்னும் முனிவரையடுத்துத் தனியேயிருந்தான். உளவரை தூக்காத ஒப்புரவால் ஒருவன் வளவரை அழியும் என்பதற்கு இவன் அளவுரையாய் நின்றான்.

## 49ம் அதிகாரம். காலமறிதல்

**அஃதாவது வலியான் மிகுதியுடையனாய்ப் பகைமேல் சேறலுற்ற அரசன் அச்செலவிற்கேற்ப காலத்தினை அறிதல்.**

### 1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (481)

பரிமேலழகர் உரை :- கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லும். இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் - அது போல பகைவரது இகலை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கு ஏற்ற காலம் இன்றியமையாதது என்றவாறு.

**கதை**

செழியன் என்பவன் மதுரையிலிருந்து அரசு புரிந்த பாண்டிய மன்னருள் ஒருவன். இவனது காலம் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னராகும். இவன் பெரிய வீரன். அரிய குணங்கள் பல அமையப்பெற்றான். பல நூல்களையும் பயின்று தெளிந்தவன். எதையும் நேருறக்காணும் கூரியவுணர்வினன். மாங்குடி மருதனார் முதலிய புலவர் பலரையும் தம்புடைசூழ வைத்துக்கொண்டு புலமையின்பத்தையே நாளும் இவன் பொருந்தித் துய்த்தான். வீரத்திலும், கொடையிலும், அழகிலும், அறிவிலும் எவரும் நிகரில்லை என இவன் பெரும் புகழ் கொண்டிருந்தான். அதனைக் கண்டு சேரனும் சோழனும் இவன் மேற் பொறாமை கொண்டார். அவர் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் ஐந்து குறுநில மன்னர்கள் அனைவரையும் தமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாகச் சேர்த்துக்கொண்டு இவன் மேல் பகமையைக் பெருக்கினார். தம்மோடு செருச் செய்ய வருமாறு சிறுமொழிகள் பல கூறி அவர் பலமுறை மீறினார். மனவலியும், துணைவலியும் மிகவுடையவனாயினும் காலம் அறிந்தே இவன் காத்திருந்தான். பின்பொருநாள் பொழுதோடமைந்தே இவன் போர்மேல் எழுந்தான்.

இளையன் இவனென உளையைக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம்யாம் என்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையைத் தாக்கி முரசமோடு
ஒருங்ககப் படேஎன் ஆயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பி
புலவர்பா டாது வரைக என் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கி யாஇன்மையான் உறவே

என்று தன் வன்மை தோன்ற வஞ்சினங் கூறிப் போர்மேற்சென்று பகைவரனைவரையும் ஒருசேர வென்றான். இவன் சென்று நின்று வென்ற இடத்துக்கு தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்று இவன் பெரும் பெயர் பெற்றான். கோவலன் காலத்திலிருந்து அவனை "ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்" என்பர். இப்பெருவேந்தரையும் ஐந்து குறுநில மன்னரையும் பல்வகைச் சேனைகளையும் பொழுதறிந்து சென்றதால் இவன் ஒருவனே வென்று உயர்புகழ் கொண்டான். இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் என்பதை உலகம் உணர இவன் உணர்த்தி நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு (482)

பரிமேலழகர் உரை :- பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினை செய்து ஒழுகுதல். திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு - ஒருவர் கண்ணும் நில்லாது நீங்கும் செல்வத்தைத் தன்னின் நீங்காமை பிணிக்கும் கயிறாம் என்றவாறு.

**கதை**

பாண்டவர்க்குப் போரில் வெற்றியுண்டாகுமாறு முதலில் களப்பலியூட்டக் கண்ணன் குறிக்கு முன்னரே துரியோதனன் சகாதேவனிடம் வந்து நாள் நலம் தெரிந்து கொண்டு அரவானிடம் சென்று அவனைப் பலிக்கு அமைய வேண்டினான். "நீ குறித்த நாள்வரையும் என் உடம்பு இருக்குமானால் உன் கருத்தின்படி அதனை முடித்துக்கொள்" என்று அவன் எடுத்து மொழிந்தான். மார்கழி மாதம் அமாவாசை இரவே களப்பலிக்கு ஏற்றநாள் என்று இருதிறத்தாரும் உறுதி செய்திருந்தனர். அரவக் கொடியோன் அதனை எதிர்பார்த்திருந்தான். தான் கருதிய கருமத்தை எப்படியும் அப்பருவத்தில் முன்னுற முடித்துவிட வேண்டுமென்று கண்ணன் கண்ணூன்றி நின்றான். குறித்த அமையின் முதல் நாளாகிய சதுர்த்தசியில் தருப்பணம் செய்யும்படி வேதியர் சிலரைக் கண்ணன் விறகுடன் ஏவினான். அங்ஙனமே அவர் செய்தனர். நாளை செய்ய வேண்டியதை இன்று செய்தது என்னை என்று சூரியனும் சந்திரனும் ஒன்று கூடி ஒருவரை ஒருவர் வினவினர். அவ் இருவரும் ஒன்று கூடும் தினமே அமாவாசையாகுமாதலால் தான் கருதிய வினையைச் செய்தற்கு அதுவே பருவம் என்று தருமரிடம் கூறி முறை வழுவாமல் கண்ணன் அன்றே கருமத்தை முடித்தான். அதன் பயனாகத் திருவும் வெற்றியும் ஐவரும் தீராமல் பெற்றார். பருவம் பொருந்த வினை செய்து ஒழுகுவார் திருவை என்றும் தீராமல் கொள்வர் என்பதைக் கண்ணன் ஒழுகி உணர்த்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அருவினை என்ப உளவோ கருவியான் காலம் அறிந்து செயின் (483)

பரிமேலழகர் உரை :- அருவினை என்ப உளவோ - அரசனால் செய்தற்கு அரிய வினைகள் என்று சொல்லப்படுவன உளவோ கருவியான் காலம் அறிந்து செயின் - அவற்றை முடிப்பதற்கு ஏற்ற கருவிகளுடன் செய்தற்கு ஏற்றகாலம் அறிந்து செய்வராயின் என்றவாறு.

**கதை**

செம்பியன் என்பவன் சோழ மன்னருள் ஒருவன். சிபி மரபில் வந்தோன் என்னும் ஏதுவால் இவனுக்கு இப்பெயர் வந்ததென்பர். விசய சோழன் எனவும் இவனைக் கூறுவர். இவன் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து அரசுபுரிந்தான். பேராண்மை உடையவன். கொடை, வீரம், நியாயம், முதலிய உயர்குணங்கள் எல்லாம் இவன் உடைமையாகக் கொண்டிருந்தான். அகத்திய முனிவரால் பெரிதும் விரும்பப்பட்டவன். இவனது காலம் இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்னராகும். அரசு செய்து வருங்கால் தான் அருந்தவம் செய்து பெற்ற நகரிலிருந்து அசுரர் சிலர் அமரர்கட்குப் பெருந்துயர் செய்துவந்தார். அவர் எண்ணிய இடங்கட்கு அது எழுந்து செல்ல வல்லது. அதன் மதில்கள் அசைந்து கொடுக்கும் இயல்பினை உடையது. அதன் வலிமையால் அனைவரையும் வென்று அவர் அடங்காதிருந்தார். இவன் பால் வந்து தங்குறையிரந்து நின்றார். விரைவில் வந்து பொருது வெல்லலாம் என்று இம் மன்னவன் அவ்வானவர்க்கு வாக்களித்து விடுத்தான். அந்நகரின் இயல்பை முனிவர் சிலருடன் வினவியறிந்தான். அதனை அழித்தற்கு ஏற்ற கருவிகளைக் கைக் கொண்டான். காலத்தோடு பொருந்திக் கதித்தெழுந்தான். முறையறியாமல் அவ்வரசர் திரண்டார். பருவம் அறிந்து நின்ற இவன் உரியமந்திரத்தோடு அம்மதிலை ஓங்கி எறிந்தான். தூங்கி நின்ற அது துகள்பட்டழிந்தது. உடனே அசுரரும் அழிந்தார். வெற்றியுடையவனாய் இவன் விளங்கினான். அமரரனைவரும் இவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து புகழ்ந்தார். அமரராலும் செய்தற்கு அரிய வினையைக் காலங் கருதிச் செய்ததால் இவன் எளிதில் முடித்தான். கருவிகளோடு காலம் அறிந்து செய்வார்க்கு அரிய வினைகளெல்லாம் எளிதில் முடியும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

## 4. ஞாலங் கருதினுங் கைகூடும் காலம் கருதி இடத்தாற் செயின் (484)

பரிமேலழகர் உரை :- ஞாலம் கருதினும் கைகூடும் - ஒருவன் ஞாலம் முழுவதும் தானே ஆளக்கருதினானாயினும் அஃது அவன் கையகத்ததாம். காலம் கருதி இடத்தாற் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலம் அறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வானாயின் என்றவாறு.

**கதை**

சாலிவாகனன் என்பவன் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் நருமதை நதியின் தென்பாலிருந்த பைடணபுரி என்னும் நகரில் சுமித்திரை என்னும் பார்ப்பனிபால் தோன்றினான். அவள் கணவனோடு கலவாமல் கனகதேவன் என்னும் ஒரு நாகவேந்தனைக் கலந்து கருவுற்றாள் என்று இனத்தவர் கறுத்து அவளை அந்நகரை விட்டகற்றினார். அவள் இனம் பிரிந்த கன்று போல் அயலூரையணுகி ஆங்கோர் குயவனில்லில் தங்கி தான் தாங்கியிருந்த கருவைத் தயங்கியே உதிர்த்தாள். அக்குயவனுக்கு இராமவேளான் என்றும், அவன் மனைவிக்கு அன்னபூரணி என்றும் பெயராம். அவ்விருவரும் இவ்விருவரையும் மிக்க ஆதரவோடு போற்றி வந்தனர். குயக்குடியில் வளர்ந்து வந்தாலும் இக்குழந்தையிடம் வியத்தகு குணங்களே விஞ்சியிருந்தன. பருவமெய்தினான். இவன் அறிவும் உருவும் ஆண்மையும் அமைதியும் உடையவனாகி எவரையும் தன்வயப்படுத்தும் தகுதியும் கொண்டவனாய் விளங்கினான். உலகம் முழுவதையும் தான் ஆளவேண்டும் என்னும் எண்ணம் இளமையிலேயே இவன் உள்ளத்தில் முதிர்வு கொண்டிருந்தது. ஒத்த இளைஞர்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடும் போதும் தன்னை அரசனாக மதித்து வைத்து அவர்களை அமைச்சர்களாகவும், படைகளாகவும் குடிகளாகவும் பகுத்துக் கொண்டே விளையாடுவான். அவ்விதம் நிகழும் காலத்தில் சோதிடத்தில் வல்லவரான வேதியரொருவர் அவ்வழியே வந்தார். இவன் அவரை நோக்கி "ஐயரே நமது ஆட்சியின் மாட்சி எப்படியிருக்கிறது" என்றான். அவர் அழகாகவே இருக்கிறது என்றார். இவன் மிக மகிழ்ந்து ஒரு சாலை எடுத்து அவருக்குத் தானமாகக் கொடுத்தான். சால் என்பது நெல்லும் நீரும் இடுதற்கு ஏற்றதாக மண்ணால் செய்த ஒருவகை பெருங்கலம். பின்பு இவன் சாலிவாகனன் என்னும் பெயருடன் விளங்கினான். இதனை விக்கிரமார்க்கன் அறிந்து இவனைத் தன்பால் அழைத்துவரும்படி ஓர் அந்தணனை அனுப்பினான். அவன் வந்து அழைத்தான். "அவனை என்னிடம் வரச் சொல்லு" என்று இவன் அவனிடம் அறைந்தான். இங்கு நிகழ்ந்ததை அவன் போய் அங்கு மொழிந்தான். விக்கிரமார்க்கன் இவன் மேல் மிக்க சினங்கொண்டான். இவனும் அவனது அரசை எய்தி ஆளவேண்டுமென்று ஆர்வங்கொண்டு தான் கற்றிருந்த மந்திர முறையோடு சில படைகளை ஆயத்தம் செய்தான். ஆயினும் அவன் வரத்தால் எய்தியுள்ள காலமுடிவைக் காத்திருந்தான். அவன் முடிவறியாது இவன் மேல் ஒரு நாள் படையோடு வந்தான். தனக்கு ஏற்ற காலத்தையும் இசைந்த இடத்தையும் இவன்முன் அறிந்து வைத்து அவனோடு முனைந்தமர் புரிந்தான். அதில் அவன் படையோடு இவன் சிறந்த வெற்றியுடையனாய் நினைத்தபடியே அரசையடைந்தான். அதுமுதல் நருமதை நதிக்குத் தென்பகுதியிலிருந்து சாலிவாகன சகாப்தம் என இவன் பெயரால் வருட அளவை வழங்கி வருகின்றனர். சாலிவாகன சகாப்தம் 1940 இப்போது நடைபெறுகிறது. மைசூர் அரசு இவன்வழி வந்தென்பர். காலங்கருதி இடத்தோடு பொருந்த ஒருவன் வினை செய்யின் ஞாலங்கருதினும் அவனுக்குக் கைகூடும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. காலம் கருதி இருப்பர் கலங்காது
## ஞாலம் கருது பவர் (485)

பரிமேலழகர் உரை :- கலங்காது ஞாலம் கருதுபவர் - தப்பாது ஞாலமெல்லாம் கொள்ளக் கருதும் அரசர்; காலங்கருதி இருப்பர் - தம்வலி மிகுமாயினும் அது கருதாது அதற்கு ஏற்ற காலத்தையே கருதி அது வருந்துணையும் பகைமேற்செல்லார் என்றவாறு.

**கதை**

சீவகன் தந்தையாகிய சச்சந்தனைக் கொன்று அரசை கட்டியங்காரன் கவர்ந்து கொண்டு களித்துவருங்கால் இளமையிலேயே தந்தை தாயாரை இழந்து பிரிந்த சீவகன் யாதும் அறியானாய்க் கந்துக்கடன் என்னும் வணிகன் இல்லில் வளர்ந்து வந்தான். பின்பு அச்சணந்தி என்னும் பெரியவரொருவர்பால் பலகலைகளையும் பயின்று தெளிந்தான். இவனது மதிநலத்தையும் குணநலங்களையும் அவர் மதித்து மகிழ்ந்து தனது உண்மை நிலையை இவனுக்கு உணர்த்த விழைந்தார். ஒருநாள் இவனை அழைத்துப் போய்த் தனியான இடத்தில் வைத்துக் கொண்டு குழந்தாய் ஒரு கதை சொல்லுகின்றேன் கேட்கின்றாயா? என்றார். ஐயனே அருளுக என்று இவன் அன்புடன் கேட்டான். அவர் தொடங்கினார். ஏமாங்கத நாட்டில் சச்சந்தன் என்னும் ஒரு அரசன் இருந்தான்.அவன் விசையை என்னும் அழகிய மனைவியோடு இனிது வாழ்ந்தான். அவ் அரசனைக் கட்டியங்காரன் என்னும் அமைச்சன் கொன்று அரசைக் கைக்கொண்டான். அரசி பிழைத்துப்போய் தனியான இடத்தில் ஒரு தனயனை ஈன்று மனமுருகி நின்றாள். அப்பிள்ளையை ஒருவணிகன் கொண்டு போய் வளர்த்தான். அவன் இப்பொழுது பல கலைகளையும் பயின்று தெளிந்து பருவமெய்தி அழகிலும் அறிவிலும் ஆண்மையிலும் ஒருவரும் நிகரில்லை. என்னும்படி ஓங்கிநிற்கின்றான் என்று அவர் உரைத்து நின்றார். அவனைக் காண விரும்புகின்றேன் அவன் எங்குள்ளான் என்று இவன் கனிந்து மொழிந்தான். நீதான் என்று அவர் இவனை நேரே காட்டினார். தன் உண்மையை உணர்ந்து இவன் உள்ளங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கினான். தன் குலப்பகைவனைக் கொன்று இப்பொழுதே கோல் கைக்கொள்வேன் என்று கொதித்தெழுந்தான். இன்னும் ஓராண்டு வரையும் நின்னை வெளிப்படுத்தாதே என்று அவர் இயம்பி அகன்றார். படையும் துணையும் பின்பு இவன் அடையப் பெற்றான். வலிமுதலியன மிகுந்திருந்தும் காலம் கருதியே இவன் காத்திருந்தான். கலங்காமல் உலகத்தைக் கைக்கொள்ள விழைந்தான். காலம் வந்தவுடனே கருதியதைச் செய்தான். அதனால் அரசினை அடைந்தான். கலங்காது ஞாலம் கருதுபவர் காலம் கருதி இருப்பர் என்பதை உலகம் சீவகன் பால் தெரிந்து கொண்டது.

## 6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர் தாக்கற்குப் பேருந் தகைத்து (486)

பரிமேலழகர் உரை :- ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதியுடைய அரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு; பெருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து - பொருகின்ற தகர் தன்பகைகெடப் பாய்தற் பொருட்டும் பின்னே கால்வாங்கும் தன்மைத்து என்றவாறு.

**கதை**

நெடுமான் என்பவன் மலைநாட்டிலே தகடூர் என்னும் ஊரிலிருந்த குறுநில மன்னன். அமிழ்துவிளை தீங்கனியை ஔவைக்கு அருளிய ஐயனும் இவனே. இவன் நெடுமான் எனவும், அஞ்சி எனவும், அதிகன் எனவும், அதிகமான் எனவும், அதியமான் எனவும், நெடுமான்அஞ்சி எனவும், அழைக்கப் பெற்றான். வண்மையும், வலிமையும், ஒண்மையும் உடையனாய் உவந்து வாழ்ந்ததால் இவன் புகழ் மணம் உலகெங்கும் பரவியது. அதனால் மறுபுல மன்னர் சிலர் இவன்பால் உறுபகை கொண்டார். ஒருவரை ஒருவர் தழுவியிறுதியில் அவர் எழுவராயினர். வளவன், வழுதி, சேரன், திதியன், எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் அவ் எழுவரும் ஒரு நாள் இவன் மேல் உடன்றெழுந்து வந்தார். உற்றதை உணர்ந்து இவன் உள்ளங் கொதித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமிகுந்திருந்தும் உடனே எதிர்த்துச் செல்லாமல் காலம் நோக்கி ஒடுங்கியிருந்தான். பகை எச்சம் தீ எச்சம் போலத்தெறும். ஆதலால் அதனைத் தேயச் செய்ய வேண்டும் என்று தெளிந்தான். அமையம் நோக்க எழுந்து அனைவரையும் அடங்கவென்று திருக்கோவலூரையும் சென்று கைக்கொண்டான். ஒடுங்கிவிட்டான் என்று உவந்திருந்த அவர் இவன் உடன்று பொருதபின் உடைந்து நொந்தார். இவன் வெற்றியோடு தன் வியநகரடைந்து தனது அருமை மனைவி ஓர் இனிய புதல்வனைக் கருவுதிர்த்திருந்ததை அறிந்து போர்க்கோலத்தோடு அங்கு புகுந்து நோக்கி வெற்றிக் களிப்போடு விளங்கியிருந்தான். ஊக்கமுடையான் ஒடுக்கம் தகரின் பெயர்ச்சி போல் அவன் வெற்றிக்கே ஏதுவாகும் என்பதை இவன் விளக்கி நின்றான்.

## 7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
## துள்வேர்ப்பா ஒள்ளி யவர். (487)

பரிமேலழகர் உரை :- ஒள்ளியவர் - அறிவுடைய அரசர் ஆங்கே பொள்ளெனப் புறம் வேரார் - பகைவர் மிகை செய்த பொழுதே விரைவாக அவர் அறியப் புறத்து வெகுள்வர்; காலம் பார்த்து உள் வேர்ப்பார் - வெல்லுவதற்கு ஏற்ற காலத்தினை அறிந்து அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர் என்றவாறு.

**கதை**

தருமரை வலிந்தழைத்து அரசைக்கவர்ந்து துரியோதனன் நலிந்த பொழுதும், துணைவியைப் பற்றித் துகிலுரியத் துணிந்த பொழுதும், தருமர் பொள்ளென வெகுளாது பொறுத்திருந்தார். வெகுண்ட துணைவரையும் வெகுளாதடக்கினார். தாம் உள்வேர்த்திருந்தும் தம்பியரை அடங்கியிருக்க வேண்டுமென்று இவர் தகவுற மொழிந்தார். பின்பு உருவங்கரந்து விராட நகரத்தில் ஒதுங்கியிருந்த பொழுது துரோபதையைக் காதலால் கீசகன் கைப்பற்ற வந்தான். அவள் ஓடி வந்து அரசபை முன் ஒல்கி விழுந்தாள். அவனும் தொடர்ந்து வந்தான். அதனைத் தருமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார். உள்ளே வெகுளி கொண்டார். கொண்டும் அவ்வமையம் செய்யலாகாதென்று கால இயல்பை நோக்கி அடங்கியிருந்தார். வீமன் சினந்து அவனை அழிக்கக் கருதி அயல்நின்ற ஒரு மரத்தை அசைத்தான். இப்பொழுது வெளிப்படலாகாதென்று தருமர் குறிப்பால் அவனுக்கு உணர்த்தினார். அவனும்உணர்ந்து ஒதுங்கினான். பின்பு இவர் காலம் பார்த்துத் தம் பகைவரனைவரையும் வகையுற வென்றார்.

## 8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை காணின் கிழக்காம் தலை (488)

பரிமேலழகர் உரை :- செறுநரைக் காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவர்க்கு இறுதிக் காலம் வருந் துணையும் அவரைக் கண்டால் பணிக; இறுவரை காணின் தலை கிழக்காம் - பணியவே அக்காலம் வந்து இறும்வழி அவர் தகைவின்றி இறுவர் என்றவாறு.

**கதை**

நிவாதகவசர் என்பவர் பிரகலாதன் மரபில் வந்தவர். இவர்கள் மூன்று கோடி அசுரவீரர்கள் எப்பொழுதும் நீங்காத கவசத்தையுடையவர். அதனால் இவர்கட்கு நிவாதகவசர் என்று பெயர். இயமனை நோக்கி அருந்தவம் புரிந்து பெருந்திரு அடைந்தவர். மேல் கடலின் அருகில் இருந்த தோயமாபுரம் என்னும் நகரில் இருந்தவர். கொடிய செயலினர் நெடிய ஆயுளை உடையவர். இராவணன் திக்கு விசயம் செய்து வந்த காலத்தில் விருந்தினனாகி ஈராறு திங்கள் காறும் இவர்கள் நகரில் தங்கியிருந்தனன் என்பர். இவர்கள் இந்திரனிடம் பகை கொண்டு அமரரனைவர்க்கும் துயர்விளைவித்து வந்தார். இவர்களது ஆற்றலுக்கு அஞ்சி இந்திரன் அடங்கி நின்றான். அவன் அடங்கியிருந்ததை நினைந்து யாதும் செய்யாது அவனை இவர்கள் அவமதித்தார்கள். அவனும் காலவலியை நோக்கி இவர்களைக் கண்டால் மிகவும் பணிவுடையனாய்த் துலங்கினான். திரேதயுகத்தின் இறுதியில் இவர்கள் முடிவர் என்று குறிபார்த்திருந்தான். அருச்சுனன் பரமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கித் தவம்புரிந்து படைநலம் பெற்றதை உணர்ந்து அவனைத் தனது நகரில் அழைத்து வைத்துப் பெருவிருந்து செய்தான். ஓர் ஆசனத்தில் உடனிருத்திக் கொண்டு தன் உறுகுறையை உணர்த்தினான். இவ்வகையாக அருச்சுனனிடம் இந்திரன் இசைத்துத் தன்பகைவரை ஈடழிக்க வேண்டினான். சிவனருள் பெற்ற அவன் சினந்தெழுந்து தேர்மேற் சென்று தெவ்வர் ஊரைவளைத்தான். தமக்கு எவரும் நிகரில்லை என்று செருக்குற்றிருந்த அவ்வசுரர் திகைத்தெழுந்து திரண்டார். நிலை மாறியது பொருது தலைதடுமாறி அழிந்தார். காலத்தைக் காணும் வரையும் தன்பகைமையைக் காட்டாமலிருந்து இந்திரன் அதனைக் கண்டவுடனே தன்பகை வரை அழியக் கண்டான். செறுநரைக் காணின் சுமக்க இறுவரை காணின் அவர்தலை கிழக்காம் என்பதற்கு இவர் இலக்காய் நின்றார்.

## 9. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே செயதற் கரிய செயல் (489)

பரிமேலழகர் உரை :- எய்தற்கு அரியது இயைந்தக்கால் - பகையை வெல்லக் கருதும் அரசர் தம்பால் எய்தற்கரிய காலம் வந்து கூடியக்கால்; அந்நிலையே செய்தற்கு அரிய செயல் - அது கழிவதற்கு முன்பே அது கூடாவழித் தம்பாற் செய்தற்கு அரிய வினைகளைச் செய்க என்றவாறு.

### கதை

வாயு என்பவன் திசைகாப்பாளருள் ஒருவன். இவன் முதலில் காசிபமுனிவருக்குப் புதல்வனாய் அநிலன் என்னும் பெயருடன் விளங்கியிருந்தான். பின்பு அரிய தவங்களைச் செய்தான். அதன் பயனாக வாயுபதத்தை அடைந்தான். இவன் அஞ்சனை என்பவளை மணந்து தன்மண்டலத்தில் இருந்து இன்பம் நுகர்ந்து எங்கும் இயங்கி இசைந்து நிற்பான். இவன் உவந்து வீற்றிருக்கும் திருநகருக்குக் கந்தவதி என்று பெயர். வாதம், கால், வளி, மருந்து, வாடை, பவனம், கூதிர், மாருதன், மால், கோதை, அரி, சலனன், கந்தவாகனன், முதலிய பல ஏதுப் பெயர்களை உடையவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிசைக்குத் தலைவன், வேகத்திலும் வன்மையிலும் இவன் மிகச் சிறந்தவன். நாரதன் மூட்டிய கலகத்தால் ஆதிசேடனுக்கும் இவனுக்கும் வன்மை குறித்து வாதம் நிகழ்ந்து. அதனால் பகைமை மூண்டது. ஒரு நாள் இருவரும் அமர் செய்ய எழுந்தார். அமர்புரிதலை ஒழித்து இவரது வலியை அளந்து அறியுமாறு அவர் அளந்து மொழிந்தார். இருவரும் அமர்ந்து மேருவை அடைந்தார். தனது தலைகளால் அம்மேருவின் முடிகளைச் சேடன் அமிழ்த்திக் கொள்ளவும், அவற்றை வாயு பெயர்த்துத் தள்ளவும் வேண்டுமென்று இருவரும் குறித்துக் கொண்டார். அதன்பின் முனைந்து முயன்றார். நெடுநாளாகியும் வாயுவால் முடியவில்லை. செய்தற்கு அரியது என்று தன்சிந்தை தளர்ந்தான். சேடன் உள்ளே செருக்கி மகிழ்ந்தான். அவ்வமையம் வானில் ஈது என்ன! புதுமை என்று வானவரோடு நாரதர் ஒரு வஞ்சஞ் செய்தார். கவித்த முடியைச் சேடன் சிறிது மேல் எடுத்து நோக்கினான். அது பொழுது வாயு விரைந்து பாய்ந்து மூன்று சிகரங்களையும் முறித்து வீசினான். சேடன் கலங்கி நாணினான். வாயுவே வென்றான் என்று அனைவரும் புகழ்ந்தார். தன்வலி முதலியவற்றால் செய்து கொள்ள முடியாத காரியத்தையும் காலம் அறிந்து விரைந்து செய்ததால் வாயு முடித்துச் சிறந்தான். எய்தற்கு அரியது எய்தினால் அந்நிலையே செய்வதற்கு அரியதைச் செய்து கொள்வாரே சிறந்தவர்கள் என்பதை அனைவரும் இவன்பால் தெளிந்து மகிழ்ந்தார்.

## 10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து (490)

பரிமேலழகர் உரை :- கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க - வினைமேல் செல்லாதிருக்குங் காலத்துக் கொக்கு இருக்குமாறு போல் இருக்க; மற்றுச் சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க - மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்துமுடிக்குமாறு போலத் தப்பாமல் செய்து முடிக்க என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

வீமன் விராட நகரத்திலிருந்த பொழுது கீசகன் பல்வகை இன்னல்களை இழைத்தான். ஆற்றல் மிகுந்திருந்தும் யாதும் செய்யாமல் காலம் நோக்கி இவன் அடங்கியிருந்தான். இவனை மடையன் என்றே கருதி அவன் மதியாது திரிந்தான். சொல்லாலும் செயலாலும் அவன் புரிந்துவந்த பொல்லாதவற்றை எல்லாம் இவன் பொறுத்து வந்தான். எவ்விதத்திலும் அவனைக் காலனுக்கு இரையாக்கி விட வேண்டும் என்று இவன் பின் கருதித் துணிந்தான். துரோபதை வாயிலாகத் தனியான இடத்துக்கு அவனை வருமாறு செய்தான். வருவதை அறியாமல் அவனும் வந்தான். தனக்கு இசைவாக அவன் அமையும் வரையும் இவன் அசையாது இருந்தான். அவன் வேறுவித நசையோடு வந்தவனாதலால்

பைங்குலைக் குரும்பையைப் பழித்த கொங்கையாய்
மங்குலைப் புழுகளை வைத்த கூந்தலாய்
கங்குலிற் கால்வழி காட்ட வந்ததின்
றிங்குலப் புறுமென தாவி வீயவோ.

கிஞ்சுக மலர்ந்தநின் கிள்ளை வாய்மையால்
அஞ்சலென் றோருரை அளித்தல் காண்கிலேன்
நஞ்சன விழிக்கடை நயந்த பார்வை கொண்
டெஞ்சுமென் உயிரினை எடுப்ப தென்றுநீ

என்று அடுத்து வந்தான். அமையும் வரையும் அடங்கியிருந்த இவன் உடனே விரைந்தடர்ந்து தன் வேலையை முடித்தான். கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க; சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க என்பதை இவன் குத்தி உணர்த்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50ம் அதிகாரம். இடனறிதல்

**அஃதாவது வலியும் காலமும் அறிந்து பகைமேற் செல்வான் தான் செல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல்.**

## 1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும் இடங்கண்ட பின்னல் லது (491)

பரிமேலழகர் உரை :- முற்றும் இடங்கண்ட பின் அல்லது - பகைவரை முற்றுதற்கு ஆவதோர் இடம் பெற்றபின் அல்லது; எவ்வினையையும் தொடங்கற்க - அவர்மாட்டு யாதொரு வினையையும் தொடங்கா தொழிக; எள்ளற்க - அவரைச் சிறியரென்று இகழாது ஒழிக என்றவாறு.

**கதை**

காரி என்பவன் திருக்கோவலூரிலிருந்து அரசு புரிந்த ஒரு குறுநில மன்னன். பெண்ணையாற்றை அடுத்திருந்த பெரிய நிலப்பகுதி இவனுக்கு உரிமையாய் இருந்தது. அதற்கு மலையநாடு என்று பெயர். அதனால் மலையமான், திருமுடிக்காரி என்று இவன் பேர் பெற்று விளங்கினான். கடைவள்ளல்கள் எழுவருள் ஒருவன். வறியவர் வந்து இவன் திருமுகத்தை ஒருமுறை கண்டால் அதன் பின்பு அவர் வறுமையைக் காணார். எவ்வமையம் எவர் வந்து இவன்பால் எதை வேண்டினும் அதனை அவர் தவறாமல் அடைவர். இராகுகாலத்தில் தீய ஓசையில் எழுந்தும், காக்கை இடம்பாய்தல் முதலிய சகுனத்தடைகள் வாய்ந்தும், வழிக்கொண்டு வந்த ஒருவன் இவன் சமயமறியாமல் முன்னின்று தன்குறையினை நீக்குமாறு கூறினான். அவனது அறியாமைக்கு வருந்தி இரங்கி அரிய பொருள்கள் பல உதவி அவனை அன்புடன் உய்த்தான். இதனால் இவனது வண்மையும், உயர்குண உண்மையும் பிறவும் புலனாம். இவ்வள்ளல் எடுத்த வினையைப் பழுதுபடாமல் முடித்துவிடுவான். தன்னோடு பகைத்தவரனைவரையும் இடங்கண்டுசென்றே இவன் அடக்கி வென்றான். இடங்காணும் வரையும் ஒன்றையும் தொடங்கான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரையும் இகழான். இவன்பால் தோல்வியுற்றவரும் இவன் சால்பினை வியந்து மகிழ்வர். போரில் வெற்றி பெற வேண்டுமாயின் காரி வரவேண்டுமென்று வீரர் புகழ்வார். பெருநற்கிள்ளி என்ற சோழனொருவன் சேரனோடு பலமுறையும் பொருது தோற்று இறுதியில் இவன்பால் வந்து குறையிரந்து நின்றான். இயல்பாகவே இவன்பாலும் அவன் பகை கொண்டிருந்தான். ஆயினும் அது பொழுது அவனை வெல்ல முடியாது என்று இவன் அடங்கியிருந்தான். அவனை வெல்லுதற்கு ஏற்ற இடத்தை இவன் நன்கு அறிந்து சென்று அவனை வென்று விளங்கினான். வெல்லப்பட்ட அவனும் இவனது வினைமாட்சியையும் மனமாட்சியையும் வியந்து போற்றிப் பின்பு நயந்திருந்தான். இடங்காணினல்லது அறிவுடையார் எவ்வினையும் தொடங்கார் என்பதை இவன் தொடக்கி உணர்த்தினான்.

## 2. முரண்சேர்ந்த மொய்ப்பி னவர்க்கும் அரன்சேர்ந்தாம் ஆக்கம் பலவும் தரும் (492)

பரிமேலழகர் உரை :- முரண் சேர்ந்த மொய்ப்பினவர்க்கும் - மாறுபாட்டோடு கூடிய வலியினை உடையார்க்கும்; அரண்சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் - அரணைச் சேர்ந்தாகின்ற ஆக்கம் பல பயன்களையும் கொடுக்கும் என்றவாறு.

### கதை

மது என்பவன் ஓர் அசுர வீரன். அருந்தவங்களைச் செய்து பெருநலங்களை அடைந்தவன். உமாபதி அருளிய முத்தலைச் சூலம் ஒன்றை எப்பொழுதும் கைத்தலத்தில் உடையவன். ஆண்மையோடு அமைதியும் அமையப் பெற்றவன்.

"மன்னவர் மன்னா! முன்னாள் மதுவெனுந்தான வேந்தன் தன்னெதிரிலாத வீரன். தருமன் தயவு மிக்கோன். பிஞ்ஞகன் அருளால் பெற்ற பெருவலித் திரிசூலத்தன். அன்னது கையதாக அழிவிலா ஆயுள்பெற்றான்." என்று இராமன் திருமுன் முனிவர்களும் இவனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்து கூறினார். தன் தகுதிக்கேற்ப யமுனை நதிக்கரையில் ஓர் அழகிய நகரை அமைத்தான். இவன் பெயரால் அது மதுபுரம் என்று அழைக்கப்பட்டது. ஆற்றலுடையோம் என்று அகங்கரிப்போரிடத்தேதான் தன் ஆற்றலை இவன் காட்டினான். செருக்கி நின்ற அரக்கர் பலரையும் இவன் நெருக்கி வென்றான். சென்ற இடந்தோறும் அரண் சேர்ந்து நின்றே இவன் பகைவரை அடக்கி வென்றான். பேரழகமைந்தவளும் இராவணனுக்குச் சிறிய தாயுமாகிய கும்பிருசி என்பவளை இவன் குறி கொண்டிருந்தான். அவளும் இவன்பால் கண்சாய்த்திருந்தாள். ஒருநாள் கறங்குகால் புகாத இலங்கையிலும் புகுந்து அவளைக் கவர்ந்து கொண்டுவந்து தன் கடிநகரில் வைத்துக் கலந்து மகிழ்ந்தான். இதனைப் பின்பு விபூசணன் அறிந்து இராவணனிடம் கூறினான். அவன் கொதித்தான்.

பூனை செவியை எலிமோந்து புலியைப் புல்வாய்
தொடர்ந்ததெனத்
தானைக் கடலைக் கலக்கிளன தாயார்க்கிளையாள்
தனைக்கொண்டென்
மானக்குலத்தை வரம்பழித்தான் மதுவே கெட்டும்
வாழ்ந்தோம் நம்
சேனைக்கடலை மதுபுரத்திற் செல்க என்றான்
சின மிக்கான்

பின்பு படைகள் புடை சூழ எழுந்து இராவணன் மதுபுரத்தை அடைந்தான். அரன்வலியின் திண்மையை அறிந்து திகைத்தான். இதுவரையும் எவராலும் நலிவின்றி இருந்த மது இவனது வரைவையறிந்தும் துயில் கொண்டவன்போல் நகை கொண்டிருந்தான். கும்பிருசி வெளியே வந்து இராவணனையடைந்து தனது இன்ப நாயகன்மேல் அன்பு கொள்ளும்படி பணிந்து வேண்டினாள். அவனும் மதுவினது மனவலி முதலியவற்றை வியந்து அமைந்த உறவோடு உவந்து புகுந்தான். பகையோடு வந்த இராவணன் மதுவோடு பின் உறவாகி நின்றான். இடவலியாலும் உடல்வலியாலும் எவரினும் இவன் உயர்ந்து விளங்கினான். இவனது அரண்வலியை அஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரும் இவனோடு தமராகி நின்றார். என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

**முரண்சேர்ந்த மொய்ப்பி னவர்க்கும் அரன்சேர்ந்தாம்**
**ஆக்கம் பலவும் தரும்**

என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

# 3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து போற்றார்கட் போற்றிச் செயின் (493)

பரிமேலழகர் உரை :- ஆற்றாரும் ஆற்றி அடுப - வலியரல்லாதாரும் வலியராய் வெல்வர்; இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கு ஏற்ற இடத்தினை அறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வராயின் என்றவாறு.

**கதை**

சிகன்டி என்பவன் பாஞ்சாலதேசத்து அரசனாகிய பாகசேனனிடம் தோன்றினான். அலிவடிவினன் தன் அலிவடிவத்தைத் தூலகர்ணன் என்னும் கந்தர்வனால் மாற்றி ஆண்வடிவு கொண்டவன். இவன் முற்பிறப்பில் காசிதேசத்து மன்னனுக்குப் புதல்வியாயிருந்து வீடுமர் மீது செற்றங் கொண்டு இப்பிறப்பை அடைந்தான். வில் வித்தையில் இவன் மிகத் தேர்ச்சி பெற்றவன். ஆயினும் உள்ளத்தில் ஊக்கம் இல்லாதவன். பாண்டவர்க்கு இவன் உதவியாய் நின்று வேண்டுவன செய்தான். எவ்வகையிலாவது வீடுமரை வென்றுவிட வேண்டுமென்று இவன் கன்றியிருந்தான். அதற்கு வேண்டிய காலமும் இடமும் கருதிப் பல சூழ்ச்சிகளைச் செய்தான். சேனைத்தலைவராய் நின்ற வீடுமர் பத்தாம் நாட்போரில் படைகள் புடைசூழ எழுந்தார்.

சுற்றாத வில்லினன் தொடைமிடைந்து தூணியன்
கொற்றவாகை வாளினன் கூடாவீர வேலினன்
மற்றுமாயு தங்களோடு மன்னரோடும் வார்முர
செற்றுமா ரவத்தினோடும் அடுகளத்தி னெய்தினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடி முனைமுகத்தில் எய்தினான். இருதிறச் -சேனைகட்கும் பெரும்போர் மூண்டது. அரிய வீரராகிய அவர்படைகளை முறியவென்று முன்னேறி வந்தார். விசயன் போய் எதிர்நின்று தன் வில் வின்மையைக் காட்டினான். அவ்வமையம் சிகண்டி இடனறிந்து புகுந்தான். தனக்கு யாதும் நலிவில்லாதபடி அருச்சுனனுக்குப் பின்னே அமைந்து நின்று கொண்டு பல கணைகளை இடையே தொடுத்தான். முன் இசைந்திருந்த இசைவினாலும் அரணமைத்து நின்று பின் இவன் வினை செய்ததாலும் அவர் இடருற்று நொந்தார். போற்றுதலுடைய அவரை ஓராற்றலுமில்லாத இவன் இடவலியால் உடன்று வென்றான். இடனறிந்து செயின் ஆற்றாரும் ஆற்ற அடுவர் என்பதை இவன் ஆற்றி உணர்த்தினான்.

## 4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து துன்னியார் துன்னிச் செயின் (494)

பரிமேலழகர் உரை :- இடன் அறிந்து துன்னியார் - தாம் வினை செய்தற்கு ஏற்ற இடத்தினை அறிந்து சென்ற அரசர்; துன்னிச் செயின் - அரணைப் பொருந்தி நின்று அதனைச் செய்வாராயின்; எண்ணியார் எண்ணம் இழப்பர் - அவனை வெல்லவதாக எண்ணி இருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை இழப்பர் என்றவாறு.

**கதை**

இலவணன் என்பவன் அசுரவீரனாகிய மதுவின் புதல்வன். சிறந்த வரபலங்களை உடையவன். விற்போரிலும் மற்போரிலும் இவன் மிகவும் வல்லவன். மன்னர் பலரை வென்று இன்னிசை கொண்டவன். பெருவீரனாகிய மாந்தாதாவும் இவனோடு அமர் செய்து மாண்டான். அமர் செய்வதில் எவரும் தனக்கு நிகரல்லை என்று இவன் எண்ணியிருந்தான். இவனது கொடுந்தன்மையை இராமர் அறிந்து தன் தம்பியாகிய சத்துருக்கனை இவன்மேல் ஏவினார். இவ் இளையவன் சில படையோடெழுந்து முனிவர் சிலருடன் இவனது நிலைமையை உணர்ந்து முடிவில் வந்து மதுபுரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்தான். இலவணன் அறிந்து வெளியே வந்தான். படைகளைப் புடைசூழவைத்து இடனறிந்து மிடலோடு நிற்கும் இவ் இளங்குமரனைக் கண்டான். இகழ்ந்து சிரித்து 'நீ யார்' என வினவினான். வரன்முறையை அவன் உளரோடுரைத்தான்.

என்னுடைய தமையனாம் இராவணனை இருங்கிளையோ
டென்று கொன்ற
உன்னுடைய தமையனாம் இராகவனெனன் றிருந்தவனை
உணர்ந்திலாதேன்
என்னுடைப் பழம் பகைவன் தம்பிநீ என்னிடைவந்
தகப்பட்டாயின்
றுன்னுடைய உயிர்கொள்வன் என உரைத்துப்பின்னும்
ஈதுரைக்க லுற்றான்.

தெவ்வழிக்கும் சிலைதரித்த திறனுடைய மாந்தாதா
சேனையோடென்
கைவழிவந் தகப்பட்டுக் கனலாகி ஒழிந்தமை நீ
கழறக் கேட்டும்
உய்வழியொன் றிலையின்றுன் உயர்சேனை யதனோடுமென்
உழைவந் துற்றாய்
அவ்வழியிற் பிறந்தோருக் கறியாமல் வரவந்த
அழகே தென்றான்.

இங்ஙனம் செருக்கோடு கூறிய இவனுடைய சிறுமொழிகளைச் சத்துருக்கன் கேட்டான். "நீ சொல்லிய எவற்றிற்கும் என் வில்வாயிலாகவே பதில்வரும்" என்று தன் வில்லை வளைத்தான். இவனும் வெருண்டு அமர் புரிந்தான். முன்பின் இவன் எண்ணியொன்றுஞ் செய்யாவகை தன்னைக் காத்துப் படையோடு துன்னி நின்று சத்துருக்கன் துணிந்து செய்தான். பகைவரை எளிதில் வென்றுவிட லாம் என்று இவன் எண்ணியிருந்தும் அவன் துன்னிச் செய்தலால் இவன் தொலைந்து மாய்ந்தான். இடன் அறிந்து துன்னியார் துன்னிச் செயின், எண்ணியார் எண்ணம் இழப்பர் என்பதை இவன் இகழ்ந்து காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின் நீங்கின் அதனைப் பிற (495)

பரிமேலழகர் உரை :- முதலை நெடும்புனலுள் வெல்லும் - முதலை ஆழமுடைய நீரின்கண் ஆயின் பிறவற்றையெல்லாம் தான் வென்று நிற்கும்; புனலின் நீங்கின் அதனைப் பிற அடும் - அப்புனலின் நீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லும் என்றவாறு.

**கதை**

கசேந்திரன் என்பவன் தெய்வத்தன்மை வாய்ந்த ஒரு மதயானை. முதலில் இது இந்திரத்துய்மன் என்னும் அரசனாக இருந்தது. குறுமுனிவர் சாபத்தால் பின்பு பெரிய யானையாக மாறியது. சொல்லாடல் ஒன்று தவிர மற்றெல்லா வளர்ச்சியும் இஃது எய்தியிருந்தது. அமரர்கட்கு இந்திரன் போல யானைகட்கு இது தலைமை பூண்டிருந்தது. அதனால் இது கசேந்திரன் எனப்பெற்றது. வலியாலும் உணர்வாலும் தன் இனத்திற்கெல்லாம் முதன்மையாகி இது விளங்கி வருங்கால் ஒருநாள் ஆழ்ந்தகன்ற நீர்நிலை ஒன்றிற் புகுந்து நீர்பருகி நின்றது. சாபத்தால் அங்கு வந்து கிடந்த முதலை ஒன்று இதன் காலைப் பற்றிக் கொண்டது. இது வெகுண்டு வெளியேற முயன்றது. அஃது இறுகக் கவ்விக்கொண்டு உள்ளே நகர்ந்தது. நெடிது முயன்றும் அதனை வெல்ல இதனால் முடியவில்லை. மெலிந்து தளர்ந்து முடிவில் திருமாலை நினைந்து பெருவீரிட்டது. அவ்வொலிக் குறிப்பு ஆதிமூலமே யென்று அமைந்தெழுந்தது. அதனால் அவர் விரைந்தோடி வந்து அதனை அழித்து இதனை ஆதரித்தருளினார். பெருவலியுடையதாயிருந்தும் தனக்கு நிலையில்லாத இடத்தில் புகுந்ததால் இது நிலை குலைந்து நொந்தது என்று அனைவரும் உணர்ந்தார். நெடும் புனலுள் எதையும் முதலை வெல்லும் என்பதற்கு இஃது இலக்காய் நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும் நாவாயும் ஓடா நிலத்து (496)

பரிமேலழகர் உரை :- கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்கண் ஓடும் கால் வலிய நெடிய தேர்கள். கடலின்கண் ஓடமாட்டா கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக்கடலின்கண் ஓடும் நாவாய்கள்தாமும் நிலத்தின்கண் ஓடமாட்டா என்றவாறு.

**கதை**

இராவணன் எழுந்தருளியிருக்கின்ற அரசமண்டபத்துள் ஒருநாள் நாரதர் வந்தார். அவரை உவந்து உபசரியாமல் அங்கோர் ஆசனத்தை இடக்கரத்தால் சுட்டிக்காட்டி "இருக்க" என்று செருக்கோடு பணித்தான். அருந்தவர் இருந்தார். இவனது அகந்தையை அகழ்ந்தெடுக்க விழைந்தார். அரக்கர் பதியே நும் இசை திசையெங்கும் பரந்து நின்றும், ஒரு குரங்கினிடத்து மாத்திரம் என்று தொடங்கிவிட்டு உள்ளம் சொல்ல அஞ்சுகின்றதே! என்று மெல்ல இழுத்து நின்றார். இறுமாந்து இருந்த அவன் என்ன? அது என்று ஏமாந்து கேட்டான். தன் வால் செல்லாத இடமே உன் கோல் செல்லும் என்று வாலி உம்மை வசை சொல்லுகின்றான் என அவர் விசை முறுக்கிவிட்டார். மூவுலகங்களையும் அடங்கவென்ற எனக்கு ஒரு குரங்கை வெல்வது அரிதோ என்று வெகுண்டெழுந்து தனியாகவே கிட்கிந்தை அடைந்தான். அவ்வமையம் வாலி கீழ்க்கடலை அடைந்து இறைவனைநினைத்துப் பூசை செய்திருந்தான். முனிவர் கூறியபடியே அங்குச் சென்று பின்முகமாக ஒதுங்கிநின்று அவனது வாலின் நுனியைத் தன் வலக்கரமொன்றால் பிடித்தான்.அது பாசம் போல் இயல்பாகவே அதனைச் சுற்றிக்கொண்டது. மற்றொருகரத்தால் அதனை வலிந்து தள்ளினான். அதனையும் அவ்வாறே சுற்றி நின்றது. அவ்வகையே மற்றக்கரங்களும் கால்களும் சுற்றப்பட்டன. அப்படியிருந்த உனக்கு இப்படியும் வந்ததே! என்று ஆவது செய்வார். முனிவர் அகன்று போயினார். வாலி வான்வழி எழுந்து போய் நாற்றிசைகளிலும் நின்று வழக்கம் போலவே பூசையை முடித்துத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளநகரையடைந்தான். அக்குரங்கு வேந்தன்பால் இவ்வரக்க வேந்தன் அன்று பட்டபாட்டை யார் சொல்லவல்லார். அடைந்தவன் வாலில் கிடந்தவனைக் கண்டான். உற்றதை வினவி அவனால் உண்மையை உணர்ந்தான்.

மிள்ளொளிர் முடியாய் வென்றவர் தோற்பர்
தோற்றவர் வெல்வர்வெஞ் செருவில்
என்னொடும் பொருவான் இச்சையுண்டாயின்
இராவணா பொருதிஈண் டென்னக்
கன்னெடுந் தோளாய் கலங்கினேன் வாலால்
கட்டுண்டு பட்டது கிடக்க
இன்னமும் பொரவோ இழிச் செருவமையும்
இன்றுநின் தோழன் நான் என்றான்.

இங்ஙனம் தோழமை கொண்டு இராவணன் தன் தொன்னகரடைந்தான். வாசவன் முதலிய அனைவரும் ஒதுங்க இருநான்கு திசைகளையும் ஒருசேர வென்ற பெருவீரனாயிருந்தும் இடனறியாது புகுந்ததால் யாதும் பலியாமல் இழிவடைந்து மீண்டான் என்றபடி இராவணன் உணர்த்தி நின்றான்.

## 7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை எண்ணி இடத்தாற் செயின் (497)

பரிமேலழகர் உரை :- எஞ்சாமை எண்ணி இடத்தாற் செயின் - பகையிடத்து வினை செய்யும் திறங்களை எல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வராயின்; அஞ்சாமை அல்லால் துணைவேண்டா - அச்செயற்குத் தன் திண்மை அல்லது பிறிதொரு துணைவேண்டுவது இல்லை என்றவாறு.

### கதை

அசன் என்பவன் சூரியகுல திலகனாகிய இரகுவின் புதல்வன். தசரத மன்னனுடைய இன்னுயிர்த் தந்தை. செம்மையும், சீலமும், திண்மையும் வாய்ந்தவன். உயிர்களினுடைய பலவகை இயல்புகளையும் முழுதும் உணர்ந்தவன். இவன் திருவயோத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சிறந்து வருங்கால் விதர்ப்ப தேசத்து வேந்தன் மகளாகிய இந்துமதியின் சுயம்வரம் நிகழ்ந்தது. அவர் சசிபோன்ற அமைவினையுடையவள். அவளை அடைய விரும்பி அரசர் பலரும் அங்கு குழுமியடைந்தார். இவனும் அவளை எண்ணிச் சென்றான். செல்லும் வழியில் மதயானை ஒன்று இவன்மேல் சீறிவந்தது. அதனை இவன் வில்வலியால் வென்றான் அது, முன் பிரியம்பதன் என்று என்னும் கந்தருவனாய் இருந்து சாபவயப்பட்டதனால் இவனது உண்மையையும் திண்மையையும் வியந்து வேண்டிய வரங்களை உதவி அகன்றது. இவன் பின்பு விதர்ப்ப தேசத்தை அடைந்தான். கலைகள் நிறைந்த மதிகன் போல் அங்கு நிலவியிருக்கும் அரசர்களோடு இவனும் கலந்திருந்தான். வந்தவரனைவரினும் இவன்மீதே இந்துமதி தன் சிந்தையைச் செலுத்தினாள். மனங் காதல் விம்ம மாலை தாழ் புயங்கள் வாட எனக்கு என்றேமாந்து இருந்த காவலரை எல்லாம் நீக்கிவிட்டு இவனுக்கே அவள் மாலையிட்டாள். மாமனும் இவனை மகிழ்ந்து உட்கொண்டான். மாமன் மனையுள் இவன்மருவியிருந்தான்.

அங்கு மருகியிருந்த அரசரனைவரும் மனம் பொறாதெழுந்து இவன்மேல் அமர் செய்ய வந்தார். இவன் அஞ்சாது புகுந்தான். அவரனைவரையும் ஒருசேர வென்றான். உரிய இடம் வாய்த்ததால் ஒருவனே நின்று நம்மனைவரையும் தொலைத்தான் என்று அரசர் பல பிதற்றிச் சென்றார். எண்ணி இடத்தாற் செயின் அஞ்சாமை அல்லால் வேறு துணை வேண்டா என்பதை இவன் அன்று விளக்கினான்.

## 8. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும் (498)

பரிமேலழகர் உரை :- உறுபடையான் - பெரும்படை உடைய அரசன்; சிறுபடையான் செல்லிடம் சேரின் - ஏனைச் சிறுபடையுடையானை அழித்தல்கருதி அவன் புகழைச் சென்று சாருமாயின்; ஊக்கம் அழிந்து விடும் - அவனால் தன் பெருமை எல்லாம் அழியும் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

அரசாந்தன் என்பவன் மகதநாட்டு வேந்தனாகிய பிருகத்ரதனுடைய புதல்வன். இவனது காலம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னராகும். இவன் பிறப்பு வியக்கத்தக்கதாக விளங்கியுள்ளது. மன்னன் நெடுநாளாகப் புத்திரப்பேறின்றி வருந்தி இறுதியில் சண்டகௌசிகன் என்னும் முனிவரை அடுத்துப் பணிகள் புரிந்து அருள்வர ஒழுகினான். முனிவர் இவனது மனநிலையை உணர்ந்து அரிய மாங்கனி ஒன்றை அருளுடன் உதவித் தேவிக்கு வழங்கும்படி பணித்து ஏவினான். அரசன் சென்றான். அரசி பூத்து நீராடிய பின் பத்தாவது நாளில் முனிவர் குறித்தபடியே அதனை அவளுக்குக் கொடுத்தான். அதனை அவள் இருகூறாக்கி ஒன்றைத் தானுண்டு மாற்றொரு கூறைத் தன் தங்கைக்குக் கொடுத்தாள். அவளும் உண்டாள். பருவம் முதிர்ந்தபின் கருவும் உதித்தது. ஓருடல் இருபிளவாக அவ்விருவரும் ஈன்றதை அரசன் கண்டு சினமும் நாணமும் கொண்டு அவற்றை எடுத்து ஊர்ப்புறத்தே வீசி விடுத்தான். தனித்தனியே பிரிந்து கிடந்த அவ் இரண்டு உருவங்களையும் சரை என்னும் அரக்கி இரவில் வந்து தின்னுமாறு சேர எடுத்தாள். உடனே இரண்டும் ஒன்றாய் இணைந்தெழுந்தது. அரக்கி வியந்து அதனை அரசன் பால் தந்து அகன்று சென்றாள். சரை சந்து செய்ததால் அவனுக்குச் சராசந்தன் என்று பேரிட்டு அழைத்தார். இவன் பருவமெய்திய பின் கிரிவிரசம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிந்தான். மல்லமரிலும் வில்லமரிலும் இவன் மிகவும் வல்லவன். தன் மருகனாகிய கஞ்சனைக் கண்ணன் கொன்றுவிட்டதை அறிந்து இவன் கடுஞ்சினங் கொண்டான். படையோடெழுந்து வடமதுரையை வளைத்தான். பலராமர் அறிந்து சினந்து யாதவர்கள் சிலரோடு எழுந்து எதிர்த்தார். வந்த பெரும்படைக்கும் நின்ற சிறுபடைக்கும் சண்டை நிகழ்ந்தது. இடத்தின் ஊற்றத்தால் பலராமரும் புகுந்து பல பகழிகள் ஏவினார். இயங்கி நின்ற பகைவன் தியங்கி விழித்தான். அவ்வமையம் வருணபாசத்தால் இவனைக் கட்டிப்பிடித்துப் பலராமர் கடிநகர் புகுந்தார். கட்டவிழ்த்து விடும்படி கண்ணன் கட்டளையிட்டான். அவ்வாறே விட்டனர். நாணி நொந்து பின்பு இவன் நடந்து சென்றான். படையுடையனாயினும் இடனறியாது புகுந்தால் இழிவே அடைவான் என்பது இதனால் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர் உறைநிலத்தோ டொட்டல் அரிது (490)

பரிமேலழகர் உரை :- சிறை நலனும் சீரும் இலர் எனினும் - அரண் அழித்தற்கு அருமையும் பெருமையாகிய ஆற்றலும் உடையரல்லாராயினும்; மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்குரிய மாந்தரை அவர் உறைகின்ற நிலத்தின்கண் சென்று தாக்குதல் அரிது என்றவாறு.

**கதை**

தன் பகைவராகிய பாண்டவர்கட்கு இடங்கொடுத்து உதவினான் என்று விராடன் மீது துரியோதனன் வீண்பழி கொண்டான். அவனை அழைத்து அவரைக் கலைத்துவிட வேண்டுமென்று இவன் வலத்தோடெழுந்தான். சகுனி கர்ணன் முதலிய தன் சார்பினரைத் தழுவிப் படைகளை எழுப்பினான். விதுரன் முதலிய பெரியோர்கள் இவன் வெறிப்போக்கைத் தடுத்தார்.

தன்னிலத்தினில் குறுமுயல் தந்தியின் வலிதென்
றிந்நிலத்தினில் பழமொழி அறிதிநீ இறைவ
எந்நிலத்தினும் உனக்கெளி தாயினும் இவர்நம்
நந்நிலத்தினில் வரஅமர் தொடங்குதல் நன்றாம்

(பாரதம்)

என்று நயந்து மொழிந்தார். இவன் மறுத்துச் சென்றான். நச்சும் படையோடு தன் இசைப்படியே மச்ச நாட்டை அடைந்தான். படைவலியும் இடவலியும் திடமுற இல்லை என்றோ துரியோதனன் துன்னி வந்தான் என்று விராடன் எள்ளி எழுந்தான். உருவங் கரந்து உள்ளிருந்த வீரரும் உணர்ந்துடன் வந்தார். இரு திறத்தார்க்கும் பெருஞ்சமர் மூண்டது. அதில் படைமுதலிய யாவும் இழந்து துரியோதனன் மகுடபங்கமும் அடைந்தான். உடன்வந்தானையும் உள்ளிருந்த மானமும் ஒருங்கிழந்து மீண்டான். எளிதில் வென்றுவிடலாம் என்று கருதி வந்தவன் இழிவடைந்து போனான். விராடன் மகிழ்வு கொண்டிருந்தான். சிறை நலனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரும் இலர் எனினும் உறை நிலத்தில் மாந்தரை ஒட்டல் அரிது. என்பதைத் துரியோதனன் அன்று ஒட்டி உணர்த்தினான். அனைவரும் இதை உணர்ந்து தெளிந்தார்.

## 10. காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா வேலாள் முகத்த களிறு (500)

பரிமேலழகர் உரை :- கண் அஞ்சா வேல் ஆள் முகத்த களிறு - பாகர்க்கு அடங்காவுமாய் வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளை; கால் ஆழ் களரின் நரி அடும் - அவை கால் ஆழும் இயல்பிற்றாய சேற்று நிலத்துப் பட்டுழி நரி கொல்லும் என்றவாறு.

### கதை

உத்தரன் என்பவன் மச்சநாட்டு வேந்தனாகிய விசாடனுடைய புதல்வன். இவன் தமையன் பெயர் சுவேதன். தங்கை உத்தரை. இவன் உருவும் திருவும் உடையவனாயினும் உள்ளத்தில் ஊக்கம் இல்லாதவன் இளவரசனாயிருக்கும் பொழுது துரியோதனன் படையோடு வந்து இவனது பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வந்தான். அவற்றை மீட்கும் பொருட்டுத் தென்திசையில் சென்று அரசன் அமராடி நின்றான். பகைவர் வடதிசை வழியாக வந்து நகரையும் வளைத்துக் கொண்டார். அந்தப்புரத்தில் இருந்த அரசன் தேவி அகம் கலங்கினாள். உருவங்கரந்து அங்கு உடனுறைந்திருக்கும் துரோபதை அரசியை தேற்றி பேடிவடிவோடு அங்குக் கூடியிருக்கும் விசயனைத் தேர்விடும்படி தூண்டி உத்தரனைப் போர்மேல் ஏவினான். உத்தரனும் சித்திரத்தேரிலேறி உத்தர திசையிற் சென்றான். சிறிது தூரம் சென்ற பின்பு படைகளைக் கண்டான். உள்ளங் குலைந்து உடல் நடுங்கிக் கொண்டான். தேரைத் திருப்புக என்றான். விசையப்பேடி இசையுமா? தேர்தான் நேரே விரைந்து சென்றது. தான் அழிந்து விடுவதாக நினைத்து உத்தரன் இழிந்து ஓடினான். வீரன் நகைத்து விரைந்து போய்ப் பிடித்தான். விடுவிடு என்று கூவியும் விடாமல் கொண்டு வந்து தேரில் பிணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன்தேறுமாறு பல வீர மொழிகளை விளம்பித் தேரினைச் செலுத்திப் போர்க்களம் புகுந்தான். பெரும்போர் மூண்டது. பேடி போரால் ஒரு நொடியில் கோடிவீரர் வீடி விழுவதை ஓடின வீரன் கண்டான். உள்ளந் துணிந்தான். பின்பு உறுதியாய் நின்றான். வாகனவீரன் ஒரு மோகனக் கணையை ஏவினான். பொருதவரனைவரும் அதனால் புலன் மயங்கி வீழ்ந்தார். அவ்வமையம் உத்தரன் புகுந்தான். அவருடைய அணிகளையும் மணிமுடிகளையும் கவர்ந்து துணிவோடு நின்று சில கணைகளையும் ஏவினான். மலை கலங்கினும், மாதிரங் கலங்கினும், தன் நிலை கலங்காத கர்ணனையும் திருதவன்மன் முதலிய அரசர் பலரையும் நிலவலியால் உத்தரன் நிலைகுலையச் செய்தான். கண்ணஞ்சா வேலாழ் முகத்த களிறேயாயினும் கால் ஆழ்களரில் படின் அதனை நரியும் அடும் என்பதை இவன் அன்று நன்கு காட்டினான்.

## 51வது அதிகாரம் தெரிந்து தெளிதல்

அஃதாவது அமைச்சர் முதலாயினாரைப் பிறப்புக் குணம் அறிவு என்பனவற்றையும் செயலையும் காட்சி கருத்து ஆக்கம் என்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல்.

### 1. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் (501)

பரிமேலழகர் உரை :- அறம் பொருள் இன்பம் உயிர் அச்சம் - அரசனால் தெரியப்படுவான் ஒருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும் நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் - உபதை நான்கின் திறத்தான் மன இயல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும் என்றவாறு.

**கதை**

நிமித்திகன் என்பவன் ஏமாங்கத நாட்டிலேயிருந்தவன். சிறந்த அறிவும், திருந்திய பண்பும் பொருந்தப்பெற்றவன். கணித நூலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் மிகவும் வல்லவன். அடக்கத்தோடு எல்லா உயிர்களிடத்தும் இயல்பாகவே இரக்கம் உள்ளவன். அரசியல் முறைகளை நுணுகித்தெளிந்தவன். மனத்தூய்மையோடு வினைத்திட்பமும் வாய்ந்தவன். இவனைத் தனக்கு அமைச்சனாக்குவதற்கு அந்நாட்டு வேந்தனாகிய சச்சந்தன் விளைந்தான். பலவகையாலும் இவனது மன இயல்பினை ஆராய்ந்தான். அவற்றுளெல்லாம் இவன் நெறிதிறம்பாமல் நின்று தன்பால் உரிமை பூண்டிருப்பதை அரசன் உணர்ந்து தெளிந்து இவனை அமைச்சனாக்கிக் கொண்டான். இவன் தெளியப்பட்ட இன் நாளில் மன்னன் அழிமதியுடையனாய் பொருந்த விண்பத்தையே விரும்பி உடனிருந்த ஒருவன் பால் அரசைப் பொருந்த வைத்தான். அவ்வமையம் இவன் அரசன் பால் அன்பு கொண்டு "உலந்தரு தோளினாய் நீ ஒருவன் மேற் கொற்றம் வைப்பின், நிலந்திரு நீங்கும் அந்தோ" என்று இவன் நெஞ்சுருகி உரைத்தான். மன்னன் கேளாதிருந்தான். பின்னரும் வலிந்து,

> காவல குறிப்பன்றேனும் கருமமீ தருளிக் கேண்மோ
> நாவலர் சொற் கொண்டார்க்கு நன்கலாற் றீங்குவாரா
> பூவலர் கொடியனார்கட் போகமே கழுமிமேலும்
> பாவமும் பழியுமுற்றார் பற்பலர் கேளி தென்றான்.

இங்ஙனம் தனது மாறா உரிமையை இறுதிவரையும் மறவாமற் செய்தான். இவனது திரிபின்மையை அனைவரும் புகழ்ந்தார். அறமுதலியவற்றால் தெளியப்பட்டவன் பின்பு என்றும் திரிபின்றியிருப்பர் என்பதை உலகம் இவன்பால் கண்டது.

## 2. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும் நாணுடையான் கட்டே தெளிவு (502)

பரிமேலழகர் உரை :- குடிப்பிறந்து - உயர்ந்த குடியிற் பிறந்து; குற்றத்தின் நீங்கி - குற்றங்களினின்று நீங்கி; வடுப்பரியும் நாணுடையான் கட்டே தெளிவு - 'நமக்கு வடுவருங்கொல்' என்று அஞ்சாநிற்கும் காணுடையவன் கண்ணதே அரசனது தெளிவு என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

கபிலர் என்பவர் பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூரிலே அந்தணர் குலத்திலே பிறந்தவர். இவரது காலம் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னராகும். சிறந்த புலமையோடு உயர்ந்த குணங்கள் பலவும் இவர்பால் நிறைந்திருந்தன. இவர் சங்கப் புலவருள் ஒருவர். தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டுமே படித்தால் என்று நமது வள்ளுவப் பெருமான் அருளிய நூலை வியந்து இவரும் ஒரு கவி அருளியுள்ளார்.

குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பொருள் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையில்
காதலின் பத்துட் டங்கித் தீதற
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாவின்மை யென்றாங்
கிருபெரு நிதியமும் ஒருதா மீட்டும்
தோலா நாவின் மேலோர்

என்று நூலோர் போற்றும் சால்பினையுடையவர். கவிபாடுவதில் இவர் மிகவும் வல்லவர். இவரது கவிகள் செறிவும் தெளிவும் இனிமையுமுடையன. வாழியாதன் என்னும் சேரன் மீது பத்துப்பாடல்கள் பாடினார். அதற்காக அம்மன்னன் நூறாயிரம் பொற்காசும் உதவி ஒரு மலைமேல் ஏறிநின்று நோக்கித் தன்கண் கொள்ளக்கிடந்த நாடு முழுவதையும் இவர்க்கு நயந்து கொடுத்தான். அப்பாடல்கள் பதிற்றுப்பத்து என்னும் நூலில் உள்ளன. தமது புலமை நலத்தை அரசர் முதல் அனைவரும் ஒருபடியாக நுகரும்படி உலகமெங்கும் இவர் உலாவித்திரிந்தார். ஒரு நாள் பாரிவள்ளலது ஊரை அடைந்தார். நெடுநாளாக இவருடைய குணநலங்களைக் கேள்வியுற்றறிந்த அவன் இவரைக் கண்டவுடனே கவிமீக்கூர்ந்து உடனழைத்துக் கொண்டு போய் உவந்து உபசரித்தான். இவரது குற்றமற்ற தன்மையையும் மற்ற நலங்களையும் உற்றறிந்து தனக்கு உற்ற துணையாக இவரை அவன் முற்றுந் தெளிந்தான். என்றுந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனிருந்து வாழுமாறு இவரை அவன் உளமுருகி வேண்டினான். அவனது அறிவையும் அன்பையும் வியந்து பெரு நண்பு கொண்டு இவர் அவனோடு தங்கியிருந்தார். தனக்குத்துணையாக உடனே இவரைத் தெளிந்து கொண்ட அவனது தெளிவினை அனைவரும் புகழ்ந்தார். குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும் நாணுடையான் கண்ணே தான் தெளிவு கொள்ள வேண்டும் என்னும் உண்மையை இவன் அன்று தெளிய நிவின்றான்.

## 3. அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு (503)

பரிமேலழகர் உரை :- அரிய கற்று ஆசு அற்றார்கண்ணும் - கற்றற்கு அரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய குற்றங்கள் அற்றார் மாட்டும்; தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது - நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மை இல்லாமை அரிது என்றவாறு.

**கதை**

பிரமன் என்பவர் அகிலமனைத்தையும் ஆக்குதற்குக் காரணராகி அமைந்திருப்பவர். சிவன் மால் என்னும் இருவரிடத்தும் கற்பங்கள் தோறும் தோன்றி அவரோடு கூடி மூவராகி நிற்பவர். அமரரனைவர்க்கும் முதல்வர். அறிவின் தெய்வமாகிய கலைமகளைத் தனக்குத் தலைமகளாகக் கொண்டவர். பிரமன், விரிஞ்சன், பிதாமகன், பிதாவரன், அயன், மலரோன், வேதா, போதன் எனப்பல ஏதுப்பெயர்களை உடையவர். பொன்னிற மேனியர். இவர் எழுந்தருளியிருக்கும் தலத்துக்குச் சத்திய உலகம் என்று பெயர். பதினாறு கோடி யோசனை அளவில் அ∴து அமைந்துள்ளதென்பர். அதனடுவில் அகமகிழ்ந்து குணநிதியாகிய தேவியோடு இவர் அமர்ந்திருப்பர். வேதமுதலிய கலைகள் யாவும் இவரைச் சூழ்ந்து நயந்து நிற்கும். அத்தகைய பேரறிவாளர் ஒருநாள் கைலையை அடைந்து மீளுங்கால் குமார தெய்வத்தைக் கண்டார். குழந்தை என்று கணித்து அவரை இவர் கணியாது சென்றார். அப்பிள்ளைப் பெருமான் இவரது பெருமிதத்தை உணர்ந்து "இங்கு வருக" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல அழைத்தார். இவர் வந்தார். வினவி உவந்து வீற்றிருக்கப் பணித்து வேதம் வருமெனின் ஓதுக என்றார். இவர் ஓம் எனத் தொடங்கி ஓதப்புகுந்தார். ஓம் என்றதற்கு அவர் பொருள் என்ன? என்றார். இவர் உள்ளங்கலங்கினார். அதன் உண்மைப் பொருளை உணராது விழித்தார். ஒரு மொழிக்குப் பொருள் அறியாத நீர் உலகைப்படைப்பது எப்படி? என்று இவரை அவர் ஓங்கிக் குட்டினார். உண்மையறிவோடு உயர்ந்திருந்த தன்னுள்ளம் இவ் வெண்மை உயர்ந்திருந்ததே என்று இவர் வெள்கி நொந்தார். "நான்முகன் ஆதி அரி ஓம்! எனும் ஆதாரமுறையாக பிரமாவை விழமோதி பொருள் ஓதுகென, நாலுசிரமோடுசிகை துளிபட தாளமிடும் இளையோன்" என்று அருணகிரியாரும் இக்கதைக் குறிப்பைத் தம்புகழ் குறிப்பில் குறித்து வைத்துள்ளார். அரியகற்று ஆசு அற்றார் கண்ணும் தெரியுங்கால் வெளிறு இன்மை அரிதே என்னும் உண்மையை அனைவரும் இவர்பால் அன்று அறிந்து தெளிந்தார்.

## 4. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் (504)

பரிமேலழகர் உரை :- குணம் நாடி - குணம் குற்றங்களுள் ஒன்றே உடையார் உலகத்து இன்மையின் ஒருவன் குணங்களை ஆராய்ந்து; குற்றமும் நாடி - ஏனைய குற்றங்களையும் ஆராய்ந்து; அவற்றுள் மிகை நாடி - பின் அவ்விருபகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து; மிக்க கொளல் - அவனை அம்மிக்கவற்றானே அறிக என்றவாறு.

### கதை

சுக்கிரீவனை இராமர் கண்ட பொழுது அவனைத் தனக்கு உதவியாகத் தழுவிக் கொள்ள விழைந்து முதலில் அவனது இயல்பினை ஆராய்ந்தார். ஆண்மை, அன்பு, நேர்மை முதலிய பெருங்குணங்கள் பல அவன்பால் நிறைந்திருந்தன. ஆயினும் உடன்பிறந்தானோடு பகைத்தல், வன்மங் கூர்தல் முதலிய குற்றங்களும் கூடி இருந்தன. அவ்விரு பகுதிகளையும் சீர் தூக்கி நோக்கினார். அவற்றுள் குணம் மிகுதி கண்டார். உடனே அவனைத் துணைவனாகத் தெளிந்து கொண்டார். அதன்பின் இவன் ஆவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வந்தான். வருங்கால் வாலியோடு மல்லமர் தொடங்கினான். அதனை இலக்குவன் கண்டான். அவன் அண்ணனையே தெய்வமென எண்ணியிருக்கும் புண்ணியனாதலால் இவனை இகழ்ந்து வெறுத்து வினைக்குரியனாக இவனைத் தெளிந்து கொண்ட தன் முன்னோனையும் முனிந்தான். குற்றம் சிறிதுமில்லாதவர் இவ்வுலகில் மிக அரியராதலால் உற்றவருக்குள்ளே குணமுண்மையை நாடியே நாம் கூடிக்கொள்ள வேண்டுமென்று அவர் தேடி மொழிந்தார். தம்பி வாடி அமைந்தான். ஆயினும்

ஆற்றாது பின்னும் பகர்வான் அறத்தா றழுங்கத்
தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்விதன்றால்
மாற்றானெனத் தம்முனைக் கொல்லிய வந்துநின்றான்
வேற்றார்கள் திறத்திவன் தஞ்சமென் வீர என்றான்.

கலக்கமில்லாமல் இலக்குவனுரைத்த இவ் இழிந்த மொழிகளை இராமர் கேட்டார். அரசமுறைகளையும் பிறரைத் தெரிந்து தெளியும் இயல்பையும் மொழிந்து குற்றமிருந்தாலும் குணமிகுந்திருந்தால் அவனை வினைக்குரியனாகத் தெளிந்து கொள்ளலாமென்று தெளியவுணர்த்தித் தம்பியைத் தழுவிநின்றார். குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி அம்மிக்கவற்றால் ஒருவனைத் தெளிந்து கொள்ளவேண்டும் என்பது சுக்கரீவன்பால் அன்று தெளிய நின்றது.

## 5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் (505)

பரிமேலழகர் உரை :- பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக் கல் - பிறப்புக் குணம் அறிவு என்பவற்றால் மக்கள் எய்தும் பெருமையாகிய பொன்னின் அளவு அறிதற்கும் மற்றைச் சிறுமையாகிய பொன்னின் அளவு அறிதற்கும் உரைகல்லாவது; தத்தம் கருமமே - தாம் தாம் செய்யும் கருமமே, பிறிது இல்லை என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

தருமந்தன் என்பவன் சந்திரகுலத்து வேந்தனாகிய நந்தனுடைய மைந்தன். அரசமரபில் பிறந்திருந்தும் இவன்பால் நயவஞ்சகமே மிகுந்திருந்தது. மிக்க கெடுமதி உடையவன். பிறர் பெருங்கேடு அடைவதாயிருந்தாலும் தனக்குச் சிறிய ஊதியம் வருவதாயிருந்தால் அவ்வினையில் இவன் புகுந்து விடுவான். தன் புல்லிய இல்பினைப் பிறர் அறியாவண்ணம் சொல்லாலும் நடிப்பாலும் இவன் மறைந்து வந்தான். வருங்கால் துணைவர் சிலருடன் ஒரு நாள் இவன் வேட்டைக்குச் சென்றான். அடர்ந்த வனம் ஒன்றில் வழியறியாது புகுந்து உடன் வந்தவரைப் பிரிந்தான். பின்பு உளம் நொந்து திரிந்தான். இரவு நெருங்கியது. புலி முதலிய கொடு விலங்குகளுக்கஞ்சி அங்கோர் பழுமரத்தில் ஏறிப் பதுங்கியிருந்தான். கரடி முகமும் மனித உருவும் உடைய சானகன் என்னும் வனவரசன் ஒருவன் அங்கோர் சிங்கத்தை அஞ்சி ஓடிவந்து இவன் இருந்த மரத்திலேயே விரைந்து ஏறினான். இவன் முதலில் சிந்தை கலங்கினான். அவன் தேற்றத் தேறிப்பின் இருவரும் சேர்ந்தினிதிருந்தனர். அச்சிங்கமும் அம்மரத்தின் அடியில் வந்து தங்கி நின்றது. தனது மனைவியோடு ஆடையின்றி நருமதை நதியில் நீராடி நின்ற பத்திரன் என்னும் கந்தருவனே கௌதமர் என்னும் முனிவர் சாபத்தால் இப்பிறப்பை அடைந்துள்ளான். ஆதலால் பேசுதல் முதலிய பெருநலங்களையும் அது கொண்டிருந்தது. கொண்டவடிவின் கொடுமைக்குத் தக்கபடி அவரைக் கொன்றுதின்றுவிட வேண்டுமென்றே அடியில் அது குறிக் கொண்டிருந்தது. மேலிருந்த இருவரும் ஒருவர் தூங்கும் போது மற்றவர் விழித்திருக்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார். அம்முறைப்படி அரசன் முதலில் உறங்கினான். சானகன் காவலாக விழித்திருந்தான். "தருமந்தன் மிகக் கொடியவன், அவனைக் கீழே தள்ளிவிடின் உன்னோடு உறவாகி இவ் அடவியில் உனக்கு உதவி புரிவேன்" என்று சிங்கம் உரைத்தது. யான் கெடினும் என்னை நம்பியவனுக்குக் கேடு செய்யேன் என்று சானகன் இசைத்தான்.

சிங்கம் அசைத்துக் கொண்டு பேசாதடங்கியிருந்தது. பின்பு சானகன் உறங்கத் தருமந்தன் விழித்திருந்தான். இரவு நாளிகை இருபதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் அயர்ந்து தூங்கும் பொழுது சானகனைத் தள்ளி விடும்படி தருமந்தனிடம் சிங்கம் மெல்லக் குறித்தது. அக்கொடியவன் உடனே அவ்வாறே செய்துவிட்டான். சானகன் கீழே விழுந்தான். விழுந்தவனுடைய குணநலத்தால் சிங்கமும் உணர்ச்சியுடையதாய் ஒதுங்கி நின்றது. தான் செய்த ஈனச்செயலால் தருமந்தன் நீசனாகியிழிந்தான். சானகன் உயர்ந்த பெருமையடைந்து பின்பு சிறந்து விளங்கினான். தருமந்தனது இழிவும் சானகனது உயர்வும் அவர்தம் செயல்களாலே தெளிவாயின. மக்கள் எய்தும் பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் என்பதை இவர் அன்று காட்டி நின்றார்.

## 6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர் பற்றிலர் நாணார் பழி (506)

அற்றாரைத் தேறுதல் ஓம்புக - சுற்றமில்லாதாரைத் தெளிதலை ஒழிக; அவர் மற்றுப் பற்று இலர் - அவர் உலகத்தோடு தொடர்பிலர்; பழி நாணார் - ஆகலான் பழிக்கு அஞ்சார் என்றவாறு.

**கதை**

நீலி என்பவள் திருவாலங்காட்டிலே வேளாளர் குலத்திலே புரிசைகிழான் என்பவனுக்கு ஒரு புதல்வியாகப் பிறந்தவள். இவள் பருவமெய்தியபின் பழவினைவயத்தால் அறிவுதிரிந்து அனைவரையும் இழந்து தனியாக அலைந்து தன் இயல்பினை எவரும் அறியாதபடி வேண்டிய பொழுது வேண்டும் உருவங்களை எடுத்து பல்லுயிர்க்கும் அல்லல் விளைவித்து வந்தாள். வருங்கால் காஞ்சிபுரத்தில் இருந்த தரிசனன் என்னும் வணிகன் ஒருவன் வாணிகத்தின் பொருட்டு அவ்வழியே வந்தான். இவள் அவனுடைய மனைவி போல் வடிவங் கொண்டு அவனைத் தொடர்ந்து சென்றாள். அவன் திரும்பி நோக்கி முதலில் மயங்கினான். பின்பு உண்மை தெரிந்து உள்ளங் கலங்கினான். ஆயினும் அவன் மந்திரமுறை தெரிந்தவனாதலால் இவளை நெருங்கவொட்டாது விரைந்து சென்று திருவாலங்காட்டை அடுத்திருந்த பழையனூர் என்னும் பதியினையடைந்தான். இவளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து புகுந்தாள். சேனன் கிழான், வாணன் என்னும் அவ்வூர்த் தலைவர்களிடம் சென்று "ஐயன்மாரே! என்கணவன் என்னைத் தனியே விலக்கிவிட்டு வேறொருத்தியை மணந்து கொள்ள வேண்டுமென்று இப்படி வெருண்டு போகிறார்" என்று விம்மியழுதாள். அனைவரும் திரண்டு தரிசன செட்டியை அழைத்து இளமை மங்காத இவ்வழகியை விடுத்து வேறொருத்தியை நீர் கொள்ள விழைவது நல்லதாகுமா? என்று சொல்லியுணர்த்தினார். "ஐயகோ! இது மாறுபாடுடையதோர் பேய்; இவள் மொழியை நீவர் தேறலாகாது என்று அவன் கூறிநின்றான். அண்ணமாரே! நான் உண்மை சொல்லுகின்றேன். இந்தத் தாலியைக் கட்டிவிட்டு இப்படிக் கேலி பண்ணலாமா என்று தாரை தாரையாக நீலி கண்ணீர் சொரிந்தாள். வேளாளர் நம்பி தரிசனை அவளோடு தனியே இரவில் ஒரு இல்லிலிருக்குமாறு செய்தார். நடுநீசியில் அவனைக் கொன்றுவிட்டு நீலி வெளியே போனாள் விடிந்த பின் பார்த்தார். செட்டி இறந்து கிடப்பதைக் கண்டார். ஆராயாமல் தெளிந்ததால் இப்பேரிழிவு வந்ததே என்று அனைவரும் பேதுற்று நொந்தார் அன்று தேறிநின்றவர் எழுபது பேரும் தம் தெளியாமையால் வந்த பழியென நாணி அனலில் விழுந்து அழிவுறலானார். சுற்றம் அற்றார், பற்று இலராகிப் பழிக்கு நாணார் ஆதலால் அவரைத் தேறலாகாது என்பதும், ஆராயாமல் தேர்ந்தால் அவரால் தீராத கேடு உண்டாம் என்பதும் நீலிபால் அன்று உலகம் தேறிநின்றது.

மாறுகொடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகனுயிர் இழப்பத்தாங்கள்
கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக்
குழியிலெழு பதுபேரும் மூழ்க்கிக்கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட்டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மால்
பிரித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல் பேதமை எல்லாம் தரும் (507)

பரிமேலழகர் உரை :- காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல் - அன்புடமை பற்றுக்கோடாகத் தமக்கு அறிய வேண்டுவன அறியாதாரைத் தெளிதல்; பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும் என்றவாறு.

**கதை**

மித்திரசகன் என்பவன் சூரியகுலத்து வேந்தனாகிய சுதாசன் என்பவனுடைய புதல்வன். இவன் பாட்டன் பெயர் சருவாகமன். இவன் போரில் வல்லவன். சிறந்த வீரமும் நிறைந்த தவவொழுக்கமும் இவன்பால் செறிந்திருந்தன.

சுதாசன் என்பவன் அன்பினி லீன்றஅத் தோன்றல்
பாதாரவிந்தம்வந் திறைஞ்செவம் பகையெனும் இருளுக்கு
உதாசன்னதனை நிகர்தரு மானவே லுழவன்
மதாசலத்தினன் மித்திரசகன் என்னும் மன்னன் (1)

உரைத்த மன்னவன் உவரிசூழ் உலகொரு புபத்தில்
பரித்து வண்டினங் காமரம் பாடிமட் டருந்த
விரித்த கிங்கிணி வாய்மலர் வேரியந் தொடையல்
தரித்த நல்லெழில் மதயந்தி தனைமணந் துவந்தான் (2)

என்று சுகமுனிவரும் இவனுயர் நலங்களைச் சொல்லி உவந்துள்ளார். அழகிலும் அறிவிலும் சிறந்த தன் அருமைத் துணைவியோடமர்ந்து இன்பக் கடலில் திளைத்து எல்லா உயிர்களையும் அன்போடு இவன் காத்து வந்தான். வருங்கால் விந்தமன் என்னும் ஒருவன் இவன்பால் வந்து உணவு முதலியன இனியவாகச் செய்து உதவுதல் வல்லேன் என்று ஒதுங்கி உரைத்தான். அவன் அவ்வினையை இனிதறியாமையோடு கரவும் உடையவன். அவனை நுணுகியறியாமல் அவனது பணிமொழிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் மனம் இளகினான். நாளும் பணிந்து அவன் நயந்து ஒழுகியதால் ஏதும் அறியாமலே மன்னன் அவன்மேல் காதல்மீக் கூர்ந்தான். அதனால் வினைக்குரியனாக அவனை அணைத்துக்கொண்டான். அவனும் அமர்ந்து வந்தான். வருங்கால் தென்புலத்தார்க்கு அன்பு செய்தூட்டும் திதி நாளொன்றில் அங்கு வசிட்டர் வந்தார். அவரை உபசரித்து அரசன் விருந்து செய்தான். அதில் ஊனைச் செய்துகொண்டு வந்து உணர்வில்லாமல் விந்தமன் உண்ண வைத்தான். முனிவர் உணர்ந்து கொதித்து அரசனைச் சபிக்கத் துணிந்தார். அரசனும் வெகுண்டு அவரைச் சபிக்குமாறு மந்திரித்துக் கையில் நீரை எடுத்தான். மனைவி தடுத்தாள். அதன் பின் அந்நீரைத் தன் காலில் விடுத்தான். அவை கருகிநின்றன. அதனால் கனமாடபரதன் என்று பின்பு இவன் பெயரடைந்தான். அறிவில்லாதவனை வினைக்குரியனாகத் தெளிந்து வைத்ததனால் அல்லவா இவ்வல்லல் வந்தது என்று அரசன் அறிந்து நொந்தான். காதன்மை கந்தாக அறிவு அறியாரைத் தேறுதல் பேதைமை எல்லாம் தரும் என்பதை உலகம் இவன்பால் பேணிக் கண்டது.

## 8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை தீரா இடும்பை தரும் (508)

பரிமேலழகர் உரை :- பிறனைத் தேரான் தெளிந்தான் - தன்னோடு இயல்புடையனல்லாதானைப் பிறப்பு முதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு; வழிமுறை தீரா இடும்பை தரும் - அத்தெளிவு தன்வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் என்றவாறு.

**கதை**

சேமதரன் என்பவன் கனகதரன் என்னும் சூரியகுலத்து மன்னனுடைய புதல்வன். நல்ல அறிவுடையவன். இவனது காலம் இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகட்கு முன்னராகும். இவனுடைய மனைவிபெயர் மதனமுகி. அவ்வழகியோடு அமர்ந்து மகிழ்ந்து இவன் அரசு புரிந்து வருங்கால் கேதமன் என்னும் ஒருவன் வந்தான். அவன் பொல்லாதவனாயினும் கல்வியறிவோடு நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வன்மையுமுடையவன். ஒன்றையும் ஆராயாமல் அவன்பால் அரசன் பெரு நட்பு கொண்டான். அவனும் வினைக்குரியனாகி இவன்பால் அமைச்சுரிமை பூண்டான். அரசனிடம் மட்டும் அமைதியுடையவனாய் நடித்துப் பிறருக்கெல்லாம் அவன் பெருந்துயர் விளைத்தான். அதனால் கொடும்பகை வளர்ந்தது. குடிகளும் வருந்தினர். முடிவில் விதர்ப்பதேயத்து வேந்தனாகிய உக்கிரசேனன் என்பவன் இவ்வரசன் மேல் படையெடுத்து வந்து பெரும் போர் புரிந்து முற்றாய் வென்று அரசு முழுவதையுங் கவர்ந்து கொண்டான். இவன் அகன்று சென்று வருந்தியிருந்தான். இவன் வழியில் வந்தவரும் அவ் வழிதுயர் அடைந்தார். இயல்பாகவே தான் நல்லவனாயிருந்தும் கேதமனை ஆராய்ந்து தெரியாமல் சேர்த்துக் கொண்டதனால் இத் தீதுறவந்ததென்று பின் இவன் தெளிவுற்று நொந்தான். பிறனைத் தேராமல் ஒருவன் தெளிந்தால் அவன் வழிமுறையினும் அதனால் தீராத இடும்பை உண்டாம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து தெளிந்தது.

## 9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின் தேறுக தேறும் பொருள் (509)

பரிமேலழகர் உரை :- யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாது ஒழிக; தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராய்ந்தபின் தெளியும் பொருள்களை ஐயுறாதொழிக என்றவாறு.

**கதை**

பிரமதத்தன் என்பவன் பாஞ்சாலதேசத்து வேந்தனாகிய விப்ரனுடைய புதல்வன். இவனது காலம் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னராம். இவன் அதிமதி நுட்பமொடு அதிகலை கற்றவன். புழுக்கள், பறவைகள், விலங்குகள் முதலிய எல்லா உயிர்வர்க்கங்களும் தத்தமக்குள்ளே வழங்கிக் கொள்ளும் சொல்லாடல்களை இவன் இனிதுணர்ந்தவன். சந்நிதி என்னும் ஓர் அழகிய பெண்ணை மணந்து அமைந்த போகங்களை இவன் அனுபவித்திருந்தான். ஒருநாள் அந்தப்புரத்தில் தனது இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியோடு தனியாக அமர்ந்திருந்த பொழுது இரண்டு எறும்புகள் ஒன்றோடொன்று வாதாடிக்கொண்டிருப்பதைக் கண்டு உற்று நோக்கினான். அவற்றுள் பெண் எறும்பு ஆண் எறும்பை நோக்கி நீ அயலோர் எறும்பை நெருநல் மருவிநின்றாய்; அதனால் இன்று என்னை நெருங்காதே. இனிக் கூடேன் என்று ஊடிநின்றது. ஆண் எறும்பு அலமந்து "இனி அதை என்றும் செய்யேன்; இன்று பொறுத்தருள்க" என்று அதன் முன் காலை முகர்ந்து கொண்டு குழைந்து நின்றது. அதன்பின் அஃது இணங்கி உவந்தது. இதனை உய்த்துணர்ந்த பிரமதத்தன் இவ் எறும்பினிடத்தும் காமன், குறும்பு கலந்திருக்கின்றதே! என்று வியந்து நகைத்தான். நகைத்தது ஏன் என மனைவி அணைந்து கேட்டாள். இவன் நயந்து மொழிந்தான். இங்ஙனம் பேரறிவுடையவனாய் உவந்து வீற்றிருந்த இவன் பருவமெய்தியபின் அரசுரிமையை ஏற்று முறை செய்து வருங்கால் கண்டரீகன், சுவாலன் என்னும் இருவர் வந்து கண்டார்கள். அவர்களது அறிவு இச்சைச் செயல்களைப் பலவகையாலும் அகல வைத்து ஆராய்ந்து வந்தான். முன்னர் வந்த எவரையும் நம்பாமல் ஐயுற்றகற்றிய இவன் அவர்களைத் துணைவராகத் தெளிந்தான். அதன்பின் சிறிதும் ஐயுறாமல் அவர்களை உரிமையோடு நடத்தினான். அவர்களும் அவனுக்கு இருகண்கள் போல் இருந்து இன்புற நடந்து அன்பு செய்து வந்தார்கள். அதனால் அரசன் உயர்ந்து புகழோடு சிறந்த இன்பத்தையும் அடைந்தான். யாரையும் தேராது தேறற்க தேர்ந்தபின் தேறும் பொருளைத் தேறுக என்பதை இவன் தேர்ந்து காட்டினான்.

## 10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும் (510)

பரிமேலழகர் உரை :- தேரான் தெளிவும் - அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும்; தெளிந்தான் கண் ஐயுறவும் - ஆராய்ந்து தெளிந்தவன் மாட்டு ஐயப்படுதல் இவ்விரண்டும்; தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காதா துன்பத்தைக் கொடுக்கும் என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

அசுவத்தாமன் என்பவன் தொல்லாசிரியர் எல்லாராலும் வில்லாசிரியர் என்று புகழப்பட்ட நல்லாசிரியனாகிய துரோணருடைய புதல்வன். தாய் பெயர் கிருபி. இவன் சிவனருளாற் பிறந்தவன். சிரஞ்சீவியர் எழுவருள் ஒருவன். மற்றவர் வியாசன் அனுமான், வீடணன், மாபலி, கிருபன், பரசுராமன் என்பர். இவன் அந்தணனாயினும் அரசரும் அஞ்சத்தக்க பெரு வீரமுடையவன். வில்லாடலோடு சொல்லாடலிலும் வல்லவன். கரவேகத்திலும் சரவேகத்திலும் விசயனினும் விஞ்சியவன் என்று இவன் இசை பெற்றிருந்தான். இவனது வினைத்திறத்தை வியந்து துரியோதனன் இவன்பால் பெருநண்பு கொண்டான். வழுவில்லாத துணைவன் என்று இவனை முழுவதும் நம்பினான். பாரதப் போரில் இவனையே தன் சேனைக்கு அதிபதியாக்கிக் கொள்ளவேண்டுமென்று அவன் தெளிவுற்றிருந்தான். படைத்தலைவனாக இவன் நின்றால் பாண்டவர் வெற்றியடைதல் அரிது என கண்ணன் கருதியிருந்தாராதலால் தூது சென்ற பொழுது ஒரு சூழ்ச்சியைச் செய்தார். அரசவையிற் புகுந்து உரைசெய்து மீளுங்கால் அசுவத்தாமனை துரியோதனன் காணுமாறு கண்ணமைத்து அழைத்தார். இவன் வெளியே வந்து அவர் அருகே நின்றான். நும் அரசன் உரைத்தபடியே ஐவரும் வனம் புகுந்து திரிந்து விரதம் தப்பாமல் வந்து தம் உரிமையைக் கேட்டால் இல்லை என்று மறுத்து விட்டான். இனி நிகழ்வதைக் குறித்து நீ வருத்தம் கொள்ளற்க என்று உரைத்துக் கொண்டே தம் விரலணியைக் கழற்றி நழுவவிட்டார். அது கீழே விழுந்தது. விழுந்த அதனைக் குனிந்து எடுத்து இவன் கண்ணனிடம் கொடுத்தான். அவர் அதனை உடனே கொள்ளாமல் சூரியனை

ஊர்கோள் சுற்றியிருக்கின்றதே! என்று மேலே நோக்கினார். இவனும் அண்ணாந்து நோக்கினான். இதன் பின் அதனை அவர் வாங்கிக் கொண்டார். பூமியைக் குனிந்து தொட்டுப் பின்பு வானை நிமிர்ந்து நோக்கிக் கண்ணன் கையில் தன் கைபட இவன் நின்ற நிலைமையைக் கண்டு கொண்டிருந்த துரியோதனன் வேறு வகையாகக் கருதிக் கொண்டான். பூமிதேவி அறிய ஆகாயவாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியாக ஐவர்க்கே யான் உதவியாகி நிற்பேன் என்று அசுவத்தாமன் கண்ணனிடத்தில் உறுதி செய்து தந்ததாகத் துரியோதனன் முடிவு செய்து கொண்டான். ஆதலால் அன்றுமுதல் இவன்பால் ஐயங்கொண்டான். இவன் பின்பு வந்து யாது கூறியும் நம்பவில்லை. அவனது ஐயுறவை நோக்கி இவனும் தன் மெய்யுறவை நீக்கினான். அதனால் அவன் பெருந்துன்பங்களை அடைந்தான். தெளிந்தான் கண் ஐயுறவு தீராத இடும்பை தரும் என்பதை இவன்பால் உலகம் தெளிந்து நின்றது.

## 52வது அதிகாரம். தெரிந்து வினையாடல் அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின் கண்ணே ஆளுந் திறம்

**1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மையான் ஆளப் படும் (511)**

பரிமேலழகர் உரை :- நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒரு வினையைத் தன்கண் வைத்தால் அதன்கண் ஆவனவும் ஆகாதனவும் ஆன செயல்களை ஆராய்ந்தறிந்து; நலம்புரிந்த தன்மையான் - அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய இயல்புடையனாய்; ஆளப்படும் - பின் அவனால் சிறந்த வினைகளிலே ஆளப்படும் என்றவாறு.

**கதை**

அரிசிற்கிழார் என்பவர் சோழ நாட்டிலே அரிசிற்கரை என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர். சிறந்த புலவராய்ப் பெரும்புகழ் படைத்து இவர் விளங்கியிருந்தார். எவரிடத்தும் மிக்க இரக்கமுடையவர். பேகன் என்னும் வள்ளலைப் பிரிந்து வருந்தியிருக்க கண்ணகி என்னும் காதற் கிழத்தியை அவன் கைக்கொண்டு வாழுமாறு இவர் போய்க் கனிந்து மொழிந்தார். எவர் கூறியும் கேளாதிருந்த அவன் இவரது மொழிவழியொழுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலந்தரு திருவினாரும் வலந்தரு திருவினாரும் இவரது நலந்தரு பாடலால் சலர்தவிர்ந் துயர்ந்தனர். இவரது நுண்ணிய அறிவையும் எண்ணியதை இனிது முடிக்கும் திண்ணிய நலத்தையும் தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும் பொறை என்னும் சேரமன்னன் கேள்வியுற்று இவரைத் தன்பாலழைத்து வைத்து அன்பு செய்து போற்றி வந்தான். இவரும் அவனது வள்ளற் குணம் முதலியவற்றை வியந்து அவன் மேற் சிலபாடல்கள் பாடினார். அவற்றைக் கேட்டு அம்மன்னன் மகிழ்ந்து ஒன்பது நூறாயிரம் பொற்காசுகளை உதவித் தான் அமர்ந்திருந்து அரசுபுரிந்த அரியணையையும் இவருக்கு உரிமையாகத்தான் இப்பொலந் தவிசு அரசுக்கே பொருந்துமென்று இரந்து தந்து இதில் அவனை எழுந்தருளச் செய்தார். ஆவதை அறிந்து அன்பு செய்த இவரது அறிவினை வியந்து தனக்கு அமைச்சராக இவரை அவன் அணைத்துக் கொண்டான். இவரும் அரசுமுறையை வழுவறப் புரிந்து அவனது இசையைத் திசைதொறும் விளக்கி இனிதமர்ந்திருந்தார். நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையானே பின் அரசனால் வினைகளில் வைத்து ஆளப்படுவான் என்பதை இவர்பால் அன்று உலகம் அறிந்து கொண்டது.

## 2. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை ஆராய்வான் செய்க வினை (512)

பரிமேலழகர் உரை :- வாரி பெருக்கி - பொருள் வருவாயில்களை விரியச் செய்து; வளம்படுத்து - அப்பொருளான் செல்வங்களை வளர்த்து; உற்றவை ஆராய்வான் - அவ்வாயில்கட்கும் பொருட்கும் உற்ற இடையூறுகளை நாள்தோறும் ஆராய்ந்து நீக்கவல்லவன்; வினை செய்க - அரசனுக்கு வினை செய்க என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

அக்குரூரர் என்பவர் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வடமதுரையிலே சுவபலகன் என்பவருக்குப் புதல்வனாய்த் தோற்றினார். தாய் பெயர் காந்தினி. இவர் நல்ல சீலமுள்ளவர். எல்லாவுயிர்களிடத்தும் இயல்பாகவே இரக்கம் கொண்டவர். இளமைப் பருவத்தில் எளிய பிராணிகளுக்குப் பிறர்துயர் புரிந்த பொழுது அவரைத் தடுத்து அவற்றை இவர் ஆதரித்தார். குரூரம் என்பது சிறிதும் இவரிடம் இல்லாதிருந்ததினால் அக்குரூரர் என்று இவர் அழைக்கப்பட்டார். இவர் சித்திர ரதை என்னும் உத்தமியை மணந்து சிறந்து வாழ்ந்து வருங்கால் வடமதுரை மன்னனாகிய உக்கிரசேனன் இவரைச் தனக்கு அமைச்சனாக்கிக் கொண்டான். இவர் அமைச்சராயிருந்து பல வகையிலும் அரசுக்குப் பெரு நலங்களைச் செய்து வந்தார். இவரது வினைநலத்தால் குடிகள் பெருவளங்களை அடைந்து மிக மகிழ்ந்திருந்தன. இளவரசனாய் இருந்த கஞ்சன் வலியனாகித் தந்தையையும் மதியாமல் தன்னரசு புரிந்த காலத்தும் மன்னனுக்கு இயன்றவரையும் இவர் இதம் புரிந்து வந்தார். பாண்டு மன்னன் இறந்தபின்பு திருதராட்டிரன் பாண்டவர்களை எப்படிக் கொண்டு வருகின்றான் என்பதைக் கண்டுவரும்டி கண்ணனால் இவர் அத்தினாபுரிக்கு ஏவப்பட்டார். அங்குச் சென்று அவ்வரசனுக்குப் பல நீதிகள் ஓதி உணர்த்தினார்.

பெற்ற புதல்வர் போலப் பிள்ளைச் சுரும்பர் பாடும்
பெற்றார் ஐவர் தம்மைப் போற்றிக் கொள்ளல் வேண்டும்
எனவும்
பொது நின்றுலகம் புரத்தி பொங்கு புகழே அல்லால்
எது நின்றது மற்றென்னா
எனவும் உன்னியவற்றை உறுதிபெற உணர்த்தி மீண்டார்

சாலுவன், தந்தவக்கிரன், சததன்வா முதலியோர் இயற்றிய அல்லல் பலவற்றையும் அறிந்து விலக்கி எல்லாவுயிர்கட்கும் இவர் இகத்தை விளைத்தார். உற்ற இடையூறுகளை உய்த்துணர்ந்து நீக்கி வினையை இனிதுறச் செய்து வருகின்ற இவரது மனநலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து கண்ணனும் இவர்பால் பெருநண்பு கொண்டு பேணிவந்தார். வாரி பெருக்கி வளம்படுத்தி உற்ற இடையூறுகளை நாள்தோறும் உய்த்துணர்ந்து நீக்க வல்லவனே அரசனுக்கு வினை செய்வதற்கு உரியவனாவான் என்பதை உலகம் இவர் பால் உணர்ந்து தெளிந்தது.

## 3. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு (513)

பரிமேலழகர் உரை :- அன்பு - அரசன் மாட்டு அன்பும்; அறிவு - அவனுக்கு ஆவன அறியும் அறிவும்; தேற்றம் - அவை செய்தற்கண் கலங்காமையும் அவா வின்மையும - அவற்றான் பொருள் கையுற்றவழி அதன் மேல் அவாவின்மையாகிய; இந்நான்கும் நன்கு உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணங்களையும் நிறைபெறவுடையான் மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு என்றவாறு.

**கதை**

மோசியார் என்பவர் சோழநாட்டிலே ஏணிச் செறி என்னும் ஊரிலே வேதியர் குலத்திலே பிறந்தார். இவரது காலம் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னராகும். பெரும் புலமையோடு அருங்குணங்கள் யாவும் இவர் அமையப் பெற்றவர். யாவர் மாட்டும் பேரன்பு மிக்கவர். உண்மையை எவர் முன்னின்றும் உறுதிபெறக் கூறும் திண்மையுடையவர். உலகியல் முழுதும் மறுவறத் தெளிந்தவர். இவரது மதித்திறத்தையும் கவிச்சிறப்பையும் அறிந்து முடியுடை மன்னர் மூவரும் இவரைத் தனித்தனி அழைத்துத் தம்பால் இருக்குமாறு அன்பு செய்து வேண்டினார். அங்ஙனம் இருந்து வருங்கால் கருவூரிலிருந்து அரசு புரிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேரமன்னனோடு அழகிய மேன்மாடத்தில் ஒரு நாள் இவன் உடனமர்ந்திருந்தான். அவ்வமையம் உறையூரிலிருந்த பெருநற்கிள்ளி என்னும் சோழமன்னனது யானை மிகுந்த மதங் கொண்டு வேல் வீரர்பலர் திரண்டு விரைந்து தடுப்பவும் அடங்காததாய் அரசனோடு கருவூரையடைந்தது. நமது கவிச்சிங்கத்தோடு மாடத்தும்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவியிருந்த சேரன் படைகளோடு பகைவன் வருகின்றான் என்று மிகவும் வெகுண்டான். அவ்வமையம் அவனைக் கையமர்த்தி மதமீறிய ஓர் யானையின் புடை பெயர்ச்சியே அன்றி இது படையெழுச்சியன்று என அறிவுறுத்தி நிலை குலைந்து வந்த சோழனை மனமுவந்து வாழ்த்தி இருவரும் மகிழ்ந்து உறவு கொள்ளுமாறு இவர் நயந்து வினை செய்தார்.

## 4. எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான் வேறாகு மாந்தர் பலர் (514)

பரிமேலழகர் உரை :- எனைவகையான் தேறியக் கண்ணும் - எல்லாவகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்த பின்னும்; வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர் - அவ்வினையின் இயல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர் என்றவாறு.

**கதை**

**கட்டியங்காரன்** என்பவன் ஏமாங்கத நாட்டு மன்னனாகிய சச்சந்தனை முதலில் அணுகிய பொழுது இவனது இயல்பினைப் பல வகையானும் ஆராய்ந்தான். பின்பு பண்புடையவனாகத் தெளிந்து இவனைத் தனக்கு அமைச்சனாக்கிக் கொண்டான். இவனும் அவன்பால் பேரன்புடையவனாய் அமைந்து வினைசெய்து வந்தான். நமித்திகன், உருத்திரதத்தன் முதலிய தன் உரிமையாளர் எவரினும் இவன்மீதே அரசன் பேரன்பு கொண்டான். மனைவியோடமர்ந்து இன்பத்திலாழ்ந்து அரசன் அந்தப்புரத்தில் தங்கிய காலத்தில் அரசை நடத்திவருமாறு இவன்பால் தருங்கால் உடனிருந்தவர் தடுத்தார். அவ்வமையம் அரசன் அவரை நோக்கி எனக்குயிரெனப்பட்டான் என்னலாற் பிறரையில்லான். முனைத்திற முருக்கிமுன்னே மொய்யமர் பலவும் வென்றான். தனக்கியான செய்வசெய்தேன் தான் செய்வசெய்க ஒன்றும் மனக்கினா வேண்டா வாழியா ஒழிக என்றான்.

இங்ஙனம் தேறிவைத்தும் பின்பு இவன் மாறுபட்டு அம்மன்னனுக்கே இன்னல் விளைத்தான். ஏனைய வகையாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறியக் கண்ணும் வினைவகையால் வேறாகும் மாந்தர் பலர் என்னும் உண்மைக்கு இவனும் ஒருவனாகி நின்றான்.

## 5. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான் சிறந்தானென் றேவற்பாற் றன்று (515)

பரிமேலழகர் உரை :-அறிந்து ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் - செய்யும் உபாயங்களை அறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களைப் பொறுத்து முடிவு செய்ய வல்லானை யல்லது; வினைதான் சிறந்தான் என்று ஏவற்பாற்றன்று - வினைதான் இவன் தன்மாட்டு அன்புடையன் என்று பிறனொருவனை ஏவும் இயல்பு உடைத்தன்று என்றவாறு.

**கதை**

அங்கதேசத்து அரசனாகிய உரோமபதன் என்பவன் கலைக்கோட்டு முனிவரைத் தன் நகர்க்கு கொண்டுவரவேண்டுமென்று விரும்பினான். அவ்வரிய காரியத்தை முடித்து வருவதற்குரிய சதுரர் யார்? என அரசன் பெரிதும் ஆராய்ந்தான். வீரவர்மன், சுகேது, சுதர்மன் முதலிய வீரர் பலர் தன்னைப் புடைசூழ்ந்திருந்தும் அவருள் ஒருவரையும் ஏவாமல் அவ்வினைத்திறத்தையே அரசன் நினைத்து நின்றான். அவ்வமையம் கமலை, சுலோசனை என்னும் மகளிர் இருவரும் அதனைச் செய்து வருவதாகச் செப்பி நின்றார். அவ்விருவருடைய செயல்களையும் இயல்களையும் அறிந்து தெளிந்து அவரையே அவ்வினைமேல் அரசன் ஏவினான். அவரால் வினை முடிவுற்றது. இவனும் மனமகிழ்வுற்றான். அறிந்து ஆற்றிச் செய்ய வல்லவரையல்லது சிறந்தான் என்று வினைதான் ஏவற்பாற்று அன்று என்பதை இவன் அன்று ஏவி உணர்த்தினான்.

ஆங்கவரம் மொழியுரைப்ப அரசன் மகிழ்ந்
தவர்க்கணிது சாதி யாய
பாங்குள மற்றவையருளிப் பணிப்பிறையைப்
பழித்துதற் பணைத்தவேய்ந்தோள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்குமிடை தடித்தமுலை இருண்டகுழல்
மருண்டவிழி இலவச் செவ்வாய்ப்
பூங்கொடியீர் ஏகுமெனத் தொழுதிறைஞ்சி
இரதமிசைப் போயினாரே

(இராமாயணம்)

இது, தான் ஏவிய வினைமேல் அவ்விருவரும் செல்லுங்கால் உரோமபதன் செய்ததைக் கூறியது. வினையாளரை இவன் தெரிந்து ஆண்ட திறம் இதனாற் தெளிய நின்றது.

## 6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ டெய்த உணர்ந்து செயல் (516)

பரிமேலழகர் உரை :- செய்வானை நாடி - முதற் கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து; காலத்தோடு எய்த உணர்ந்து செயல் - பின் அதனையும் காலத்தோடு பொருந்த அறிந்து அவனை அதன்கண் இயங்கச் செய்க என்றவாறு.

**கதை**

கர்ணனது பிறப்புரிமையை கண்ணன் உணர்த்தி ஐவரோடு வந்து அணைந்து கொள்ளுமாறு அவனைக் குழைந்து வேண்டினான். நடுவு நிலையோடு அறிவும் உடையவனாதலால் அவன் அதற்கு இசையவில்லை. கண்ணன் பிரிந்து போய்க் கருதியுழைத்தான். மார்பணியாகிய கவசமும், காதணியாகிய குண்டலமும் தெய்வ அருளால் கர்ணன் உடன்பிறந்துள்ளது. அவற்றுடன் அவன் போர்க்களம் புகுந்தால் தேவர்முதல் யாரும் அவனை வெல்ல முடியாது. பகைவர் ஏவுகின்ற கணைகள் யாவும் அவனுடலில் உறாதபடி அவை அடல்புரிந்தருளும். அவனைவிட்டு அவை பிரிந்தாலன்றி ஐவருக்கும் பயனில்லை என்று சிந்தனை செய்து கண்ணன் இந்திரனை எண்ணினான். அவனும் வந்தான். கருதியதை உணர்த்திப் பருவத்தோடு சென்று அதனை முடித்து வரும்படி பணித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவசங் கனக குண்டல மென்றிரண்டு புனையிற் கற்பாந்த
திவசம் பொரினும் கர்னனுயிர் **செகுப்பார்** மண்ணிற் சிலருண்டோ
அவசம் கிளைஞுறுறத் துணைவர் அரற்றக்களத்தில் அடுகுரக்குத்
துவசம் படைத்தோன் படும் பயந்த துணைவா இன்னே சொன்னேனே
(1)

கர்ணன் விசயன்தனைக் கொல்லிற் கடற்பார் முழுதும் கண்ணில்லா
மன்னன் புத்வன் தனக்கேயாம் ஒழிந்தோர் தாழும் மடிந்திடுவார்
முன்னஞ் சூதின் மொழிந்த பகை முடியாதிருக்கில் அவர்க்கல்ல
நின்நெஞ்சறிய யானறிய நினக்கே வசையும் நிலையாமே
(2)

என்று இசைவோடு கண்ணன் விசை முறுக்கினான். அந்தண வடிவங் கொண்டு இந்திரன் சென்று கர்ணனைக் கண்டு தந்திரமொழிகள் பல முந்துற மொழிந்தான். "உன்னிவந்தவை யாவையோ, அவற்றையுரைத்தால் யான் உவந்து தருவன்" என்று அவ்வள்ளல் மொழிந்தான். எண்ணியதை அருளல் விண்ணவர்க்கும் அரிதே நீ எங்ஙனம் தந்து விடுவாய் என்று வந்தவன் முழங்கினான். வள்ளல் நகைத்து "நீ சொல்லுக" என்றான். கவசமும் குண்டலமுமே வேண்டும் என்று சொல்லி அவன் துணிந்து முடித்து வந்தமையைக் கண்ணன் அறிந்து கழிமகிழ் கொண்டான். வினையினது நிலையையும் அதனைச் செய்பவனது இயல்பையும் மன்னர் முதலில் நாடவேண்டும் என்பதைக் கண்ணன் நாடியுணர்த்தினான். செய்வானை நாடி, வினைநாடிக் காலத்தோடு எய்தவுணர்ந்து செய்ததால் அவ்வினை இனிது முடிந்ததென்று உலகம் அன்று மிகவும் வியந்தது.

## 7. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந் ததனை அவன்கண் விடல் (517)

பரிமேலழகர் உரை :- இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்க வல்லவன் எனக் கூறுபடுத்தி ஆராய்ந்து; அதனை அவன்கண் விடல் - மூன்றுந் தம்முன் இயைந்தவழி அவ்வினையை அவன் கண்ணே விடுக என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

அங்கதன் என்பவன் வானர வீரனாகிய வாலியின் புதல்வன். செம்மையும் தூய்மையும் உடையவன். நல்ல போர்வீரன். எல்லா நலங்களிலும் அனுமானுக்கு அடுத்தபடியில் வைத்து எண்ணத்தக்கவன். "நெய்யடை நெடுவேல்தானை நீல் நிறநிருதர் என்னும் துய்யடைக்கு அனலியன்ன தோற்றத்தன் தொழிலும் தூயன்" என்று தந்தையால் இராமன் முன்னிலையில் போற்றப்பட்டவன். தந்தை இறந்த பின்பு இராமபிரானுக்குச் சேனைத்தலைவனாகி இவன் சிறந்திருந்தான். பின்பு இராமனோடு சேர்ந்து இலங்கையை அடைந்து வடதிசை வாயில் மேவிப்டையொடு நின்றான். அவ்வமையம் இராவணனுடைய மனநிலையை அறிந்து வரும்படி தூதுவனொருவனை ஏவ இராமன் விரும்பினான். அவ் அரிய வினையைச் செய்வதற்கு உரியவன் யாவன் என்று இராமன் பெரிதும் ஆராய்ந்தான். அனுமான் தகுதி உடையவன் ஆயினும் முன்னரே சென்றுள்ளானாதலால் இன்னுஞ் செலுத்தல் ஆகாது என்று விடுத்தார். அதன்பின் அவ்வினையை முடித்துவர வல்லவன் அங்கதன் ஒருவனே என்று தெளிந்தார். அவனை அழைத்து அதற்குரியவனாக்கி அன்புடன் விடுத்தார். அவனும் மகிழ்ந்து சென்று இராமன் மதித்தபடியே முடித்து வந்தான். அவனது வினைத்திட்பத்தையும், மனத்திட்பத்தையும் அனைவரும் அன்று வியந்து மகிழ்ந்தார். இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண்ணே விடுக என்ற அரிய உண்மையை இராமர் அன்று தெரிய நிறுத்தினார்.

## 8. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை அதற்குரிய னாகச் செயல் (518)

பரிமேலழகர் உரை :- வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அரசன் தன் வினை செய்தற்கு உரியனாக ஆராய்ந்து துணிந்தால் அவனை அதற்கு; உரியனாகச் செயல் - பின் அவனை அதற்கு உரியனாமாறு உயரச் செய்க என்றவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதை**

சுபன் என்பவன் பாண்டி நாட்டிலே திருச்செந்தூரிலே செங்குந்தர் மரபிலே பிறந்தவன். இவனது காலம் இற்றைக்கு ஆயிரத்துநூறு ஆண்டுகட்கு முன்னராகும். இவன் சிறந்த போர்வீரன். எண்ணியதை எண்ணியவாறே இனிது முடிக்குந் திண்ணியன். இவனது இயல்பினைக் கேள்வியுற்ற உறையூரிலிருந்த ஆதித்தன் என்னும் சோழமன்னன் தன் வினைக்குரியனாக இவனை அணைத்துக் கொண்டான். அதன்பின் வேண்டிய சிறப்புக்களைச் செய்து தன் பகைவனாகிய ஈழநாட்டரசனை வென்றுவரும்படி இவனை வியந்து விடுத்தான். இவனும் அவன் ஆக்கி வைத்த சேனைகளோடு அங்குச் சென்று அப்பகைவனை வென்று உவகையுடன் மீண்டான். வினைமுடிவை நினைந்து மன்னனும் மிக மகிழ்வு கொண்டான். வினைக்கு உரிமை நாடிய பின்றை ஒருவனை அதற்கு உரியவனாகச் செயின் அவ்வினை இனிது முடியும் என்பதை அன்று இவன் எய்த உணர்த்தினான்.

## 9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக நினைப்பானை நீங்கும் திரு (519)

பரிமேலழகர் உரை :- வினைக்கண் வினையுடையான் கேண்மை - எப்பொழுதும் தன்வினையின் கண்ணே முயலலை உடையான் அவ்வுரிமையால் தனக்குக் கேளாயொழுகுகின்ற தன்மையை; வேறாக நினைப்பானைத் திரு நீங்கும் - அது பொறாதார் சொற் கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனை விட்டு நீங்கும் என்றவாறு.

**கதை**

குபன் என்பவன் சூரியகுலத்து மன்னன். சுபன் எனவும் இவன் கூறப்பட்டான். இவன் பிரமனை நோக்கி அருந்தவம் செய்து பெருநலங்களை அடைந்தவன். அறிவிலும், ஆற்றலிலும், கொடையிலும் இவன் மிகச் சிறந்தவன். இந்திரனும் இவன்பால் பெருநண்பு கொண்டிருந்தான். சிறந்த புகழோடு இவன் உயர்ந்து வாழ்ந்து வருங்கால் ததீசி முனிவரைத் தன்னுடன் இருந்து வாழுமாறு பணிந்து வேண்டினான். அவரும் இணங்கியிருந்தார். மன்னனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மையையே அவர் மனங்கொண்டு நின்றார். அரசன் அவர் பால் பேரன்பு கொண்டிருப்பதை கண்டு சிலர் பொறாமை கொண்டார்கள். “எல்லாம் உடைய நீ ஒன்றும் இல்லாத ஒருவன்பால் இங்ஙனம் உறவு கொண்டிருக்கலாமா?” என்று மன்னன் மாறுபடுமாறு பல வஞ்சகம் புரிந்தார்கள். அது காரணமாக இவன், முனிவர் பெரியரா? மன்னன் பெரியரா? என்று ஒருநாள் அவரோடு வாதாடி நின்றான். அவர் முனிவரே பெரியார் என்றார். அதனால் இவன் மிக முனிந்து ஒரு வலிய தண்டால் அவரை மோதியடித்தான். அவர் இவனது மடமைக்கு வருந்தி இரங்கியகன்றார். எப்பொழுதும் இவனது நலத்தையே நாடியிருந்த முனிவரிடத்தும் இவன் இங்ஙனம் மாறுபட்டானே என்று அறிஞர் சிலரும் அகன்றுபோயினர் அதனால் இவனது அரச திருவும் குறைய நேர்ந்தது.

முனிவரது இனிய உரிமையை அறியாதிகழ்ந்ததால் இம் முடிவு வந்ததென்று பின் இவன் அறிந்து நொந்தான். வினைக்கண் வினையுடையான். கேண்மையை வேறாக நினைப்பானைத் திரு நீங்கும் என்பதை உலகம் இவன்பால் கண்டது.

## 10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான் கோடாமை கோடா துலகு (520)

பரிமேலழகர் உரை :- வினை செய்வான் கோடாமை உலகு கோடாது - வினை செய்வான் கோடாதொழிய உலகம் கோடாது; மன்னன் நாடோறும் நாடுக - ஆதலால் அரசன் அவன் செயலை நாடோறும் ஆராய்க என்றவாறு.

**கதை**

இக்குவாகு என்பவன் சூரியகுல முதல்வனாகிய மனுவின் பேரன், இச்சுவின் புதல்வன். இவன் பிரமனை நோக்கி அருந்தவம் செய்து பெரும் பதங்களையடைந்தவன். வாகு வலயம் என்னும் அற்புதமான தோளணியை வரபலத்தால் பெற்றவன். அதனால் இக்குவாகு என்று இவன் இசைக்கப் பெற்றான். கம்பர் இவனைக் கன்னல் தோளான் என்பர். விழுமிய உயிரை அழகிய உடல்தாங்கி நிற்றல் போல் உலகம் முழுவதையும் இவன் இனிதோம்பி நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது ஆட்சியின் மாட்சியை அமரரும் போற்றினார். இவன் அலம்புசை என்னும் அழகியை மணந்து பெரும் போகங்களை நுகர்ந்து விசாலன், விகுச்சி, நிமி முதலிய பல புதல்வர்களைப் பெற்றான். சூரியனது முன்னிலையில் உலகம் தொழிற்படுவது போல தன் அரசியல் முழுதும் இவனது மன்னிய நோக்கில் மருவி நடந்தது. சுமுகன், நாபகன், சுசீலன் முதலிய அமைச்சர் பலரும் இவனது அரச பாரத்தை உடனிருந்து ஆற்றினர். தன் காரியத் தலைவர்களை நாடோறும் இவன் நுணுகி ஆராய்ந்து வந்ததானால் அவரனைவரும் தம் கடமைகளை வழுவறச் செய்து வந்தார். அதனால் இருநில முழுவதும் இவன் ஒரு குடை நிழலில் ஒழுங்குடனமைத்து உவந்தினிதிருந்தது. வினையாளர்களைத் தெளிந்தெடுத்து வினைகளில் வைத்து அவரை அவன் ஆளுந்திறத்தை வசிட்டர் போதாயனர் முதலிய முனிவர்களும் வியந்து புகழ்ந்தனர். பரந்தாமனைத் துருவரங்கன் என்னும் பெயருடன் இந்நிலவுலகில் எழுந்தருளும்படி செய்த பெருந்தகையாளனும் இவனே. வினை செய்பவர்கோடாதிருந்தால் இவ்வுலகு கோடாது ஆதலால் அவரையே அரசன் நாடோறும் நாடிவர வேண்டும் என்னும் உண்மை இவன்பால் நாடநின்றது.

பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலயானை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்

(இராமாயணம்)

இராமனது குலமுறையைக் கோசிகர் சனகனிடம் கூறுங்கால் இக்குவாகு மன்னன் இங்ஙனம் குறிப்பிடப்பட்டுள்ளான். இதனால் இவனது மனநலமும், வினைநலமும், மதிநலமும் இனிது புலனாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ ன்பே நல்ல மொழி
ஆ ர்வமே உயர்வின் வழி
இ யல்பான நடத்தையே இன்பம்
ஈ ன்றவரை மறப்பது பெரும் துன்பம்
உ ண்மையாகப் பழகுதல் நல்ல மனிதப் பண்பு
ஊ ர்போற்ற உழைப்பை நீ நம்பு
எ ல்லோரும் வாழ வழிகாட்டு
ஏ ழைகள் உயரவும் உன் கரம் நீட்டு
ஐ க்கியமே வாழ்வியலில் முக்கியம்
ஒ ரு மனதே சந்தோசப் பாக்கியம்
ஓ டுகிற தண்ணீராய்த் தெளிர்ந்திரு
ஔ வையைப்போல் வரலாற்றில் மிளிர்ந்திரு
அஃ தே மகிழ்ந்திருங்கள்; இனிதே செய்ய முயன்றிடுங்கள்.

– அரிதாஸ் பிரியன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேமன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579